

# உயிர்மெய்



இதழ்-5,6 தை-ஆனி 2008





# 80பக்கங்களிலும்

## கட்டுரைகள்



**05 மரிய தக்வாம்** -மரியான் ஸெய்டெ-
கவிதைகளில் அவர் வெளிக் கொணர்ந்த காதல், நேசம், கோபம், துன்பம் போன்ற விடையங்கள் அவரது சொந்த வாழ்க்கையின் வாழ்வனுபவங்களாகும். அதனால் கவிதைகள் மிகவும் கடுமையானதாகவும் முடிவற்றதுமான தன்மைகளைக் கொண்டிருந்தன.



**10 பேற்றோல்ற் பிரெக்ட்**
-சந்துஸ்-
வாழ்வின் படிப்பினை என்பதைக் கற்றுக் கொள்வதன் மூலமே நாடக அரங்கு என்பது பிரயோசனப் படுகிறது.

**இலங்கை சுதந்திரதினம்** 23
-பரா குமாரசாமி-
இரத்தக்கறை படிந்த எம் கரங்களில் வாள் பிடித்த பயங்கரமான ஒரு சிங்கத்தையும் இரு துவக்குகளைத் தூக்கியபடி பயங்கரமான ஒரு புலியையும் கொண்ட கொடிகளைப் பிடித்தபடி சமாதானம் பற்றிப் பேசுவதற்காய் அலைகின்றோம்.




**கடவுளே ஏனென்னைக் கைவிட்டீர்?** 26
-ஜீவமுரளி-
"துரோகம்" இந்த வார்த்தையின்அர்த்தமதுதான் என்னவென இன்றுவரை தேடிக் கொண்டிருக்கிறேன்.





**31 பெண்கள் தினம்** -Alexandra Kollontai (1913)-
ஒரு காலத்தில் உழைக்கும் ஆண் தொழிலாளர்கள் தாங்கள் மட்டுமே முதலாளித்துவத்துக்கு எதிரான யுத்தத்தை தனித்துத் தமது தோளிலே சுமக்க வேண்டியவர்களாக இருக்கின்றனர் என்று கருதினர். அதன் அடிப்படையில் பழமைவாத உலகத்திற்கெதிரான யுத்தத்தில் தங்கள் பெண் மக்களின் பங்கேற்றலை நிராகரித்து தனித்து நின்றனர்.



**36 தமிழ்ப் பாசிசத்திலிருந்து மெல்ல விலகும் கிழக்கிலங்கை** -கற்சுறா-
அடுத்த தேர்தல்களில் உங்களை முதலமைச்சர் ஆக்குகிறோம் அன்புடையீர் நீங்கள் எல்லோரும் எம்மைக் காப்பாற்றுவீராக. ஆனால் கிழக்கு பிரிந்தது பிரிந்ததுதான்.

**அருந்ததியர் வாழ்வும் இலக்கியமும்** 44
-ஆதவன் தீட்சண்யா-
நம்மில் பலரும் தம்மை சாதிமுறைமைக்கு எதிரானவர்களாக நம்பிக் கொள்கிறோம். கருத்தியல் ரீதியாக சாதியத்தை எதிர்க்க முன்வந்திருக்கிற நாம் நடைமுறையில் - சொந்த வாழ்க்கையில்- சாதியத்தைக் கடக்கத் துணிந்திருக்கிறோமா? என்று கேள்வியெழுப்பும் நேரம் வந்துவிட்டது.



## கவிதைகள்


மரிய தக்வாம்............ பக். 08
இங்கர் ஹாகருப்........ பக். 09
உமா............................ பக். 15
சின்னக்கண்ணம்மா... பக். 16
கவிதா.......................... பக். 21
றஞ்சினி........................ பக். 22
மமதிவண்ணன்..........பக். 30
ஆதவன் தீட்சண்யா பக். 43
பூகம்பன்...................... பக். 58
நோர்வே நக்கீரா......... பக். 59


## சிறுகதைகள்


நிஜம்-கவிதா: 14
அதுவேறு இதுவேறு-உமா: 17
கனவுக்கும்..... -ஜீவமுரளி: 34
கடைசிப்புத்தகம்-கலாமோகன்: 40
மின்னல்கள்கூத்தாடும்-றஞ்சினி:75


## நினைவில் நிறுத்தி

**52**

**எம்.ஆர்.இராதா** -ஓவியா-
எனது நாடகம் கேட்டு மனம் புண்படுகிறது என்பவர்கள் எனது நாடகத்திற்கு வரவேண்டிய தேவையில்லை. அவர்கள் தருகிற காசும் எனக்குத் தேவையில்லை



**வீராங்கனை குஞ்சிதம்** -அநாத்மா-
புலியும் ஆட்டுக்குட்டியும் ஒரு துறையில் தண்ணீர் குடிக்கும் சுயராஜயம் எங்களுக்குத் தேவையில்லை. அது சர்க்கஸில் கூட நடக்கிறது. பறையனும் பார்ப்பானும் ஒரு துறையில் தண்ணீர் குடிக்கக்கூடிய அரசாங்கமே எங்களுக்குத் தேவை. 65





**புதுஉலகம் - பசுபதி** 71
-கரவை தாசன்-
வர்க்க பேதமற்ற புதிய உலகை தோற்றுவிக்க வேண்டும் என்ற இலட்சிய வேட்கையினால் உந்தப்பட்டு மக்கள்இலக்கியம் படைத்த கவிஞன்.

## விமர்சனம், கண்டனம்

**60**

**உத்தப்புரம் இரண்டாம் பாகம்...** -ஜீவமுரளி-
சூடு. நெஞ்சைச் சுடுகிறதாம். கறுப்பென்று வெள்ளையர் நையாண்டி பண்ணும்போது நெஞ்சைச் சுடுகிறதாம். பறை சுடுகிறதாம். பறையும் சுடுகிறதாம்.
பறை இவர்களது எதைப் பிடித்துச் சுட்டது...? -தமயந்தி- 63



**மகேஸ்வரி வேல்-ஆயுதம்** 69
அவதூறுகளை செய்கின்ற மாற்றுக்கருத்து தோழர்களுக்கும், அவதூறுகளையும் அவமானங்களையும் எதிர்கொள்கின்ற மாற்றுக்கருத்து தோழர்களுக்கும், அவமானங்களைப் படுகின்ற தோழர்களுக்கும் இதை சமர்ப்பணம் செய்கிறேன். -ஜீவமுரளி-



உயிர்மெய்
பெண்கள் காலாண்டிதழ்

இதழ் -5,6
தை - ஆனி 2008

தொகுப்பாசிரியர்கள்:
பானுபாரதி, தமயந்தி

அட்டைப்படங்கள்: தமயந்தி

எம்.ஆர்.ராதா படங்கள் உதவி:
விஜயன்-தமிழ்நாடு

வடிவமைப்பு:
தமயந்தி

வருடசந்தா
நோர்வே, 200குரோணர்கள்
ஏனைய நாடுகள், 20யூரோ

தொடர்புகளுக்கு:
UYIRMEI
Kaptein Linges vei 9a
6006 Aalesund
Norway

E-Mail:
editor.uyirmei@hotmail.com

வங்கி கணக்கிலக்கம்:
0539 4365272 Postbank

இந்தியாவில்
உயிர்மெய் விநியோகம்
மற்றும் தொடர்புகளுக்கு:

கருப்புப் பிரதிகள்
NEELAKANDAN,
B-74, P.M DARGA,
LLOYDS ROAD,
CHENNAI - 600 005

Tp: 944 42 72 500

E.post:
karuppu2004@rediffmail.com

எமது தோழமைக்குரிய வாசகர்களுக்கும், படைப்பாளிகளுக்கும் வணக்கம்!

இந்த இதழுக்கான தொகுப்பாளர் கருத்தினை மிகநீண்டதாக (4பக்கங்களில்) எழுதி இதழ் வடிவமைப்பும் முடித்தபின் பல தடவைகள் படித்துப் பார்த்தோம். ஒரு சிங்களக் கவிதைதான் இருவருக்குமே நினைவுக்கு வந்தது. எமது 4பக்கக் கருத்தினை மிகச் சுருக்கமாக அந்தக் கவிதை வெளிப்படுத்தி நிற்கிறது. எனவே எமது நான்கு பக்கத்துக்குப் பதிலாக இந்த நேரத்தில் நமது தேசத்து நிலைமைக்கும் பொருந்துவதால் அந்த சிங்களக் கவிதை வரிகளை மட்டும் உங்களோடு பகிர்ந்து கொள்கின்றோம்.

*"அமெரிக்க தேசமே*
*நீ எதைச் சாப்பிடுகின்றாய்?*
*எனது கையில் அகப்படும்*
*எல்லாவற்றையுமே நான் சாப்பிடுகிறேன்.*

*ரஷ்யதேசமே*
*நீ எதைச் சாப்பிடுகின்றாய்?*
*நான் உற்பத்தி செய்யும்*
*எல்லாவற்றையுமே சாப்பிடுகிறேன்.*

*இலங்கை தேசமே*
*நீ எதைச் சாப்பிடுகின்றாய்?*
*கண்களை மூடிக்கொண்டு*
*எனது எதிர்காலத்தையே*
*நான் சாப்பிட்டுக்கொண்டிருக்கின்றேன்."*

தோழமையுடன்
-பானுபாரதி, தமயந்தி-

# மரிய தக்வாம் Marie Takvam

கடந்த ஜனவரி 28இல் நோர்வேயின் பிரபல கவிஞையான மரிய தக்வாம் தனது 82வது வயதில் ஒஸ்லோவில் காலமானார். 1952இல் இவரது முதலாவது கவிதைத் தொகுப்பான "ஏழு நட்சத்திரங்களின் கீழ் திருமுழுக்கு" என்ற கவிதைத் தொகுதி வெளி வந்தது. 1977இல் இரண்டு நோர்வேஜியத் திரைப்படங்களில் நடித்திருந்தார். தனது கவிதைகளில் காதல், மனிதருக்கும் இயற்கைக்கும் இடையிலான தொடர்புகள், ஆண் பெண் உறவுமுறை, வாழ்க்கையோட்டம், மனிதப் பருவங்கள், சமூகத்தைப் பற்றிய விமர்சனங்கள், முதுமை போன்ற விடையங்களைப் பாடுபொருளாகக் கொண்டிருந்தார்.

1952-1977 காலப்பகுதிகளுக்குள் பதின்மூன்று கவிதைத் தொகுதிகளையும், இரண்டு நாவல்களையும், ஒரு சிறுவர் இலக்கிய நூலையும், சில நாடகப் பிரதிகளையும் படைத்துள்ளார். அந்தக் காலப் பகுதியில் நோர்வேஜிய சமூகத்திடமிருந்த பெண்ணொடுக்குமுறைத் தனங்களைத் தனது படைப்புக்களில் வெளிக் கொணர்ந்தவர். பொதுவாக மரியவின் அநேகமான கவிதைகள் வாழ்வுக்கும் மரணத்துக்குமான போராட்டத்தை வெளிப்படுத்துகின்றன.



Forfattaren Marie Takvam sjekkar det vakre rosebedet utanfor Viking Fjord Hotell i Ørsta. Ho var Festspeldiktar under Dei Nynorske Festspela i 2003, og vart her intervjua av Dagbladet sin kulturjournalist Unn Conradi Andersen. Ho har skrive mykje om Marie Takvam. Også sonen til Marie Takvam, politisk kommentator Magnus Takvam i NRK var med mor si på festspelbesøket i Ørsta. Foto: Knut Arne Aarset



Mariann Schjeide படம். தமயந்தி

மரிய தக்வாமின் அதிதீவிர வாசகியும் பெண்நிலை வாதியுமான மரியான் ஸெய்டெ அவர்கள் மரிய தக்வாமின் இறப்பின் பின்னர் அவரது நினைவாக உயிர்மெய்க்கு எழுதிய நினைவுக் குறிப்பை அடுத்த பக்கங்களில் தருகிறோம். 43 வயதான மரியான் ஸெய்டெ அவர்கள் ஓலசுண்ட் நகரத்தின் மக்கள் பொது நூலகத்தின் பொறுப்பதிகாரியாகப் பணி புரிகின்றார்.

-தோழமையுடன் பானுபாரதி-

# Marie Takvam



Av: Mariann Schjeide

தமிழுக்கு: பானுபாரதி

நோர்வேயின் இசைப்பாடலாசிரியர்களில் ஒருவரும், கவிஞருமான மரிய தக்வாம் தை மாத இறுதியில் தனது 82வது வயதில் காலமானார். நோர்வேயின் கிழக்குப் பகுதியிலுள்ள குன்றுகளடர்ந்த குடாக்கடலும் மலைகளும் சூழ்ந்த ஒஸ்ராவின் இயற்கை வனப்பு இளவயதிலேயே அவரை ஒரு கவிஞராக ஆக்கிவிட்டிருந்தது. மிகுந்த வாசிப்பும் தேடலும் கொண்ட குடும்பப் பின்னணியிலிருந்து வந்த அவரை தாயாரே எழுத்துலகில் காலடி பதிக்க ஊக்குவித்தவர். தனது கிராமத்திலே கல்விப்பொதுத் தகமை பரீட்சையில் முதன்முதலில் தேர்ச்சி பெற்றவர்.

சிறிது காலங்களின் பின்னர் ஒஸ்லோவில் உளவியற் கல்வியை மேற்கொண்டார். திருமணமாகி இரண்டு குழந்தைகளுக்கும் தாயாகியபின் கல்வியைத் தொடரக்கூடிய சாதகமான சூழல் குடும்பத்தில் இருக்கவில்லை. 1952இல் "ஏழு நட்சத்திரங்களின்கீழ் திருமுழுக்கு" என்னும் தனது முதலாவது கவிதைத் தொகுதியை வெளியிட்டார். எனினும் இந்த வேளையில் கவிஞர், இளமையானவர், அழகானவர் என்கின்ற விடையமே பலரையும் கவர்ந்திருந்தது. ஆனால் இந்த இளம் கவிஞைக்கோ வெளித்தோற்றம் பற்றிய மற்றவர்களின் மதிப்பீட்டைவிட வேறு விடையங்களே முக்கியமானதாக இருந்தது.

அவரது எழுத்துக்கள் பலதரப்பட்ட விடையங்களை மையப்பொருளாகக் கொண்டிருந்தது. அவரது படைப்புகளுக்குள்ளே பிரசித்தி பெற்றவை சிறிது காலமே தோன்றி மறைகிற நிரந்தரமற்ற வாழ்வைப் பற்றிய எழுத்துக்கள்தாம். இவர் தனது நாற்பதாவது வயதை எட்டுவதற்கு முன்னரே வயோதிபத்தை உணரத் தொடங்கி விட்டார் எனலாம். குடும்ப சொந்த பந்தங்களுக்கிடையிலான உறவுமுறை குறித்து மிக அழகாகவும் மிகப் பெரிய புரிதலுடனும் எழுதியுள்ளார். குழந்தைகள் பெற்றெடுப்பது பற்றியும், ஒரு தாயாக இருப்பது பற்றியும் அருமையான கவிதைகளைப் படைத்திருக்கும் மரிய தக்வாம் தனது காலத்தைய பெற்றோர்களுக்கு பிள்ளையாக இருப்பது குறித்தும் எழுதியுள்ளார். தனது மகள் பிறந்த பின்னாக கவிதையொன்றில் இவ்வாறு எழுதுகின்றார்

*எங்களது*
*நேசமிகு பூமித்தாயின் மடியில்*
*தவழ்கிறாய்*
*நீ*
*எங்களது மகளென்று*
*யார் நம்பக்கூடும்*
*உனது கண்கள்*
*வடதுருவத்து நட்சத்திரங்களைப் போன்று*
*ஒளிர்கின்றது*
*கடலினுள் நாங்கள் கொட்டிய*
*எண்ணங்களைப் போன்று*
*உனது பாதங்கள் விரைகின்றன*

கவிதைகளில் அவர் வெளிக் கொணர்ந்த காதல், நேசம், கோபம், துன்பம் போன்ற விடையங்கள் அவரது சொந்த வாழ்க்கையின் வாழ்வனுபவங்களாகும்.

அதனால் கவிதைகள் மிகவும் கடுமையானதாகவும் முடிவற்றதுமான தன்மைகளைக் கொண்டிருந்தன. பத்திரிகைகளுடனான நேர்காணல்களின்போது தனது சொந்த வாழ்க்கை பற்றியதான அவரது வெளிப்படையான பேச்சும், தனது சொந்த வாழ்வைப் போலவே கவிதைகளிலும் கொண்டிருந்த வெளிப்படைத் தன்மையும் பலருக்கு இவர்மீதான அதிருப்தியை ஏற்படுத்தியது. இதனாலேயே பலவிதமான கடுமையான விமர்சனத்திற்கு ஆளாகினார். பின்நாட்களில் அவருக்கு உளவியல் ரீதியான பிரச்சனைகள் ஏற்படுவதற்கும் இவை காரணமாயிற்றெனலாம்.

அவர் எழுதிய தாயின் குரல் என்ற கவிதை என்னை மிகவும் பாதித்த கவிதையாகும். இந்தக் கவிதை நான் வேலை செய்யத் தொடங்கிய நாளிலிருந்து எனது அலுவலகத்தின் சுவரில் எனதிருக்கைக்கு முன்பாக என்னோடு பேசிக்கொண்டே இருக்கின்றது. நான் பத்தொன்பது வயதாக இருக்கும்போது எனது தாயாரை இழந்து விட்டேன். எனக்கும் கவிஞை மரிய தக்வாமுக்கும் இடையிலான புரிதல் எமது அன்னையரைப் பற்றிய ஏக்கத்தின் பாற்பட்டதென்றே நான் கருதுகின்றேன்.

..................................

*... காற்றினூடு*
*உனது குரலைக் கேட்கின்றேன்*
*சூரியனது*
*ஒளிக் கிரணங்களிலும்*
*பறவைகளின்*
*பாடும் ஒலியிலும்*
*உனது குரலை நான் உணருகின்றேன்*
*எனது*
*நாடித் துடிப்பினூடு*
*என்னோடு நீ வாழ்கின்றாய்...*
*...*

நான் நினைக்கின்றேன் ஒரு தாய்க்கும் மகளுக்குமான உறவின் ஆழம் உலகம் முழுமைக்கும் எல்லாக் காலத்திலும் ஒன்றாகவே இருக்க முடியும். தனது வாழ்நாளின் இறுதிக் காலங்களை உளவியல் பிரச்சனைகள் கொண்டோருக்கான முதியோர் இல்லத்தில் கழித்தார். முதுமை காரணமாக அவரது ஞாபக சக்திகள் பாதிக்கப் பட்டிருந்தாலும் அவரது குழந்தைப் பருவத்து நினைவுகள் அவருக்குள் ஆழமாக இருந்ததென்றே கூறவேண்டும். அவரது படுக்கைக்கு மேலாக அவரது கிராமத்துப் படமொன்று தொங்க விடப் பட்டிருந்தது.

அவரது குழந்தைப் பருவமும் மலைகளடர்ந்த அவரது கிராமத்தின் அழகும் அவரது நினைவுகளில் ஆழமாகப் பதிந்திருந்தது. குழந்தைப் பருவத்து நினைவுகள் பற்றிய கவிதையொன்றில் இப்படி எழுதுகின்றார்

.......................

*........அவ்வப்போது எழுகின்ற*
*எனது குழந்தைப் பருவத்து நினைவுகள்*
*உலகத்துக்கு தடை விதிக்கப்பட்ட*
*மலையுச்சியை*
*தொடுதல் போன்றுள்ளது*
*மலையடிவாரத்தில் ஏற்படுகின்ற*
*பனிச்சரிவு*
*வழியை மறைத்து நிற்கின்றது*
*சாலைப்பற்றி நாம் தெரிந்திருந்தோம்*
*நான் நினைத்திருந்தேன்*
*மலையுச்சி நட்சத்திரங்களைத் தொட்டுவிட்டதாக.*
*நுரை பொங்கும் ஆறு*
*பச்சைப் பள்ளத்தாக்குகளில் வீழ்கின்றது*
*சூரிய ஒளி*
*பள்ளத்தாக்கில் பட்டுத் தெறிக்கின்றது*
*பூக்கள் என்னுடன்*
*நீர் அருந்துகின்றன.*

நான் மேலே குறிப்பிட்டது போல மரியவினுடைய நேர்மை பல சந்தர்ப்பங்களில் அவருக்கு பாதகமான சூழலையே தோற்றுவித்தது. அதனால்தானோ என்னவோ கடந்த சில வருடங்களாகத்தான் அவரது பாடல்கள் ஒலிவடிவில் வெளிக்கொணரப் படுகின்றது. ஒரு குறிப்பிட்ட கால வரையான அவரது விட்டேற்றியான வாழ்வு பலருக்குக் கசப்பானதாகவும் ஏற்றுக்கொள்ள முடியாததாகவும் இருக்கின்றது. ஆனால் கவிஞை மரிய தக்வாமுடைய கடந்த காலம் சமூக ஒழுங்குகள் சட்ட திட்டங்களுக்குட்பட்டு ஒரு சாதாரண பிரஜையினது வாழ்வாகவே இருந்தது. தன்னைப் பற்றிப் பிறர் கொண்டுள்ள அபிப்பிராயம் பற்றி அவர் கவலைப்படவேயில்லை. அதை அவர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்

"நான் கணத்தில் வாழ்ந்தேன். என் கைக்கெட்டிய எல்லாவற்றையும் நான் என் வசப்படுத்திக் கொண்டேன். எல்லோராலும் இதை சாத்தியமாக்கக் கூடுமென்று நான் கருதவில்லை."




மரிய தக்வாம் மரணிப்பதற்கு சிறிது காலத்தின் முன்னால் வெளியிடப்பட்ட அவரின் பாடல்களின் தொகுப்பு. >>EG VIL MØTE DEG<<

# மீண்டுமொரு முறை

மரிய தக்வாம்
தமிழில்: பானுபாரதி

மீண்டுமொரு முறை
ஒரு மனிதன்
எனக்குள் வந்தான்
எனது இரத்த நாளங்களுள்
இதழ்களின் வழியே
அணுசக்தியின் தெறிப்பாய்.

எனது கைகளும்
எனது விரல்களும்
இனி என்னுடையவையல்ல
அவைகள்
அரூபமான நூலிழையால்
எமக்கிடையில்
ஆளுகை செலுத்தப்பட்டன.

என்னுடைய பாதங்கள்
என் சிந்தனையின் வழியே
போகவில்லை.
எனது சிகையும்கூட
உனது விருப்பப்படியே கூட்டி
முடியப்பட்டுள்ளது.

ஒருபோதும், ஒருபோதும்
என்னால் என்னை
ஆளுகை செய்ய முடியவில்லை

இதம் வேண்டி கரங்களைப் பற்ற
இன்னொரு முறை
நான் முனையும் போதெல்லாம்
மீண்டும் மீண்டும்
சிறைப்படுத்தப்படுகின்றேன்.

நீ என்னருகில்
இல்லாத கணங்களிலும்கூட
எனது மூளைக்குள் குடிகொண்டு
உயிர்க்கலங்களைச் சிதைக்கின்றாய்,
உனது நாடகமேடையில்
நானொரு
பொம்மை மாத்திரமே.

(22வது உயிர்நிழலில் பிரசுரமான கவிதையிது)

# அருகருகாக

இன்று
விசாரமற்ற ஒரு நாள்
அச்சமும் நம்பிக்கையும் நிறைந்திருந்தது.
நான் எப்போதும் நானாகவே இருக்கிறேன்
நீ
எப்போதும் நீயாகவே இருக்கிறாய்.

சந்தடிகள் நிறைந்த தெருவில்
அருகருகாக
ஒருவரையொருவர் நோக்கி
கைகளை நீட்டிக்கொள்வோம்.
தழுவிக்கொள்ளாமலே
நேசிப்போம் வெறுப்போம்
அருகருகாக
ஒருவரையொருவர் அறிந்துகொள்ளாமலே
கனவுகளால் கட்டப்பட்ட
வீடுகளின் நிழல்களில்
அலைந்து திரியும்
தனிமைப்பட்டுப்போன
குழந்தைகள் போன்று.

அதிசயமிக்க குழந்தைகள்.

வா உனது கரங்களை
இன்னொருமுறை நீட்டு
எப்போதோ
மற்றவர்கள் தெரிந்து கொண்டதை
இனியேனும்
நாங்கள் தெரிந்து கொள்வதாய்
பாவனை செய்

ஆனால்,
எப்போதும் நாங்கள்
அலட்டிக்கொண்டதே இல்லை
ஏனெனில்
நாங்கள் எப்போதாவதுதான்
ஒருவரை ஒருவர் நேசித்தோம்.



# இங்கர் ஹாகறுப் கவிதைகள்

-தமிழில் பானுபாரதி-

## என்னை இப்படித்தான் உனக்கு வேண்டும்

(1945)

என்னை
இப்படித்தான் உனக்கு வேண்டும்.
களைத்துப்போன
உனது மூளை இளைப்பாற
ஒரு இரவில்
களியாட்டத்தில்
மதுவோடும், புகை வயைங்களோடும்
நீ சிரிப்பதற்கான
வேடிக்கைப் பொருளாய் மட்டும்
நான் உனக்கு வேண்டும்.

ஆனால்
எனது இதயம்
வேறொரு மொழியைக் கொண்டுள்ளது.
எவரும் அறியாவண்ணம்
எனக்குள்ளே எரியூட்டப்பட்டுள்ளது.
காதலின் நுகத்தடியில்
பேசாமடந்தைகளாய்
ஆயிரமாயிரம் பெண்கள் மண்டியிடப்பட்டுள்ளனர்.

அறிந்து கொள்!
உனது கரங்களில்
மிக எளிதாக
உல்லாசமான
அற்பப் பொருளாய்
நான் இருப்பதை.
ஏனென்றால்
என்னை
இப்படித்தான் உனக்கு வேண்டும்.

## நான் தேடினேன்

(1955)

நான் நிஜத்தைத் தேடினேன்.
மனிதர்களுக்கிடையிலும்,
பூக்கள், மரங்கள், ஆகாயம், விண்மீன்கள்,
மேகக்கூட்டங்களிடையிலும்
நான் உண்மையைத் தேடினேன்.
ஆனால்,
அனைத்துக் கணங்களிலும்
ஒரே சுழலுக்குள்தான்
எனது பாதங்களும் சுற்றிச் சென்றன.

எப்போதும்
எனக்குள்ளே மட்டும்
எனக்கே எதிரான
மெல்லிய நூலிழை போன்று
தடுமாறுகின்ற எனது சித்தம்.
உண்மையான
எனது வாழ்வு
என்னை விட்டுத் தொலைவில்.
எனது வாழ்வு
இப்படித்தான் உறைந்து கிடந்தது.


ஒரு சாளரம் அடைக்கப்பட்டு விட்டது.
ஒரு கதவு மூடப்பட்டு விட்டது
நான் உள்ளே அடைக்கப்பட்டேன்
வெளி உலகம் எனக்கு தனிமைப்படுத்தப்பட்டது
இது எப்பொழுது நடந்தது?
அல்லது
நானாகவேதான் அடைபட்டுக் கொண்டேனா?

ஆனால்,
நட்சத்திரங்கள் ஒளிர்கின்ற
முக்கியமானதொரு இரவில்
எனது பாதையிலும் ஒளி வீசும்
கதவுகள் திறக்கும்
அப்போது
நான் விடுதலை பெறுவேன்.

பெப்ருவரி 10 :

Bertrolt Brecht 1898- 1956

# பெற்றோல்ற் பிறெக்ற் நினைவுகளோடு



## அவரது அரங்கு பற்றிய சில குறிப்புகள்.


- சந்துஸ் -

இலண்டன்

பிரெக்ற் இருபதாம் நூற்றாண்டின் மிகவும் பிரபல்யம் வாய்ந்த நாடகாசிரியராக இருந்தார். 1933-இல் நாசிகள் ஜெர்மனியில் அதிகாரத்தைதக் கைப்பற்றியதும் தன்னுடைய மனைவியுடன் டென்மார்க்கிற்குப் புலம் பெயர்ந்தார். அதன் பின்பு அமெரிக்காவிற்கும் அங்கு ஏற்பட்ட நெருக்குவாரங்களினால் அங்கிருந்து சுவிஸ்லாந்திற்கும் புலம் பெயர்ந்தார். கிழக்கு ஜெர்மனி அவரை ஆரம்பத்தில் நல்வரவு கூறி வரவேற்றது. யூன் 17, 1953-இல் கிழக்கு ஜேர்மனியில் இடம்பெற்ற அதிகாரத்திற்கெதிரான எழுச்சிகளின் போது ஒன்றுக்கொன்று முரண்பட்ட, அரசிற்கு விசுவாசமான நிலைப்பாட்டை அவர் கொண்டிருந்தபோதிலும் 1950களில் அவரது நாடகங்களிற் சில அரசினால் தடை செய்யப்பட்டிருந்தன.

கலையானது ஆதிக்க சக்திகளின் கைகளில் தவழ்வதில் பெருமை கொண்டிருந்த நெருக்கடிகளின் காலகட்டத்தில் அச்சம் தவிர்த்து அடக்கப்பட்டவர்களாகவும் உழைக்கும் வர்க்கத்தினருக்காகவும் பிரெக்ட் எழுதினான். உலகை அடக்கப்பட்டவர்கள் புரிந்து கொள்ளவும் அவர்களுடையதாய் அவர்கள் மாற்றிடும் வகையில் எழுத்துக்கள் அமைய வேண்டுமென அவன் விரும்பினான். அவன் எழுதிய காலகட்டமானது அப்படி எழுதுவதென்பது அபாயகரமானதாக இருந்த நாசிகளின் ஆட்சி நடைபெற்றுக்கொண்டிருந்த காலம். பிரெக்டின் பல புத்தகங்கள் தடை செய்யப்பட்டன. ஜேர்மனியை விட்டு வெளியேறி அகதியாக நாடு நாடாக குடும்பத்துடன் அலைய நேர்ந்தது. நாசிகளைப் பற்றியும் அவர்கள் விளைவிக்கவிருந்த அனர்த்தங்கள் பற்றியும் எழுதுவது மட்டும் தொடர்ந்து கொண்டிருந்தது. நாசிகளின் வீழ்ச்சிக்குப் பின்னர் கிழக்கு ஜேர்மனியில் குடியிருக்க வந்த பிரெக்ட் அங்கு இருந்த குழுவினருடன் சேர்ந்து "பேர்லினர் என்சம்பில்" என்ற நாடகக் குழுவைத் துவங்கினார். பலதரப்பட்டவர்களுடனும், நடிகர்களுடனும் உழைப்பவர்களுடனும், மாணவர்களுடனும் சேர்ந்து ஏராளமான நாடகங்கள் பிரெக்டினால் எழுதவும் இயக்கவும் பட்டன. இவற்றில் பல பரிசோதனை முயற்சிகளும் அடங்கும். எழுத்தும் கவிதையும், அவர் 1956இல் இறக்கும் வரையும் தொடர்ந்தது.

காவியபாணி நாடக அரங்கில் (எப்பிக் தியேட்டர்) பிரெக்ட் முன்னோடியாக சில பரிசோதனைகளை நிகழ்த்தினார். நாடகப் பாத்திரங்களில் உணர்வுரீதியாக ஒன்றி தம்மை அவர்களுடன் இணைத்து உணரவைக்கும் நோக்குடன் உருவாக்கப்படும் பிரதிக்கு எதிரான ஒரு பிரதியை உருவாக்குவது பிரெக்டின் எண்ணமாக இருந்தது. இது பார்வையாளரை உறங்குநிலையில் ஜடங்களாக வைத்திருக்கவே உதவுகிறது என்பது அவரது கருத்து.

வாழ்வின் படிப்பினை என்பதைக் கற்றுக்கொள்வதன் மூலமே நாடக அரங்கு என்பது பிரயோசனப் படுகிறது. அரங்குகளில் உழைப்பவர்களில் அவர்களில் அகப்பட்டவர்களின் பாதையில் யார் நிற்கிறார்கள் என்பதை சில வேளைகளில் இனங்கண்டு கொள்ள முடியும். பிரெக்ட் உடைய பாணியைப் பொறுத்தளவில் பார்வையாளர்கள் நாடகத்தின் பாத்திரங்களிலிருந்து



பேற்றோல்ற் பிரெக்டின் திருவாளர் புன்டிலாவும் அவரது சேவகன் மாட்டியும் (Herr Puntila and his Man Matti) என்ற நாடகம் 1949 இல் பெர்லினர் என்செம்பெல் நாடகக் குழவினரால்( Berliner Ensemble) முதன் முறையாக மேடையேற்றப்பட்ட போது எடுக்கப்பட்டது. இந்நாடகக் குழு 1949 இல் ஹெலென வைகல் ( Helene Weigel), பேற்றோல்ற் பிரெக்ற் ( Bertolt Brecht) ஆகியோரால் உருவாக்கப்பட்டது. படம்: Willi Saeger

தொடர்பை ஒரேயடியாக முறிக்கவும் கூடாது, உணர்வுரீதியான பிணைப்பிற்கிடையிலான ஒரு இடைவெளி பேணப்பட வேண்டும். அதாவது அந்தப் பாத்திரங்களை விளங்கிக் கொள்வதன் மூலம் அந்தப் பாத்திரங்கள் பிரதிநிதித்துவப் படுத்தும் சமூக பாத்திரத்தை ஒரு விமர்சனக் கண்ணுடன் பார்ப்பதாகும். ஒவ்வொரு பார்வையாளரும் தனக்கான ஒரு விமர்சனப் பார்வையை வளர்த்துக் கொள்ளவும் இதனால் முடிகிறது. பிரெக்டின் இதன் அணுகுமுறையைச் சுருங்கச் சொல்லின், மேடையில் ஒரு பாத்திரத்தைக் காண்கையில் அப்பாத்திரத்துடன் நாம் உணர்வு ரீதியில் ஒன்றிப் போவதைத் தவிர்க்கும் முகமாக பாத்திரங்கள், அணுகுமுறை, உருவம் என்பன அமைவதன் விளைவாக பார்ரவயாளர் அந்தப் பாத்திரத்தை அதன் வெளிப்பாடுகள் மூலமாக அது சமூகத்தில் உள்ள ஏதோ ஒன்றைச் சொல்வதாக இனங்காண




முடிகிறது. இங்கு ஒன்றிப்போதல் என்பது ``அன்னியமாதல்" உத்தியால் தவிர்க்கப் படுவதால் பார்வையாளர்கள் சமூகத்தில் தனது நிலையையும் விமர்சனப் பார்வையுடன் இனங் கண்டு கொள்வது சாத்தியமாகின்றது. இந்த உத்தியைப் பொறுத்தளவில் பிரெக்ட் அன்றாட வாழ்வினின்று அந்நியப்பட்ட பாத்திரப் படைப்புக்களை மேடையில் உலாவவிட்டார்.

பிரபல மேற்கத்திய அரங்கு யதார்த்தமான வாழ்க்கையின் பரிமாணத்தை மேடையில் காட்டுவதில் முனைப்புக்காட்டியது. மேடையமைப்பும் நடிப்பும் உண்மையான வாழ்வைச் சித்தரிக்க முயன்றன. பார்வையாளர் தாம் வாழும் வீட்டின் இன்னுமொரு அறையைப் பார்ப்பது பேன்றதோர் பிரமையில் இருத்தி வைக்கப் பட்டனர். வளர்ச்சியடைந்து கொண்டிருந்த நாடகத் தொழில் நுட்பங்கள் இதைத் தத்துரூபமாகச் சித்தரிக்க பெரிதும் உதவின. இதனால் இன்னுமொரு அறை பற்றிய பிரமை மேலும் மேலும் வளர்ந்தது. எமிலி சோலா போன்ற யதார்த்தவாதிகளின் அரங்குகளில் இது மிகத் தீவிரமாகக் காட்சிப் படுத்தப் பட்டது. உதாரணமாக ஒரு சமையலறைக் காட்சி என்று வைத்துக் கொள்வோம் இதற்காக ஒரு சமையலறை அப்படியே நிர்மாணிக்கப்பட்டு உண்மையான இறைச்சித் துண்டுகள் தொங்கிக் கொண்டிருக்க நிசமாக ஈக்கள் மொய்ப்பது என சமையலறை காண்பிக்கப்படும். இப்படிக் காண்பிக்கப் படுவதை பார்வையாளர்கள் இதுவே யதார்த்தமென ஒன்றிப்போய் விமர்சனக் கருத்தாக்கத்தைத் தமக்குள் வளர்த்துக் கொள்ளாமல் இருந்து விடுகின்றனர். பிரெக்ட் சீன, யப்பானிய மற்றும் இந்திய அரங்குகளை முன்மாதிரியாகக் கொண்டதுடன் அவற்றில் பார்வையாளரை எப்போதும் தாம் பார்த்துக் கொண்டிருப்பது யதார்த்தம் அல்ல என்பதை மறக்காமல் இருக்கச் செய்து கொண்டிருக்கும் அம்சங்கள் இருப்பதையும் அதே சமயம் ஏதோ ஒன்றைக் குறிப்பாக உணர வைப்பதையும் விதைந்துரைத்தார். அவரும் தன் நாடகங்களில் முகப்போலிகளை பயன் படுத்தினார். வெள்ளைப் பூச்சுக்களை நடிகர்களின் முகங்களில் பூசச் செய்தார். யதார்த்தத்தின் பிரமைகள் உடைபடுமாறு தனது பாணியை அவர் அமைத்திருந்தார். அவரது அரங்கின் நடிகர்கள் அரங்கின் பாத்திரங்களின் உடல்களுக்குள் புகுந்து கரைந்து விடாமல் ஆனால் அந்தப் பாத்திரத்தைப் புரிந்து கொள்ளவும், பார்வையாளருக்கு அந்தப் பாத்திரம் எத்தகையது என்பதையும், சமூகச் சூழ்நிலையானது அப்பாத்திரத்தை எப்படி உருவாக்கியது என்பதை சொல்லவேண்டும் என்பதிலும் அவரது அக்கறை இருந்தது.

யதார்த்தவாதிகளின் மிகைப்படுத்தல்களின் பிரதிபலிப்பை எல்லா வகையிலும் நிராகரித்த போதிலும் பிரெக்டின் அரங்குகள் சமூக நிலமைகளே உலகை நிர்ணயிக்கின்றன, உருவமைக்கின்றன என்று காண்பிப்பதனால் யதார்த்தமானவை. இன்னும் சொன்னால் சமூக உறுப்பினர்கள் உலகால் மாற்றப் படுவதையும், சமூக உறுப்பினர்களே உலகை மாற்றுவதையும் செய்தியாக அவரது நாடகங்கள் சொல்லிச் சென்றன.

இங்கு குறிப்பிட வேண்டிய இன்னொரு விடையம், பிரெக்ட் யதார்த்த நாடகங்களையும் அவற்றின் பார்வையாளர்கள் பாத்திரங்களுடன் ஒன்றிச் சென்று



பேற்றோல்ற் பிரக்டின் ஸெற்சுவானின் நல்ல பெண் (*The Good Woman of Setzuan*) நாடகமானது அதில் ஷென் டே (*Shen Te*) யாக நடித்த தான்யா வில்கிங்ஸ் (*Tanya Wilkins*), யங் சு வாக நடித்த பல்கலைக்கழக மாணவர் சாம் கூஸிக் (*Sam Guzik*) அகியோரை இணைத்தது. ஒரு புயல் மழைக்காலமொன்றில் தன்னுடைய கடனை அடைக்கும் நாதியற்று நிற்கும் ஷென் டே யிற்கு ஆறுதல் சொல்கிறான் யங் சு.

விமர்சனமற்றிருந்ததையும் அவர் நிராகரித்த போதிலும் அவரது நாடகங்களில்கூட உதாரணமாக ``மதர் கறேஜ்" (துணிவுள்ள தாய்) நாடகத்தில் உள்ள துயரில் கரைந்தும் உணர்வு ரீதியில் ஒன்றியும்போன பார்வையாளரே அதிகம். யதார்த்த சூழலில் எல்லோரும் பங்காளிகளாக இருப்பதனாலோ என்னவோ இது நிகழ்ந்தது. பிரெக்ட் இதைத் தடுக்க முடியவில்லை.

இன்றைய இலங்கை இந்திய தமிழ்ச் சூழலில் (புகலிடங்கள் உள்ளிட) பொதுவான நாடகச் சூழலிற்கு மாற்றான அரங்கு தனக்கே உரிய படிப்பினைகளுடன் மேலெழுந்து வரும் முயற்சிகளைக் காண்கின்றோம். எங்கு பார்க்கினும் ஆதிக்க வர்க்கத்தின், ஆதிக்கச் சாதியின், ஆதிக்கப் பாலின் கருத்து மேலோங்கியுள்ள தொடர்பு

சாதனங்களிலும், கலை வடிவங்களிலும், அரங்கிலும் மேலாட்சி செலுத்தும் நிலை உள்ளது. வெள்ளை ஆதிக்கம், ஆணாதிக்கம், பிராமண உயர்சாதி ஆதிக்கம் என்பனவே பொது நாடக அரங்கின் மொழியாகவும் இதயமாகவும் உள்ளது. இந்திய இலங்கை மற்றும் புகலிட சூழலிலும் இவ்வகை மேலாதிக்கம் செய்யும் சாதிகளின், வர்க்கங்களின் கருத்தே நடைமுறையிலும் அரங்கமாக நிகழ்த்தப் படுகிறது. அந்தப் பிம்பங்களே பிரதிபலிக்கப் படுகின்றன.

உதாரணத்திற்கு தீயதென்றால், தீமையென்றால், தீயவர்கள் என்றால் கறுப்பு நிறத்தில் காட்டுவதைச் சொல்லலாம். இது வெள்ளை மதிப்பீட்டை விமர்சனமின்றி விழுங்கிக் கொண்டதற்கு ஒரு உதாரணமே. இப்படி எங்கும் வலியதன் ஆதிக்கமே ஓங்கியிருக்கையில் இதற்கு மாற்றாய் காலகாலமாய் அடக்கப்பட்டவர் சார்பாய் அந்த உணர்வாய் முகிழ்க்க முனையும் கலை வெளிப்பாடுகள் ஆறுதல் சொல்லத் தக்கதாய் அமைகின்றது. தமிழ்ச் சூழலைப் பொறுத்த வரையில் தமிழகத்தில் தனக்கேயுரிய தன்மையுடன் வெளிப்பட்டிருக்கும் தலித்தரங்கியல் போன்றவற்றில் தம்மைத் தாம் இனம் காணும் ஒரு அரங்கியலைக் கற்றுக் கொள்ளவும் முடிகிறது. இந்தியச் சூழலில் அமைப்பு முறையானது அவர்களை ஒடுக்கி வைத்திருக்கும் பட்சத்தில் தாழ்த்தப்பட்ட மக்களின் கலைகளும், வாய்மொழி இலக்கியங்களுமே இவர்களது உணர்வுகளை வெளிப் படுத்தக் கூடியனவாக இருக்கின்றன.

ஆட்டம், கூத்து நாடகம் உள்ளிட்ட அரங்கியல் வடிவமாக ஒடுக்கும் ஆதிக்கசாதி மக்களின் நடவடிக்கைகளை கேள்விக்குள்ளாக்கும் வடிவமாகவும் பார்வையாளர்களிடையே உடனடி விளைவை ஏற்படுத்தக் கூடியதாகவும் தலித் அரங்கு விளங்குகின்றது. தலித் மக்களின் வாழ்வியலுக்கு எதிராகக் கட்டமைக்கப் பட்டுள்ள கருத்தியலுக்கு எதிராகவும், மாற்றுக் கலாச்சாரத்துடனும் தலித் அரங்கியல் விளங்குகின்றது.

பிரெக்ட் கற்றுக்கொண்ட முகப்போலி அரங்கியலின் இந்திய வடிவத்திற்கு உயிர் கொடுத்துள்ளது தலித் கலைகள்தான். தமிழகச் சூழலில் கே.ஏ.குணசேகரன் போன்றோரின் ``பலியாடுகள், ஊர்கூடி, பாறையைப் பிளந்துகொண்டு" ஆகிய நவீன நாடகங்கள் மேடையைத் தாண்டியும் நடத்தப் படுகின்றன. தமிழ்ப் பேசும் சூழலின் மாற்று அரங்கு என்பது இவர்களின் அனுபவங்களை உள்வாங்கிப் பெற்றதன் மூலமே ஆதிக்க கலைக்கு முகம் கொடுத்து தனது காலில் எழுந்து நின்று தனது உணர்வை உரத்துச் சொல்ல முடியும். பிரெக்டை நினைவு கூரும் இந்த சந்தர்ப்பத்தில் எமது தற்கால சூழலின் அரங்கியலையும் புரிந்து கொள்வோம். ●

(இச்சிறு குறிப்பிற்கு பின்புலமாகவும், உதவியுமாகவும் அமைந்த "பீப்பிள் எ வேக்கினிங் 98" இதழுக்கும், டாக்டர் குணசேகரனின் "தலித்கலை கலாச்சாரம்" நூலிற்கும் நன்றிகள்)

## பெற்றோல்ற் பிரெக்ற் இன்
# குறுங்கவிதைகள்
தமிழாக்கு: சந்துஸ்

*இருண்ட காலங்களில்*
*பாடல் இருக்குமா?*

*இருக்கும்*

*இருண்ட காலங்களைப்*
*பற்றியதாக இருக்கும்.*

●

*கொல்லும் சுறாக்களிடமிருந்து*
*சுழித்துத் தப்பினேன்.*

*புலிகளிடமிருந்தும் தப்பினேன்.*

*என்னைத் தின்றது என்னவோ*
*கட்டில் மூட்டைப் பூச்சிகள்தான்.*

●

*நீ*

*படகின் அணியத்தில் அமர்ந்திருக்கிறாய்.*

*படகின் கடையாலின்*
*கீழ்ப் பகுதியில் இருக்கும்*
*ஒழுக்கைக் கவனித்தவுடன்*
*உன் கண்களை வேறெங்கோ*
*திருப்பாதே என் நண்பனே.*

*நீ இருப்பது*
*சாவின் பார்வைப் பரப்பிற்கு*
*வெளியில் அல்ல.*

●

*இப்போது நீ பார்க்கும் இது*
*இது மட்டுமே தான் நான்.*
*ஓம் இவ்வளவே தான்.*

*இது போதாது தான்*
*எனக்குத் தெரியும்.*

*ஆகக் குறைந்தது*
*நீ பார்க்கும் வகையில்*
*உயிருடனாவது இருக்கிறேன்*
*இது போதாதா?*

*முன்பொருக்கால்*
*தன்னுடைய வீடு*
*எவ்வளவு அழகாய் இருந்ததெனக் காட்ட*
*ஒரு செங்கல்லைப் பொறுக்கியெடுத்துக் காட்டும்*
*ஓர் மனிதனைப் போல நான்.*

●

**சில்லு மாற்றுதல்**

*வீதியின் ஓரத்தில் அமர்ந்திருக்கிறேன்.*

*ஓட்டுனர் சில்லை மாற்றுகிறார்.*

*எங்கிருந்து வந்தேனோ*
*அந்த இடம் எனக்குப் பிடிக்கவில்லை*


*எங்கு போகப் போகிறேனோ*
*அந்த இடமும் எனக்குப் பிடிக்கவில்லை*

*பிறகு எதற்கு*

*அவர் சில்லை மாற்றுவதை*
*பொறுமையிழந்து நான்*
*பார்த்துக் கொண்டிருக்கிறேன்*

# நிஜம்

கதையும் ஓவியமும்: கவிதா ~ நோர்வே



கோடைகாலம். அழகான மாலை நேரம். அவன் மார்பில் சாய்ந்தபடி நான். என் தலை கோதும் அவன் விரல்களில் இருந்து மீள மனமற்று சுருண்டு கிடக்கிறேன் அவனை முழுமையாய் ஆட்கொண்டு.

எனக்கு எந்த கவலையும் இல்லை. அன்பான புருசன், அழகான குழந்தை. திருமணம் முடிந்து ஆறு வருடங்கள் கழிந்த பின்னும் இத்தனை காதல் எங்களுக்குள். எனது சினேகிதிகள் சித்தரிக்கும் ஆண்களில் இருந்து சற்றே மாறு படுகிறான் அவன். அவன் அழகானவன் மட்டுமல்ல என்னை அழகுற செய்பவனும் அவன்தான். எந்த ஆடைகளில் நான் அழகு என்று சொல்வதில் இருந்து நான் குழம்பிக் கிடக்கும் தருணங்களில் எந்த முடிவுகள் நான் எடுக்கலாம் என்று சொல்வதிலும் எனக்கு பிடித்தமான விமர்சகன்.

எந்த முடிவுகளும் அவன் தனித்து எடுத்ததில்லை. ஆண் என்ற அகங்காரமோ, ஆதிக்கமோ அற்றவன். வீட்டில் ஒரு சின்ன பொருள் வாங்குவதென்றாலும் இருவரும் சேர்ந்தே போவோம். எந்த ஒரு நிகழ்ச்சிக்கும் முகம் சுழிக்காமல் அழைத்துப்போவான். வாரத்தில் ஒரு நாள் வெளியே சுற்றியே தீருவோம். அவனுக்குரிய எந்த ஆடைகளும் என் தெரிவுதான்.

இருவரும் வேலைதான். இருந்தாலும் வீடு எப்போது வருவோம் என்றே இருக்கும். சின்ன சின்ன சண்டைகள் வருவதுண்டு. எதுவுமே சில மணித்தியாலங்கள் தவிர நீடித்ததில்லை. நான் போக நினைக்கையிலே அவன் வந்து விடுவான் என்னிடம், இல்லையென்றாலும் நானே தேடிப் போய் கட்டிக்கொள்வேன் அவனை. அனைத்தும் மறந்து புதுஉலகம் மலரும் அவன் புன்னகையில்.

மனம் புண்பட பேசத்தெரியுமா அவனுக்கு என்று என்னை நானே கேட்டிருக்கிறேன். குடும்பத்திற்காகவும் எனக்காகவும் எதையும் எந்த நொடியும் விட்டுக் கொடுத்திடுவான். எந்த ஒரு சின்ன விசயத்தையும் என்னிடம் முதலில் பேசிவிட்டுத்தான் எதையும் செய்யத் துணிவான். மனைவி என்று இல்லை மொத்தமாக பெண்களுக்கே பெருமதிப்பளிப்பதில் என்னிடம் பெருமதிப்புப் பெற்றவன். அவனுடைய சந்தோசமான முகம் எவரையும் சந்தோசமாகவே வைத்திருக்கும் தன்மையும் அனைவரையும் கவர்ந்துவிடும். எந்தனையோ குறை இருக்கும் என்னையே ஒருநாள்தன்னும் மனம் நோகப் பேசியதில்லை. நான்தான் கொஞ்சம் அநியாயக்காரி என்றாலும் அவனுடைய செயல்களில் நானே மாறிவிடுவேன்.

பெற்றோரிடம் இருந்த நாட்களைவிட எனக்கானவனுடன் வாழ்ந்த தினங்கள்தான் எனது வாழ்க்கையை வாழவைத்தது. தலைகோதிக் கொண்டிருந்த அவனது அன்பில் கசியும் என் கண்களின் ஈரத்தில் சற்று விழித்துப் பார்க்கிறேன். அதிகாலை நேரம் ஆறு மணி.

நான் சுருண்டு கிடந்த இருட்டறையில் ஈரம் கசிந்த தலையணையை புறம்தள்ளி, போர்வை விலக்கி எழுந்து போகிறேன்... அவனைப்பற்றி மீதி நாளைக்குச் சொல்கிறேனே. இதே கனவுகள் என் போர்வைக்குளே காத்திருக்கும் நாளை வந்து நான் மீட்கும்வரை. இனி நான் இன்றைய நிஜங்களை சந்திக்க தயாராக வேண்டும். •

# என் தந்தையுடன் ஒரு உரையாடல்

-உமா-
ஜேர்மன்

வானமென விரிந்த உனதரணில்
கவலை தொலைத்து ஓடும்
மேகங்களென இருந்த எம்மை
உனது மரணம்
தொப்பென நிலத்தில் வீழ்த்தியது.
உனது வாழ்வு போலவே
உனது மரணமும் வலிமை மிக்கது
ஒரு நொடியில் உனதுயிர் பிரிய
மனதில் சூழ்ந்த
கனதியும் வெறுமையும்
வாழ்தல் மீதான பற்றுதலை
அர்த்தமற்றதாக்கியது
உனது அன்பு
உனது பாசம்
உனது அரவணைப்பு
உனது கரிசனை
இவை தான்
இன்னும்
உயிரற்ற உயிர் கொண்ட
எனது வெற்றுடலை நிரப்பி
இயக்குகின்றது.
உன்னோடு கதைத்த
அனுபவித்த சந்தோஷித்த
ரம்மியமான
அர்த்தமும் உயிர்ப்பும் நிறைந்த
அந்தப் பொழுதுகள்
இன்று வெறுமையாக . . . . .
மகளாக நான் உனக்கு
தந்ததெல்லாம்
தொந்தரவுகள்
தூக்கச் சொல்லி அடம்பிடித்தது
உனது ஆடைகளை அழுக்காக்கியது
பாடசாலை போகமாட்டேன் என்று
அடம்பிடித்தது
என்னைக் கூட்டிக் கொண்டு போகவேண்டும்
என்பதற்காக
கண்ணாடியை ஒளித்தது
அண்ணாவுடன் கட்டிலில் துள்ளி
அடிவாங்கியது
தந்தைக்கான சமூகத்தின்
வரையறைகளைத் தூரத்
தூக்கி எறிந்துவிட்டு
நண்பனாக, வழிகாட்டியாக
நிழலாக எம்மோடு வாழ்ந்தாய்
எமது தேவைகளும் ஆசைகளும்
எம்மைவிட உமக்குத்தானே
தெரிந்திருந்தன
சமூகத்தின் பாராமுகத்தை
உன் கண் கொண்டு
எமக்கு காட்டினாய்
மனிதரை மனிதராக பார்க்க நேசிக்க
துயர் தொண்டையை நெரிக்கையிலும்
சமூகத்துடன் சமரசம் செய்யாதிருக்க
வசதிகளற்றும் சந்தோஷித்திருக்கலாமெனவும்
கற்றுக்கொண்டது உன்னிடத்தில் தான்
கண்ணாடிக்குமிழ் வாழ்வைவிட
மரணமே நிஜமானது நிரந்தரமானது
என்ற அருவருப்பான உண்மை
எம் கனவுகளைக் கிழித்தாலும்
உன்னிடத்தில் சொல்வதற்காக கதைகளையும்
ஆசைகளையும் விருப்பங்களையும்
இன்னும்
சேகரித்துக்கொண்டிருக்கிறேன்.
சுவாசம் போலவே
நான் வாழ
அவசியம் நீ.
உனது அன்பான மகள் ஷானா (உமா)
26.02.08




என் பிரிய காதலே வா!
நமது காதல் புதைக்கப்பட்ட இடத்தை
நாமிருவருமாய் சென்று தரிசிப்போம்

நமது காதலைத்தான்
நம்மால்
சுத்தம் செய்ய முடியவில்லை
அது புதைக்கப்பட்ட சமாதியையேனும்
இருவருமாய்
ஒருதடவை சென்று சுத்தம் செய்வோம் வா

எட்டடி தள்ளி நின்றே தரிசிப்போம்.
நமது பார்வைகள்கூட
ஒன்றையொன்று உரசிக்கொள்ளாதென
நம் காதலின் சமாதிமீது
சத்தியம் செய்து தருகிறேன்
நம்பலாம் நீ.

வெள்ளெருக்கும் அறுகம்புல்லும்
வெள்ளெலிக்குகையும் கறையான் புத்தும்
நம் காதல் புதைந்துபோன
சமாதியை ஆக்கிரமிக்கின்றன.
காதலைத்தான் நம்மால்
காப்பாற்ற முடியவில்லை
அதன் சமாதியையாவது காப்பாற்றுவோம் வா.

உனது அழகிய(?) தோட்டத்திலிருந்து
ஒரு பூ பறித்துவா
நானும் எனது உயிரிலிருந்தொரு
நார் கொண்டு வருகிறேன்
ஒற்றைப்பூவில் ஒரு மாலை.
அதை
நாமே
நமது காதலுக்காய்
முதன்முதலாய் கண்டுபிடித்தோமென்ற
புகழும் நமைச் சேரும்

முத்தமிட்டு எச்சிற்பட்ட
இரவுகளையும் பகல்களையும்
நீ துடைத்துக்கொண்டாய்
அவற்றையென்
உயிர்ப் பெட்டகத்துள்ளிட்டு
நானும் கதவை மூடிக்கொண்டேன்

அதை
யாரும் பார்க்க வேண்டாம்
நீயுட்பட.

என்னை அருந்து என நான் தந்தேன்
உன்னை அருந்த நீயும் எனக்குத் தந்தாய்
உறவின் ஈரத்தை
இருவரும் சுவைத்தோம்
சமமாய்
சரிசமமாய்.

உயிரிலிருந்து ஒழுகிய ஊற்றை
இருவரும் பருகினோம்
ஒரு கூட்டுக்குள் தாவினோம்.
உனக்குள் என்னைக் கரைத்தேன்
எனக்குள் நீ மறைந்தாய்

நமக்குள் காதல் விதைந்த
எல்லாத் தடையங்களையும்
நீ அழித்துவிடலாம்
அவற்றை காவித்திரியும் காற்று
உனது கோடியில்
நிரந்தர முகாமிட்டிருப்பதை
அறிவாயா நீ ?
சுழகெடுத்து வீசியா விரட்டுவாயவற்றை ?!
முறத்தால் விரட்ட
இதுவொன்றும் புலியல்ல, காதல்.
கொல்லவும் வெல்லவும் தெரிந்த காதல்.




-உமா-
ஜேர்மன்

**தொ**லைபேசிச் சத்தம் கேட்டவுடன் உடனே நிறுத்த வேணும் போல இருக்கு . . . நேற்றைக்கும் இன்றைக்கும் எத்தனை பேர் அடிச்சிட்டினம். அம்மாதான் பாவம். அழுதழுது களைச்சு போயிற்றா. தொண்டையும் கட்டிட்டுது... பாவம் சமைச்சு சமைச்சும் அழுகிறா... இரவு நித்திரை கொள்ளும்போதும் என்னை கட்டிப்பிடிச்சுக்கொண்டு விம்மினவ. பாவம்.

சுவிற்றி அக்கா செத்திற்றா என்று நியுஸ் வந்ததிலிருந்து அம்மா அழுதபடிதான். சுவிற்றி அக்கா அம்மாவின் அக்காவின்ர ஒரே மகள். என்ர பெரியம்மாவின் மகள். அவவை போன வருசம் இயக்கம் பிடிச்சுக் கொண்டு போனது. இப்ப போனகிழமை ஏதோ சண்டையில செத்திட்டாவாம்.

அம்மா டெலிபோனை காதில அமர்த்தி வைச்சுக்கொண்டு அடுப்பில இருக்கிற கறியை கிளறுரா.

என்னைத் தமிழ் பள்ளிக் கூடத்திற்கு போக வெளிக்கிட சொன்னவ. உடுப்பை நானே தேடி எடுப்பம். கேட்டால் இப்ப பேச்சு விழும்.

ஓம்... போன கிழமை நடந்ததாம். நேற்றுத் தான் அத்தான் வந்து சொன்னவர்.

ஓ... அவ பிடிச்சுக் கொண்டு போன நாளையிலிருந்து படுக்கையிலதானே. இப்ப சித்தப்பிரமை பிடிச்சவ போலாயிட்டாவாம்.

ஓ... அத்தானும் பாவம் வருத்தக்காரன். என்ன நடக்கப் போகுதோ தெரியாது. கனகாலத்திற்கு பிறகு பிறந்த பிள்ளை. ஓ... ஒரு பிள்ளை.

ஓ நந்தினியும் சொன்னவ. போன கிழமை டீவி ரேடியோ எல்லாம் புழுகினவையாம். முக்கியமான ஆமிகாம்ப் ஒன்றை வெற்றிகரமாக அட்டாக் பண்ணினவையென்று

இது மாலதி அன்ரியாகத்தான் இருக்க வேணும். அவவோடை மட்டும்தான் அம்மா இப்படி ஒப்பனாக கதைப்பா. இயக்கத்தைப் பற்றி பேசுவா. மற்ற ஆக்காளோட கவனமாகத்தான் கதைப்பா.

அம்மா! என்ர டையை கண்டனீங்களா?

அம்மாவுக்கு நான் கேட்டது கேட்கவில்லை. ஒரு பக்கம் டெலிபோன், அதோடை கிரைண்டரிலேயும் ஏதோ அரைக்கிறா போல கிடக்கு.

அம்மா என்ர டை எங்க...

உன்ர அலுமாரிக்கிலதான். நான் அலுவலாக நிக்கிறன்.

ஒன்றும் தனிய செய்ய ஏலாது. நான் எல்லாத்துக்கும் போகவேணும். தகப்பனும் அப்படி. மகளும் அப்படி.

அம்மா எங்களுக்கு பேசுறது கேக்குது. பாவம்தானே. அவவை ஏன் கஸ்ரப்படுத்துவான்.

அம்மா அயர்ன் பண்ணி மற்ற உடுப்புகளோடைதான் மடிச்சு வைச்சிருக்கிறா. நான் உடுப்பு எடுக்கேக்கை அங்கால விழுந்திட்டுது. ஒவ்வொரு சனிக்கிழமையும் தமிழ்பள்ளிக்கூடத்திற்கு வெள்ளை சேர்ட்டும் கறுப்பு காற்சட்டை அல்லது பாவாடையும். கறுப்பில் பள்ளிக்கூடத்தின்ர பெயர் தைச்ச டையும் போட்டுக் கொண்டுதான் போக வேண்டும்.

சரி மாலதி நான் உமக்கு பிறகு எடுக்கிறேன். இவர் வந்திட்டார். இப்ப சாப்பாடு குடுத்தால்தான் நேரத்திற்கு அவையை இறக்கலாம்.

சரோ .. என்ன இன்னும் ஒப்பாரி முடியவில்லையா...?

அப்பாவின்ர குரலில் ஏளனம் தெரிந்தது.

சரி... இதுக்கில வராதையுங்கோ. உடுப்பு மணக்க போகுது.

சுஜா... கெதியா கையை கழுவிற்று சாப்பிட வா... கன

தூரம் போகவேணும் எல்லோ...

அம்மாவின் குரலில் கோபம் தெரிந்தது.

சாப்பிடும் போது வழமையைவிட அமைதியாகவிருந்தது. அம்மா பேசாமல் எனக்கும் அப்பாவுக்கும் பரிமாறிக் கொண்டிருந்தா. அம்மா ஒருநாளும் எங்களோடை இருந்து சாப்பிட மாட்டா... நாங்கள் சாப்பிட்டதெல்லாம் எடுத்து வைச்சிட்டுதான் சாப்பிடுவா. அது அவவின்ர வழக்கம்.

□ □ □ □ □

முதிர்ச்சியின் அடையாளமான அழகான மஞ்சள் இலைகளை உதிர்த்து வெள்ளை ஆடைகளை அணிய காத்திருந்த மரங்களை ஏமாற்றி மழையை மட்டும் தாராளமாக அளித்துக் கொண்டிருந்தது பனிக்காலம்.

மிகவும் அவதானமாக காரை ஓட்டிக் கொண்டிருந்த குணபாலனை கைத்தொலைபேசி தொந்தரவு பண்ணியது. இயர்போன் போட்டிருந்தமையால் காரை ஓட்டுவதில் கவனம் செலுத்தியபடியே ஹலோ சொன்னான்.

ஓம்... மனிசியின்ர தமக்கையின்ர மகள்.

பத்தொன்பது வயசு

போராட்டம் என்றால் இப்படித்தான். வீட்டில நின்றால் ஆமி பிடிக்கும்... என்ன செய்ய...

சுவீட்டி அக்கா செத்துப் போயிற்றா என்றும் பெரியம்மா வருத்தமாகிற்றா என்றும் அம்மா வீட்டில இருந்து அழுது கொண்டிருக்கிறா. அப்பா சாகிறது சாதாரணமான விசயம் மாதிரி சொல்லுகிறார்.

பாவம் சுவீட்டி அக்கா நல்லவ. நாங்கள் நாலு வருசத்திற்கு முதல் சிலோனுக்கு போயிருக்கேக்க அவதான் என்னை சயிக்கிளில எல்லா இடமும் கொண்டு திரிஞ்சவ. அவ நல்ல வடிவு. நல்ல சுருள் தலைமுடி. நல்ல வடிவான சட்டைகள் வைச்சிருந்தவ. பெரியம்மாதான் தைக்கிறவ. அவவிற்கு சொக்லெற் சரியான விருப்பம்.
பாவம் இனி நாங்க சிலோனுக்குப் போனால் சுவிட்டி அக்கா நிற்கமாட்டா.

என்ன குஞ்சு யோசிக்கிறீங்கள்? பிள்ளைக்கு நித்திரை வருகுதா?

இல்லை அப்பா... நான் சுவீட்டி அக்காவை யோசிச்சனான்.

என்ன செய்யிறது குஞ்சு... அங்க சண்டைதானே... ஆமிக்காரங்கள் தமிழ்ஆக்களை கொல்லுறாங்கள். அதுக்கு நாங்கள் சண்டை பிடிக்க வேணும்தானே?

உங்களுக்குத் தெரியுந்தானே... பள்ளிக்கூட ஆண்டுவிழாவிலையும் மாவீரர் தினத்திலையும் நீங்கள் நாடகங்கள் பார்த்தனீங்கதானே. ஏன் போனமுறை நீங்களும் டான்ஸ் ஆடினீங்கள்தானே?

ஓம் அப்பா... அப்படியென்றால் பெரிய ஆக்கள் சண்டை பிடிக்கலாந்தானே? சுஜா அப்பாவித்தனமாகக் கேட்டாள்.

பெரிய ஆக்கள் கனபேர் இல்லாதபடியா சின்னப் பிள்ளைகளும் சண்டைபிடிக்க வேணும்... இல்லாட்டிக்கு ஆமிக்காரர் வந்து சுட்டிட்டு போயிடுவினம்.

தான் கெட்டித்தனமான விளக்கமொன்றைக் கொடுத்த நினைப்பில் குணபாலன் தப்பிக்கப்பார்த்தார்.

இல்லை அப்பா... சின்ன பிள்ளைகளை சண்டைக்கு அனுப்புறது பிழையென்று ஸ்கூல்ல படிச்சனாங்கள்.

அங்க சின்னபிள்ளைகளைப் பிடிக்கிறதில்லை. அவை விரும்பி போயினம்.

நான் அன்றைக்கு டீவியில பார்த்தனான். ருவண்டாவிற்கு அடுத்தபடியாகச் சின்னப்பிள்ளைகளைச் சண்டைக்கு அனுப்புறதில் சிலோன்தான் இருக்குது என்று காட்டினவை. யுனிசெவ்ப் நிற்ப்பாட்டச் சொல்லியிருக்காம்.

மகள் அறிவுபூர்வமாகத் தகவல்களை உதாரணம் காட்டி கதைதத்தையிட்டு அதிர்ச்சியடைந்த குணபாலன் இனி இவளுடன் கதைச்சுப் பிரயோசனம் இல்லையென்று முடிவெடுத்தபடி, உங்களுக்கு இதுகள் விளங்காது. சோதனை வருகுதல்லோ புத்தகத்தை எடுத்து படியும். வீட்டிலயும் ஆக்களா இருப்பினம் கொம்மாவும் அழுதுகொண்டிருப்பா... இப்போது மழை ஓய்ந்திருந்தது.

சுஜா பின்னிருக்கையில் புத்தகத்தை கையில் பிடித்தபடி நித்திரை தூங்கி வழிந்துகொண்டிருந்தாள்.

□ □ □ □ □

ஞாயிற்றுக்கிழமையின் அமைதியை வீட்டின் அழைப்பு மணியும் தொலைபேசியும் அடிக்கடி குலைத்தது. சரோவின் பொழுது சமையலிலும் வருபவர்களுக்கு தேநீர் ஊற்றுவதிலும், கதைப்பதிலும் அழுவதிலும் போய்க் கொண்டிருந்தது. கோயிலுக்கு போகிறவர்கள் "துடக்கு" என்ற பெயரில் தேநீர் அருந்த மறுத்தார்கள்.

சுஜா ஆங்கில வகுப்பிற்கு போவதற்கு ஆயத்தமாக வீட்டு வேலைகளைச் செய்து கொண்டிருந்தாள்.

குணபாலனுடன் எல்லாவிதத்திலும் ஒத்துப்போகக் கூடியவனான சுரேந்திரனும் அவனது மனைவி சாந்தியும் வந்திருந்தார்கள். குணபாலன் தனது நன்பனை அழைத்துக்கொண்டு சுஜாவின் அறைக்குள்

வந்தான். பெண்கள் இருவருந் விறாந்தையில் தனித்துவிடப்பட்டார்கள்.

சாந்தியும் சென்ற வருடம் தனது தம்பியை இழந்திருந்தாள். சாந்தி குடும்பம் மிகவும் வறுமைப்பட்டது. அவள் மாத்திரம்தான் வெளிநாட்டில். தந்தை அவன் சிறுவயதாக இருக்கும் போதே இறந்துவிட்டார். தாய்தான் இவர்களை வளர்த்தது. சாந்தியின் தம்பியை தம்மோடு வந்து சேரும்படி இயக்கம் தொந்தரவு செய்ய சாந்தியின் தாய் அவனுக்கு உடனே கலியாணம் செய்துவைத்தாள். இந்த விடயம் கேள்விபட்டவுடன் அன்றிரவே சாந்தியின் தங்கையை இயக்கம் பிடித்துக்கொண்டுபோனது. மறுநாள் நியாயம் கேட்க சென்ற தம்பியை கட்டாயப்படுத்தி தூக்கில் தொங்க வைத்தார்கள். குடும்பப்பிரச்சினையால் தூங்கிச்செத்தார் என்று ஊரில் பிரச்சாரம் செய்யப்பட்டது.

சுவீட்டிக்கு சரியான இரக்க சுபாவம். ஊரில் இருக்கிற நாய்க்குட்டிகளை வீட்டை கொண்டுவந்து குளிப்பாட்டி சாப்பாடு குடுத்து வைச்சிருப்பாளாம். அக்கா ஒரே பேச்சாம். அப்படிப்பட்ட பிள்ளையை கொலைசெய்ய வைச்சு கடைசியில் சாகடிச்சிட்டாங்கள். சரோவின் குரல் மேலும் கதைக்கமுடியாமல் உடைந்தது. சாந்தியின் கண்களும் பனித்தன.. அவள் சுவீட்டிக்காவும், தம்பிக்காவும், இனி சாகப்போகும் தங்கைக்காவும் சேர்ந்து அழுதாள்.

அவங்களை ஒருத்தரும் கேள்வி கேட்க ஏலாது. சில இடங்களில் காசை வாங்கிக்கொண்டு விட்டிருக்கிறாங்கள்.. சாந்தி தமது வறுமைக்காக ஒரு பெருமூச்சை விட்டாள்.

ஓம் அவங்கள் காசையும் வாங்கிக்கொண்டு பிறகு பிள்ளையையும் கொண்டு போவாங்கள். சுவீட்டிக்கு அதுதானே நடந்தது. அவங்கள் நெடுகிலும் வந்து கரைச்சல் குடுக்கிறாங்கள் என்று இவை எத்தனை இடங்களில் அந்தப் பிள்ளையை ஒளிச்சுவைச்சவை. அவங்கள இவை ஏமாத்துறதென்று தெரிஞ்சு அத்தானை பிடிச்சுக்கொண்டு போனவங்கள். பாவம் அவர் வருத்தக்காரன். இரண்டு கிழமைக்கு மேல வைச்சிருந்து நல்லா அடியும் குடுத்து கையில ஒரு காசும் இல்லாம விட்டவங்கள். இந்த மனிசன் எத்தனையோ மைல் நடந்துதான் வந்து சேர்ந்தவர். பிறகு பொறுப்பாளர் வீட்டிற்கு அவருடை செலவில ஓடு, சீலிங் எல்லாம் போட்டுத்தரச் சொன்னவங்களாம். அந்தாளும் பயத்தில் மகளைக் காப்பாத்த நானும் தம்பியும் அனுப்பின காசில எப்படியோ செய்து குடுத்தார். கடைசியில் அவங்கள் சுவீட்டியையும் கொண்டு போயிற்றாங்கள்.

எங்கட அம்மாவும் தம்பியையும் தங்கச்சியையும் வீட்டிற்கு கிட்ட இருக்கிற உழுத்தம் வயல்களில்தானே இரவில படுக்கவிட்டவ. கடைசியில என்ன நடந்தது.

சாந்தியும் சரோவும் இழப்புகளிற்காக வருந்திக் கொண்டிருக்கையில் குணபாலனும் சுரேந்திரனும் இழப்புகளை வைத்து எவ்வாறு இலாபம் தேடலாமென்று யோசித்துக் கொண்டிருந்தார்கள்.

நல்ல வேலைதான் குடுத்திருக்கிறாங்கள். ஆமிக்காரங்கள் நிறையப்பேர் சரியாம். சுரேந்திரனின் குரலில் வெற்றிப் பெருமிதம் நிறைந்திருந்தது.

இதைச் சாட்டாக வைச்சு நாங்கள் முன்னேறுகிறோமென்று சனத்தின்ர இன்னொரு களெக்ஷன் போடுவோமா? குணபாலன் முன்மொழிந்தான்.

ஓம் போகலாம்... ஆனால் சனம் அடிச்சு கலைக்குதுகளோ தெரியாது. ஏற்கனவே 2008இல வட்டியோடு திருப்பி தாறம் என்று ஆயிரக்கணக்கில வாங்கினாங்கள்தானே...



சுரேந்திரன் தனது ஐயத்தை தெரிவித்தான்.

இப்ப நிலமை மாறிட்டுது. புதுக்க வன்னியில இருந்து வந்தவரையும் கொண்டு போனால் சனத்தின்ர கேள்விகளை அவர் சமாளிப்பார். மற்றது நீர் பயப்படுகிற மாதிரியும் இல்ல. பிளைட்டில போய் அடிச்சதோட சப்போர்ட் பண்ணாத ஆக்களும் இப்ப கொஞ்சம் எங்கடைபக்கம் வருகினம்.

மற்ற ஆக்களோடையும் கதைப்பம். உத்தரவு வந்தால் போகத்தானே வேண்டும். இந்த முறை கட்டாயம் பிடிப்பாங்கள் போலத்தானிருக்கு. சுரேந்திரனும் இசைந்து கொடுத்தான்.

இனி மனிசயைக் கூட்டிக்கொண்டு போவம். பின்னேரம் வேலை. மனிசி காலமை வேலைக்கு போயிட்டுதான் இங்க கட்டாயம் சமைக்கமுதல் வரவேண்டும் என்று வந்தவ. போவதற்காக புறப்பட்ட சுரேந்திரனின் பார்வையில் சுஜா

பட, எப்படி இங்கிலிஷ்கிளாஸ் போகுது என்று கேட்டான். நல்லாப் போகுது. சுஜா மெதுவாகச் சொன்னாள்.

கதைக்கவும் பழக்கிறாவா...?

சுஜா ஓமெனத் தலையை அசைத்தாள்.

ஒருக்கா இரண்டு பேரை புதுக்க எடுக்கலாமோ என்று கேட்டுக்கொண்டு வாறீங்களோ? அவை இப்ப ஒரு இடத்திற்கு போகினம். ஆனால் அவை கதைக்கிறதைக் காணயில்ல.

என்ன லண்டன் பக்கம் போகப் போறீங்களோ? குணபாலன் நண்பனைச் சீண்டினான்.

ஓம்... அப்படித்தான் யோசிச்சுக் கொண்டிருக்கிறோம். பிள்ளைகளின்ர எதிர்காலத்திற்கு நல்லதுதானே?

அப்ப இங்க வீட்டையும் வாங்கிட்டீர். அதற்கே மனிசியும் நீரும் இரவும் பகலும் பார்க்காம உழைக்கிறியள். அங்க போய் என்ன செய்யப் போறீங்கள்.

பார்ப்பம். வீட்டை வாடைக்குக் குடுத்திட்டு ஆறுதலாக அங்கை ஒன்றை பார்த்திட்டு வாங்குவம். பிள்ளைகள் விரும்பினால் வளர்ந்தாப்பிறகு இங்க வந்து இருக்கட்டும். எங்களுக்கு நஷனலிட்டிதானே. தனது பிள்ளைகளின் எதிர்காலத்தைப் பற்றி மிகவும் கரிசனையும் தீர்க்கதரிசனமும் அவனது பேச்சில் மிளிர்ந்தது.

அவர்களின் உரையாடலில் தேசியப்பற்று மெல்ல மெல்ல சுயப்பற்றாக மாறிக்கொண்டிருந்தது.

□ □ □ □ □

எனக்கு அப்பாவையும் சுரேந்திரன் மாமாவையும் விளங்கவில்ல. தங்களுடைய பிள்ளைகள் நல்லா படிக்க வேணுமென்று யோசிக்கினம். நான் பள்ளிக்கூடத்தில டொச் படிக்கிறன். தமிழ்பள்ளிக்கூடத்திற்கு போறன். இங்கிலீஷ் படிக்கிறன். டான்ஸ் படிக்கிறன். சங்கீதம் படிக்கிறன். கீ போர்ட் படிக்கிறன். சுரேந்திரன் மாமாவின்ர பிள்ளைகளும் எல்லாம் படிக்கினம். ஆனால் சுவீட்டி அக்கா மாதிரி சிலோனில இருக்கிற அண்ணா அக்காமரை பிடிச்சு சண்டைபிடிக்க வேணும் என்று நிற்கினம். சுஜாவிற்கு சைக்கிளில் ஓடிய, சொக்கலெட் சாப்பிட்ட, நாய்க்குட்டியோடு விளையாடிய சுவீட்டி அக்காவை துவக்கு தூக்கி ஆமிக்காரங்களை கொல்வதாக நினைச்சுப் பார்க்கமுடியவில்லை.

□ □ □ □ □

நாட்கள் நகர விருந்தினரின் தொகையும் தொலைபேசி விசாரிப்புகளும் குறைந்தன.
குணபாலன் தனது சகாக்களுடன் வீடுகளிற்குச் சென்று தமது வீடுதலைப் போராட்டத்தின் இறுதிப்போரிற்கு மாதந்தம் அன்பளிப்பு செய்யவேண்டுமென்று வற்புறுத்தி வந்தான்.

தமிழ் டிவீக்களும் இன்டர்நெட் பக்கங்களும் தாக்குதல்களை வண்ணப் படங்களாக்கியிருந்தன. இழப்புகளை வெறும் எண்ணிக்கைகளாகப் பார்த்து புளங்காகிதமடைந்தார்கள்.

அதிகாலையில் டெலிபோன் ஒலித்தது .

ஓம் நான் சரோ தான். யார் அத்தானே... ஏன் அத்தான் என்ன சொல்லுறீங்கள்... அக்கா.... என்ன அக்கா... என்ரை ஐயோ... சரோவின் அலறல் கேட்ட குணபாலன் திடுக்கிட்டு எழும்பினான்.

சரோ நிலத்தில் விழுந்து அழுதுகொண்டிருந்தாள்.

தாயின் அழுகைச் சத்தத்தைக் கேட்டு திடுக்கிட்டு எழுந்த சுஜா ஓடிப்போய் அவளைக் கட்டிக் கொண்டாள்.

மீண்டும் தொலைபேசி விசாரிப்புகள், விருந்தினர்கள்...

இந்தமுறை பிடிக்கத்தான் போறாங்கள்... அந்தமாதிரி சண்டையாம்... வீரபிரதாபப் பேச்சுகள்.

சுஜாவிற்கு தமிழ் கிளாஸ், இங்கிலிஷ் கிளாஸ், டான்ஸ் கிளாஸ், சங்கீதகிளாஸ்...

அண்மையில் நடைபெற்ற தாக்குதல்களில் 7இராணுவத்தினரும் 70புலிகளும் இறந்ததாக இராணுவத்தினரும் அரசத்தரப்பினரும், 30இராணுவத்தினரும்- தமது தரப்பில் மூன்றுபேரும் இறந்ததாக புலி இயக்கத்தினரும் கூறுவதாக பிபிசியில் செய்தி.

கொழும்பில் சந்தேகத்தின் பேரில் மேலும் பலர் கைதுசெய்யப்பட்டார்கள். தமது பிள்ளைகளின் உயிரை எந்தப் புதருக்குள் ஒளித்துக் காப்பாற்றலாமெனத் தாய்மார்கள் மண்டையை உடைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஐரோப்பாவின் மேடைகளில் இராணுவயுடை அணிந்த சிறுவர்கள் துவக்கு போல அபிநயம் பிடித்தும், அழகு அழகு தமிழீழம் அழகு... அழகு சுடுகுழல் அழகு என்றும் ஆடிக்கொண்டிருக்கிறார்கள்.

சமூகக்கல்வி பரீட்சையின் விடைத்தாளில் இறுதியாக இறந்த லெப்டினனின் பெயர் என்னவென்று கேட்கப்பட்ட கேள்விக்கு விடை தெரியாமல் சுஜா முழிசிக்கொண்டிந்தாள்..

தாக்குதல்கள் நடைபெறும் பகுதிகளிலிருந்து மக்கள் பெருந்திரளாக இடம்பெயர்ந்து மரங்களிற்கு கீழ் உண்ண உணவின்றி தவித்துக் கொண்டிருந்தார்கள். ◆

# ஆடுகளம்

தமிழ்நதி
நோர்வே

சாண்டில்யன் கதை நாயகியாக
வெள்ளைக்குதிரை நாயகனிடம்
பறிகொடுக்கும் கன்னியாக..
சீதையாக, கண்ணகியாக
இதிகாசங்களின் நாயகியாக
நினைத்துப் பார்த்திருக்கிறேன் என்னை.
பாவம் என்று விட்டுவிடுவேன்

ராமனும், கோவலனும்
இவர்கள்
என்னிடம் மாட்டியிருந்தால்
புராணங்கள் மாறியிருக்கும்
நீ நினைக்கிறாயா
நான் பதுமையென்று

புதுமையும் பதுமையம்
எம் விரல் நுனியில்தான்
எந்த விரல் நீட்டுவதென்று
நானே தீர்மானிக்கிறேன்

நாணி ஆடவும்
நாண் ஏற்றவும் கூட
என் சுட்டுவிரல் போதும்.
சுடுகுழல் தூக்குதற்கும் கூட.

செக்குமாடாய் பின் முற்றத்தில்
போட்ட வட்டங்கள் எல்லாம்
இன்று நாம் கடந்து வந்த
பாதைகளாகவும்
சில கவிதைகளின் காரணங்களாகவும்
மாறிப்போன பின்
அறுத்தெறிய ஏதுமில்லை என்னிடம்
ஒற்றைக் கயிற்றைத் தவிர..
அதன் அவசியம் கூட எனக்கில்லை

நான் பெண்
ஆணை விரும்புபவள்
நீயும் விரும்பு
இன்னும் எதுவும் அறியாதவள் என்று
நினைத்தால்...
விதியிடம் இனி உன்னைக் காக்கப் பழகு
வலியாம்
பெண் மொழியாம் என்று

உன் உதடு வளைத்து
என்னை அஃறிணையாக
நீ பார்த்தாலும்
ஆண் பெண் என்ற
ஆடுகளத்தில்
மனு என்றே பார்க்கிறேன்
நான் உன்னையும் என்னையும்.
முக்காடு போட்டு
என் முகம் தொலைத்த நாள்
போனது போகட்டும்
என் கவிதைகளும் முகவரியாகட்டும்
யாரும் தூக்கிப்போட்ட
''ஒருநாள்'' தினம் ஏந்தும்
பிச்சைக்காரியில்லை நான்
நேற்றும், நொடிப்பொழுதும்
எதிர்காலங்களும் ஆளத்தெரிந்த
இராஜகுமாரி


எதற்கு
பின்னும் முன்னும்இழுபாடு?
என் தோளோடு நட
நாலு பேர்கள்
நாலுவிதமாய் பேசுவார்கள்.
உதவாத மனிர்களுக்காக
அடங்கிப்போகவோ
ஆராய்ந்து பார்க்கவோ
எனது நேரங்களுக்கு இனி
நேரமில்லை.

பாரதி பெண் நானில்லை
படைத்த பிரம்மனும் கூட
வரையறுக்க முடியா என்னை
சிந்தனை உளிகொண்டு
அறிவு விரல்களால்
என் விழியின் ஒளியில்
என்னை நானே செதுக்கி
நிமிர்ந்து நிற்கும்
எனது பார்வையில்
பெண்
நான்.

29.02.2008

# ரஞ்சினியின் 5 கவிதைகள்

பிராங்போர்ட்




## வாழ்க்கை...

எவர்க்கும்
தெரியாத
ரகசியமாய்
நான்கு
சுவருக்குள் மோதி
மீண்டும்
என்னுடன்
பேசிக்கொண்டிருக்கிறது
மௌனம்

சிந்தனை
சிதைந்து
உணர்வுகள்
சோர்வுற்று
இதயம் பலமிழந்து
இயக்கம்
நின்றுவிடும்
தருணங்களுடன்
மௌனமும்...


## புரிதலில்...

நான்
கோபிக்கும் தருணங்களை
உன்
வார்த்தைகள்
தந்திரமாகவே
வசியம்
செய்து விடுகிறது
நான் ரசிப்பதையே
நீயும் பேசி விடுவதால்
நம் சிந்தனையின்
புரிதலின்
காதலில்
கரைந்து விடுகிறது
அனைத்தும்...

## உறவு...

காதலில்
உருகிய
நாட்குறிப்புக்கள்
காற்றில் சிதறி
வலிக்கிறது ரணமாக

உறவுகள்
நடத்தும்
நாடகங்கள்
உணர்வுகள் மேடையில்
அந்தரித்து
அலைகிறது.




## புதிய...

மறந்துபோன
வீணையின்
புதிய சிணுங்கல்களாய்
இசைக்கிறது
என் ஆன்மா
பழகிவிட்ட நட்பில்
புதிய திருப்பமாய்
வந்து வந்து போகிறது
உன் வார்த்தைகள்.

என்
நரம்புகளில்
இசை மீட்ட
தேவையில்லை
இனி எனக்கொரு
மாலைப் பொழுது.

## வர்ணமாகுதல்...

காதலின் புதிய
பரிணாமமாகிறது
நீ
அள்ளி எறிந்த
என் இதயத்தின்
வலிகள்


உன் கைகளில்
தஞ்சிக்கும்
என் விழிகளின்
ஈரத்தை
ஏந்தத் தவிக்கும்
உன் தூரிகை.

வலிகளால் நெருப்பாகிய
என் இதயத்தை
வரைந்துவிடு
பல வர்ணங்களில்

# இலங்கை சுதந்திரதினம்

## பெப்ருவரி 4

-பரா குமாரசாமி-
ஜேர்மன்




**1948**-இல் இலங்கையின் சுதந்திர தினம் யாழ்ப்பாணத்தில் கொண்டாடப்பட்டபோது அப்போது பாடசாலைச் சிறுவர்களாகவிருந்த நாம் யாழ்ப்பாண மைதானத்திற்கு அழைக்கப்பட்டு இசைக்கேற்றபடி செய்யும் தேகப் பயிற்சி (musical drill) செய்யுமாறு கேட்டுக் கொள்ளப் பட்டிருந்தோம். தேகப்பயிற்சி முடிந்ததும் அனைவருக்கும் சிறு பைகளில் நிரம்பிய கேக் வகைகளும் இனிப்புக்களும் வழங்கப்பட்டன. அது பிரகாசமும் வெப்பமும் நிறைந்த ஒரு வெய்யில் நாள். வெள்ளையரான யாழ்ப்பாணத்திற்கான அரசாங்க அதிபர் ஹட்சன் (அவருடைய மற்றைய பெயர்களை மறந்து விட்டேன்) தன் சிவந்த முகத்தில் வியர்வை வழிய எமது சுதந்திரத்தைப் பற்றிய நீண்ட உரையாற்றினார். நிகழ்ச்சிகளின் முடிவில் வாண வேடிக்கைகள் இடம் பெற்றன.

நாங்கள் இருண்ட அமைதியான வீதி வழியாக வீடு திரும்பினோம். யாழ்ப்பாணத்தின் மக்கள் அன்றைய நாளின் சிறப்பான தன்மைக்கு அந்நியமாகவே இருந்தனர். நகரின் எப்புறத்திலும் கொண்டாட்டங்களிற்கான அறிகுறிகள் எதையும் நான் காணவில்லை.



இது சில மாதங்களுக்கு முன்னர் இந்திய சுதந்திர தினம் கொண்டாடப்பட்ட முறையிலிருந்து வேறுபட்டிருந்தது. இந்திய சுதந்திர தினத்தை கொண்டாடுமாறு பல அமைப்புக்கள் துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டிருந்தன. அவ்வமைப்புக்களின் பெயர்கள் அநேகமாக மகாத்மா காந்தியினதும் பாரத மாதாவினதும் பெயர்களுடன் தொடர்புடையனவாகவிருந்தன. அவை மகாத்மா காந்தியின் அகிம்சைப் போராட்டத்தின் மகத்தான வெற்றியினைச் சிலாகித்தன. இந்திய சுதந்திர தினத்தை கார்த்திகை விளக்கீடு போலக் கொண்டாடுமாறு அத்துண்டுப் பிரசுரங்களில் கேட்டுக் கொள்ளப்பட்டிருந்தது.

வேண்டுகோள்களுக்கிணங்க மக்கள் ஆவணி *15, 1947*-இல் விளக்குகள் கொழுத்தினர். மகாத்மா காந்தியினதும் பாரத மாதாவினதும் படங்களைத் தாங்கிய வண்ணம் ஊர்வலங்கள் சென்றன. நானும் ஓர் விளக்கைக் கொழுத்தினேன். சில மாதங்களுக்கு முன்னர் பட்டம் செய்து விளையாடியதில் எஞ்சிய திசுத் தாள்களிலிருந்து மூவர்ணக் கொடி செய்து கொண்டேன்.

கொண்டாட்டங்களில் மக்களின் ஈடுபாடு வித்தியாசப்பட்டதற்கு இந்தியாவில் இடம் பெற்ற சுதந்திரப் போராட்டங்கள் காரணமாகவே இருந்திருக்கலாம். இலங்கை மக்கள் இந்திய சஞ்சிகைகள் மற்றும் பத்திரிகைகள் மூலமாக நடைபெற்ற சுதந்திரப் போராட்டத்தின்பால் கவரப் பட்டிருந்தனர். மறு புறத்தில் இலங்கையின் சுதந்திரப் போராட்டமென்பது முதலாளித்துவத் தலைவர்கள் பிரித்தானிய அரசிற்குப் பெட்டிசன் அடித்தல் என்பதாகவே அமைந்திருந்தது. அமைச்சர் சபையிலுள்ள மந்திரிகளுக்கு மேலும் அதிகாரங்கள் வேண்டி பிரித்தானிய அரசை வலியுறுத்துவதே அவர்களுடைய தேவையாகவிருந்தது.



இத்தகைய நடவடிக்கைகள் மக்களின் மனங்களில் எந்தவித தேசப் பற்றையுந் தூண்டிவிடவில்லை.. ஆறுமுக நாவலர் போன்றோரினால் உருவாக்கப்பட்ட சைவ வேளாள உணர்வும் அனகாரிக தர்ம பால போன்றவர்களினால் உருவாக்கப்பட்ட பௌத்த சிங்கள உணர்வுகளும் இந்தியாவில் இடம் பெற்றது போன்ற தேசிய உணர்வலைகளை இலங்கையில் உருவாக விடவில்லை.

வருடங்கள் செல்ல சுதந்திர தினமென்பது இராணுவ அணிவகுப்புடன் தலை நகரில் இடம் பெறும் அரச வைபவமாகிப் போனது. அரச அலுவலகர்கள் அரச

கட்டிடங்களில் இத்தினங்களில் தேசியக் கொடியினை ஏற்றினர்.
ஆரம்பத்திலேயே இலங்கையர் என்ற உணர்வு தமிழர்களிடையே இல்லாமற் போனது ஏன்?

இதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். இதில் முக்கிய காரணமாக என் மனதிற் படுவது இலங்கையின் தேசியக் கொடிதான். இதற்கான காரணத்தை நான் அறிய முயற்சித்தேன்.

இந்திய இலங்கை தேசியக் கொடிகளை ஒப்பிட்டுப் பார்த்தால் பல்லினங்களையும் பல கலாச்சாரங்களையும் கொண்ட இந்தியாவின் அரசியல் யாப்பினை எழுதிய இந்தியத்தலைவர்கள் கவனமாக நடந்து கொண்டுள்ளனர். ஒரு மதச்சார்பற்ற நாட்டையும் மாநில அதிகார அரசியல் யாப்புடன் அமைத்தது மட்டுமன்றி அனைத்து மக்களினாலும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு தேசியக் கொடியும் உருவாக்கப்பட்டது.

இந்தியக் கொடி காவி வெள்ளை பச்சை என மூவர்ணங்கள் கொண்டது. இதில் காவி நிறமானது துணிச்சல், தியாகம், துறவறம் என்பனவற்றைக் குறிக்கும். வெள்ளை தூய்மையையும் உண்மையையும் குறிக்கிறது. பச்சை நிறம் செழிப்பையும் பக்தியையும் குறிக்கிறது. கொடியின் நடுவில் அமைந்த வெள்ளைப் பகுதியில் இருக்கும் தர்ம சக்கரம் பௌத்த தர்மத்தின் குறியீடான, கி.மு 2000 ஆண்டுகளுக்கு முன்னைய சின்னம். அச்சாணியிலிருந்து விட்டத்தைத் தொடும் 24 ஆரைகளும் சுழலும் சக்கரத்தின் மூலம் வாழ்வின் இயங்குதலையும் மரணத்தின் தேக்க நிலையையும் குறித்து நிற்பன. வாழ்க்கையின் தத்துவத்தை, விடுதலையை, அமைதியைக் குறித்து நிற்கும் இந்தக் கொடி, பிரதிநிதிக் குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு 1947 ஆவணி 15 இந்திய சுதந்திர தினத்தன்று ஏற்றப்பட்டது.

மறுபுறத்தில் சுதந்திரம் எமக்கு வழங்கப்பட்ட அத்தினத்தில் தேசியக் கொடி தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. கண்டிய இராசதானியின் கடைசி மன்னனான சிறி விக்கிரம ராசசிங்கனின் கொடியிலிருந்து அதை எடுத்துக் கொண்டனர். அந்தக் கொடி மூன்று கால்களை நிலத்திலும் வலது முன்னங்காலில் வாளினையும் வைத்திருக்கும் ஒரு சிங்கத்தினையும் கொடியின் நான்கு முனைகளிலும் நான்கு அரச இலைகளையுங் கொண்டிருந்தது.



அப்போதைய பிரதமர் D.S.சேனநாயக புதிய தேசியக் கொடியை உருவாக்குவதற்காக ஆலோசனைகள் வழங்கவென ஒரு குழுவினைத் தெரிவு செய்தார். அக் குழுவினால் ஆமோதிக்கப்பட்ட கொடியின் மாதிரியில் கடைசிக் கண்டிய மன்னனின் கொடியில் இருந்த வாளேந்திய சிங்கம் நான்கு அரச இலைகள் ஆகியனவற்றுடன் ஒரேஞ்ச், பச்சை நிறங்களில் நிலைக் குத்தாக இரு கோடுகள் சேர்க்கப் பட்டன.
கொடியில் காணப்படும் குறியீடுகள் ஒவ்வொன்றும் பின்வருவனவற்றைக் குறிப்பதாகச் சொல்லப்பட்டது:

கொடியிலுள்ள சிங்கம் சிங்கள இனத்தைக் குறிக்கிறது.

சிங்கத்தின் வாள் நாட்டின் இறைமையைக் குறித்து நிற்கிறது.

எட்டுப் படி நிலைகளைக் கொண்ட பௌத்த மார்க்கத்தினை சிங்கத்தின் வால் குறிக்கிறது.

சிங்கத்தின் சுருண்ட முடி மதத்தைக் கடைப் பிடித்தலையும் ஞானத்தையும் தியானத்தையும் குறிக்கிறது.

சிங்கத்தின் தாடி வார்த்தைகளின் தூய்மையைக் குறிக்கிறது.

வாளின் கைப்பிடி நீர், நெருப்பு, நிலம் காற்று என்பனவற்றைக் குறிக்கும்.

சிங்கத்தின் மூக்கு அறிவைச் சுட்டுகிறது.

முன்னங்கால்கள் செல்வத்தைக் கையாள்வதிற்குகந்த மாசற்ற தன்மையைக் குறிக்கின்றன.

ஒரெஞ்ச் நிறம் தமிழ்ச் சிறுபான்மையினத்தையும் பச்சை நிறம் முசுலீம் சிறு பான்மையினத்தையும் குறிக்கிறது.

கொடியின் நான்கு கரைகளிலும் உள்ள மஞ்சள் நிறம் ஏனைய சிறுபான்மை இனங்களைக் குறிக்கிறது.

நான்கு முனைகளிலும் உள்ள அரச இலைகள் பௌத்தத்தையும் நாட்டில் அதன் செல்வாக்கையும் குறிக்கின்றன. அன்பு, நட்பு, சமத்துவம், என்பனவற்றையும் அரச இலைகள் குறிக்கின்றன.

கொடியின் கருஞ் சிகப்புப் (maroon) பாகமானது ஏனைய சிறு மதங்களைக் குறிப்பிடுவன.

பல்லினங்களையும் மதங்களையும் கொண்ட இந்தியாவில் தர்ம சக்கரத்தை சமாதானத்தின் சின்னமாக தேசியக்



கொடியில் அனுமதிப்பதன் மூலம் பௌத்த மதத்திற்கு மதிப்பளிக்கப் பட்டது. இனவாத, யுத்தவெறி கொண்ட வாளேந்திய சிங்கத்தை இலங்கை தன் தேசியக் கொடியில் பொறித்துக் கொணடது. இது முழு நாட்டினையும் பிரதிநிதித்துவப்படுத்தவில்லை. இது கண்டி இராச்சியத்தினது கொடி. ஏனைய பகுதிகளை மட்டுமல்ல கோட்டை இராச்சியத்தையே அது பிரதிநிதித்துவப் படுத்தவில்லை.

சிறுபான்மையினர் பல்வேறு விதமாகக் கொடியில் பிரதிநிதித்துவப்படுத்தப்படுவதாகச் சொல்லப்படுகிறது. கொடியின் பிரதான வடிவமைப்பிற்கு(சிங்கம்) வெளியே ஒரு கரையில் சிறுபான்மை இனங்களிற்கான நிறங்கள் (ஒரேஞ்ச்,பச்சை) கோடிடப்பட்டுள்ளதானது அவர்கள் வெளியாட்கள் என்பதையே வலியுறுத்துகிறது. மஞ்சள் கரைக்கோடுகள் (boarder); ஏனைய சிறுபான்மை இனங்களைக் குறிக்கின்றன. கருஞ்சிவப்பு (maroon) ஏனைய மதங்களிற்கு. ஆனால் தேசியக் கொடி எதை வலியுத்துகிறது என்றால் இந்த நாடு பௌத்த சிங்களவர்களுக்கு மாத்திரமே சொந்தமானது என்பதையே.

பௌத்த மதத்தின் சிறப்பம்சங்கள் கொடியிலுள்ள மிருகத்தின் பகுதிகளாவே காட்டப்படுகின்றன. தர்மச்சக்கரத்தைப் போன்ற பௌத்த தர்ம குறியீடுகளிலிருந்து அவை பெறப் படவில்லை. சிங்கம் ஏந்தும் வாள் நாட்டின் இறமையைக் குறிக்கின்றதாம். அந்த வாள் சிறுபான்மையினரைக் குறிக்கும நிறங்களை நோக்கிக் குறி வைத்தபடி இருக்கிறது. நாட்டின் இறைமையைப் பாதுகாப்பதற்காக நாட்டின் வரலாற்றை இரத்தக் கறை நிரம்பியதாக வைத்திருப்பதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லைத்தான்.

தேசத்தின் தந்தை என அழைக்கப்பட்ட D.S.சேனநாயக்க, தேசியக் கொடியை வடிவமைத்த ஜீ.ஜீ.பொன்னம்பலம் போன்றவர்கள் ஐக்கிய இலங்கையின் புதைகுழியை வெட்டியவர்கள். இத்தகையவொரு கொடியை வடிவமைத்ததன் மூலம் இலங்கையர் என்ற உணர்வையும் புதைத்து மக்களையும் என்றைக்குமாய்ப் பிரித்தனர்.



துரதிஷ்டவசமாக சிறந்த ஆளுமைகளான Dr.அம்பேத்கபர், ஜவகர்லால் நேரு போன்ற மதச்சார்பற்ற சட்ட யாப்பு, தேசியக்கொடி என்பனவற்றை அமைக்கக்கூடிய தலைவரகள் எம்மத்தியில் இல்லாது போயினர்.



இதன் விளைவாக இன்று சுதந்திரம் பெற்ற 58 ஆண்டுகளின் பின் உலகின் ஒரு நகரிலிருந்து இன்னொன்றிற்கு இரத்தக்கறை படிந்த எம் கரங்களில் வாள் பிடித்த பயங்கரமான ஒரு சிங்கத்தையும் இரு துவக்குகளைத் தூக்கியபடி பயங்கரமான ஒரு புலியையும் கொண்ட கொடிகளைப் பிடித்தபடி சமாதானம் பற்றிப் பேசுவதற்காய் அலைகின்றோம்.

ஆங்கில மூலம் நன்றி : ஏசியன் டிரிபியுன் 04. பெப்ருவரி 2006

# கடவுளே ஏன் என்னைக் கை விட்டீர்?



## மகேஸ்வரி வேலாயுதம் EPDPக்கு முன்

ஜீவமுரளி - ஜேர்மன்

1984-இன் நடுப்பகுதிகளில் சென்னையில் உள்ள சாலிக்கிராமத்தில் ரெலோத்தலைவர் சிறிசபாரத்தினத்தின் அலுவலகத்தில் ஒரு அழகிய இளம்பெண் தலைவருடன் சிரித்துச்சிரித்து கதைத்துக் கொண்டிருப்பதாக கதை பரவிக் கொண்டிருந்தது. ரெலோதலைவரின் கட்டைபிரமச்சரியத்திற்கு அந்த அழகிய இளம்பெண் ஆப்பு வைத்துவிடப் போகின்றா என்ற சந்தேகம் பெடியங்களுக்கு ஏற்பட்டது. ஆனாலும் தலைவரில் உள்ள விசுவாசமும் நம்பிக்கையும் சந்தேகங்களை தவிர்க்க முற்பட்டன. கேள்வி கேட்டல் சந்தேகப்படல் என்பன தற்கொலை செய்துகொள்ததற்கு ஒப்பான சூழல் அது. அந்த இளம்பெண் மரியாதைக்கு உரிய ஒருவராக ரெலோ பெடியங்களால் அணுகப்படவோ பார்க்கப்படவோ பேசப்படவே இல்லை. ஒரு பெண் தலைவருக்கு முன் சரிக்குசமமாக இருந்து அதுவும் சிரித்துச் சிரித்து அரசியல் பேசிக்கொண்டிருப்பது பெடியங்களுக்கு எரிச்சலையும் ஆச்சரியத்தையும் தந்தன. தூசணங்களை மொழியாகவும் தூசணங்களை உணவாகவும் தூசணங்களை கனவு காணும் வழமையைக்கெண்ட இயக்கப் பெடியளால் அதை ஜீரணிக்கமுடியவில்லை. தமிழ்ஈழம் என்ற தேவதையை கனவு காணும் பெடியங்கள் கட்டாயத்தின் பெயரில் தங்களின் ஆணுறுப்புக்களை களட்டிவைத்துவிட்டு தூசணங்களின் துணையுடன் உயிர் வாழ்ந்தார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. இத்தனைக்கும் பிரச்சாரப்பிரிவுக்கென ஐம்பது பெண்கள்வரை மனேமாஸ்டரால் உள்வாங்கப்பட்டனர்.

ரெலோவின் பிரச்சார பிரிவு மனோமாஸ்டரால் உருவாக்கப்பட்டது. மனோவாத்தியை குழப்பவாதி துரோகி என தூக்கி ஒரு மூலையில் போட்டுவிட்டார் சிறியர். ரெலோவின் பிரச்சார பீரங்கிப்பிரிவு தவைரின் கடைக்கண் பார்வையுடன் தானாகவே கற்க முயற்சி செய்து கொண்டிருந்தது. தோழர் கம்பன் முலம் மாஓ சேதுங், கோாசிமின் கோட்பாடுகளும் மட்டக்களப்பைச் சேர்ந்த தோழர் சண்-மூலம் ரசியப்புரட்சியும் லெனினும் மாக்சும் என கோட்பாடு புரட்சி என வரிக்குவரி ஆண்டுகள் மறக்காமல் மனப்பாடமும் செய்துகொண்டு கண்டதையும் கற்றுக்கொண்டிருந்தோம். பின் தோழர் வி.பொன்னம்பலம் அவர்களின் வருகை கற்பதற்கான ஆசையையும் சர்வதேச அரசியல் குறித்த பார்வையையும் தந்தன. எண்ணம் சஞ்சிகை ஆசிரியர்களில் ஒருவரான தோழர் மகாதேவாவின் வருகை சிங்களவனை வெட்டவும் சுடவும் பயிற்றுவிக்கப்பட்ட தோழர்கள் பலரை இனவாத மனநிலையிலிருந்து மீட்டெடுத்தது. இந்த சூழல் கருத்துமாற்றக்களையும் விவாதங்களையும் ஏற்படுத்தின. ஆனாலும் அந்த அழகிய இளம்பெண் அடிக்கடி தலைவரின் அலுவலகத்துக்கு வந்து போவதும், தலைவருடன்

சிரித்துச்சிரித்து அரசியல் பேசிக்கொள்வதும், புரட்சிக்கு குந்தகம் விளைவிக்கலாம் என்ற கருத்தில் மட்டும் மாற்றமிருக்கவில்லை.

இந்தளவிற்கும் பிரச்சாரப்பிரிவில் பெண்கள் இருந்தார்கள். இயங்கியல் என்பது மாற்றங்களே என மனப்பாடம் செய்துகொண்டு நாங்கள் மட்டும் மாறாமலிருந்தோம். பிரச்சார பிரிவு தமிழ் நாடெங்கும் பிரச்சாரத்திற்காகவும் காசு சேர்ப்பதற்காகவும் முடுக்கி விடப்பட்டது. பிரச்சாரப் பிரிவிலிருந்து ஒரு பெண் தோழர்கூட காசு சேர்ப்பதற்கோ, கொள்கை பிரச்சாரத்திற்கோ அனுமதிக்கப் படவில்லை. இந்தப் பெண்கள் பெருந் தலைவர்களுக்கும் தலைவர்களின் எடுபிடிகளுக்கும் அடியாட்களுக்கும் உருசியாக சமைத்துப் போட்டுக்கொண்டிருந்தார்கள். மாற்றத்துக்காக அவர்களுடன் சிரித்து சிரித்து பேசிக்கொண்டிருந்தார்கள் அல்லது சினிமா பார்க்கப் அனுப்பப்பட்டார்கள். இந்தச்சூழலில்தான் அந்த அழகிய இளம்பெண் தலைவருடன் சிரித்துச்சிரித்து அரசியல் பேசிக் கெண்டிந்தார்.

குத்துமதிப்பாக இரண்டு பிரச்சார பீரங்கிகளுடன் இந்திய அரசால் உத்தரப்பிரதேசத்தில் பயிற்றுவிக்கப்பட்ட நான்கு இராணுவ முட்டாள்கள் என்ற வீதத்தில் அனுப்பப்பட்டார்கள். என்னையும் வின்சனையும் கண்ணகி கருக்கிய மதுரைக்கு அனுப்பினார்கள். நானும் வின்சனும் அங்கே ஏற்கனவே இருந்த நான்கு இராணுவமுட்டாள்களுடன் சேர்ந்து கொண்டோம். யு பி ரெயினிங் என பெடியங்களால் பெருமையாக சொல்லப்படும் உத்தரப்பிரதேசத்தில் இராணவமுட்டாள் பயிற்சியை பெற்றவர்கள் அவர்கள். நானும் வின்சனும் மாஓசேதுங்கையும் மாக்சையும் லெனினையும் மனப்பாடம் செய்த பதினெட்டு வயது நிறையாத டெலோவின் பிரச்சார பீரங்கிகள். யுபி ரெயினிங் முடித்து துரையை சயிக்கிளில் அவன் சொல்லுமிடமெல்லாம் கூட்டிச்செல்வதுதான் எனக்கு இடப்பட்ட கட்டளையாகவும் வழக்கமாயிருந்தது. இந்த இராணுவ முட்டாள்களின் முன்முடிவுகளும் முன் ஏற்பாடுகளும் எனக்குத் தெரிந்திருக்கவில்லை. நான் சைக்கிள் உளக்க இடுப்பிலிருந்த கட்டைத்துப்பாக்கியை அடிக்கடி தொட்டுப்பார்த்தபடி துரை பாரில் இருக்க மதுரையில் நரிமேட்டிலிருந்த தமிழர் தகவல் நடுவதிற்கு சென்றோம். அங்கே தலைவர் சிறிசாபாரத்தினத்துடன் சிரித்துச்சிரித்து அரசியல் பேசிய இளம் பெண்ணை மறுபடியும் கண்டேன். பதினாறு ஆயுத இயக்கங்கள் முளைவிட்டிருந்த 1985ன் காலப்பகுதிக்கு முன்பே தமிழர் தகவல் நடுவம் என்றொரு அமைப்பு மதுரை நரிமேட்டில் இருந்துகொண்டு தமிழர்களுக்கு நடக்கும் கொடுமைகள் பற்றி பிரச்சாரமும் செய்துகொண்டு சாப்பாட்டுக்கு காசில்லை என்றுவரும் எல்லா இயக்க பொடியங்களுக்கும் காசு கொடுத்துக்கொண்டிருந்தது. அங்கே புலிகள்தொடக்கம் குட்டி இயக்கங்கள்வரை காசு வாங்க வந்து போய்கொண்டிருந்தன. நாங்களும் சிரித்துச் சிரித்து அரசியல் பேசும் அந்த அக்காவிடமிருந்து 1000ரூபா காசை சாப்பாட்டுக்கென சொல்லி வாங்கிக் கொண்டு போனோம். எங்களுக்கு சாப்பாட்டுக்கும் இதரசெலவுகளுக்கும் காசு தேவைப்படும்போது சிரித்துச் சிரித்து அரசியல் பேசுகின்ற அக்காவின் அலுவலகத்திற்கு துரை என்னையும் கூட்டிச்செல்வான். அவவும் காசுதந்து அனுப்புவா. இந்தமுறை பெரியதொகை பத்தாயிரம் ரூபாவை துரை கேட்கப்போய் மறுத்துவிட்டா. "இல்லையக்கா எங்களுக்கு அவசரத்தேவை இரண்டு நாளில் வருவன் எனக்கு பத்தாயிரம் ரூபா வேணும்" என்றபடி துரை சைக்கிள் பாரில் அமர்ந்தான். துரை ஒரு முட்டாள் இராணுவ மனிதனுக்கான முறுகிய உடலமைப்பைக் கொண்டவன். தன் உடல்வலிமையில் பெருமிதமும் கட்டைத்துப்பாக்கியில் நம்பிக்கையும் கொண்டவன். நான் மாஓசேதுங்கையும் கோசிமினையும் லெனினையும் மாக்சையும் மனப்பாடம் செய்பவன். நாங்கள் இருவரும் ஒரு சைக்கிளில் மதுரையை வலம் வந்து கொண்டிருந்தோம். இரண்டு நாட்களின் பின் தமிழர் தகவல் நடுவத்திற்கு துரையுடன் போனேன். "என்ன தம்பியவை?" என்று சிரித்துக்கொண்டே அக்கா வந்தா. துரை இடுப்பிலிருந்த கட்டைத்துப்பாக்கியை எடுத்து சாப்பாட்டு மேசையின் மேல் வைத்துவிட்டு "என்னக்கா நான் கேட்டது கிடைக்குமா" என்றபடி நின்றான். "தம்பி துரை உந்த எடுவை எடுத்து என்னட்டை காசு வாங்லோது. துவக்கை எடுத்து இடுப்பில செருகும்" என சிரித்துக்கொண்டு சொன்னா. உங்களுக்குமட்டுமில்ல மற்றபெடியங்களும் காசுக்கு வருவாங்கள் அவங்களுக்கும் குடுக்கவேணும் உங்கட சுபாஸ் நேற்றுத்தான் ஐயாயிரம் ரூபா வாங்கிக்கொண்டு போறான் என்றவுடன் துரையின் முகம் இறுகியது.

மறுநாளே சுபாஸும் அவனது பொடிகாட்டுகளும் ஒரு வானில் வந்து இறங்கினார்கள். நான்கைந்து நாள் நாங்கள் இருந்த வீட்டில் தங்கியிருந்து பகல் வேளைகளில் 304 காட்ஸ் விளைாடினார்கள் மாலை ஐந்துமணிக்கு பின் மறைந்துவிடுவார்கள்.

ரெலோவுடன் உத்தரப்பிரதேசத்தில் பயிற்சி பெற்று சென்னை திரும்பும் இரயிலில் இருந்து இறங்கி தப்பியோடி ரெலா என்ற இயக்கத்தை தொடங்கிய ரெலா ராஜன் மதுரையில்தான் இருந்தான். இன்னும் தப்பியோடிய ஐந்து போர்கள் புலிகளுடன் இருந்தார்கள். புலிகளுக்கு இந்தியஅரசால் பயிற்சி மறுக்கப்பட்டபோது புலிகளால் இவர்கள் ரெலோவுக்குள் அனுப்பப் பட்டவர்கள் என்று நம்பப்பட்டது. இவர்களையெல்லாம் பிடித்து போட்டுத்தள்ளுவதற்காக தலைவரால் அனுப்பப்பட்ட உளவுப்பிரிவின் தலைவன்தான் சுபாஸ். எந்த மனிதர்களாலேயுமே அவனது கண்களை நேருக்குநேர் பார்க்கமுடியாது. அப்படி தவறிப் பார்த்து விட்டால் வாழ்நாள் முழுக்க தூங்கவே முடியாது. ரெலாராஜனை சுபாசும் பொடிக்காட்டுகளும் மதுரை தெருக்களெங்கும் துரத்தித்திரிந்தும் பிடிக்கமுடியவில்லை. இரண்டுமுறை மதிலேறிப்பாய்ந்து தப்பிப்பிழைத்தான். ரெலாராஜனுக்கு தனது அலுவலகத்தில் அடைக்கலமளித்தது சுபாஸிடமிருந்து அவனைக் காப்பாற்றிவிட்டது சிரித்துச்சிரித்து அரசியல் பேசும் அதே அக்காதான். பின்நாட்களில் அதே ரெலா ராஜனால் துப்பாக்கி

முனையில் அக்கா மிரட்டப்பட்டார். நன்றி மறப்பது நன்றன்று. தின்ற வீட்டுக்கே இரண்டகம் செய்யாதே என குழந்தைகளுக்கு கற்பித்துக்கொண்டு இருக்கும் தமிழ் அடையாளக் கலச்சாரமும் மாவ்வியாக் கலாச்சாரமும் இந்த இடத்தில் நெருங்கிவந்த காலமது. பின்நாளில் சாப்பாடு தந்த சனங்களையெல்லாம் போட்டுத்தள்ளியது தமிழ்த்தேசிய அடையாளக் கலாச்சாரம்.

மாஓசேதுங்கையும் கோசிமினையும் லெனினையும் மனப்பாடம் செய்து, எங்களையும் மனப்பாடம் செய்யவைத்த தோழர் கம்பனின் சகோதரிதான் சிரித்து சிரித்து தலைவர் சிறிசபாரத்தினத்துடன் சரிக்குச்சமன் இருந்து அரசியல் பேசிய அந்த அழகிய இளம் பெண் மகேஸக்கா என்ற மகேஸ்வரி வேலாயுதம் என்பது அவரின் சகோதரர்களான சர்வேஸ்வரனையும் கணேசையும் மதுரையில் சந்தித்தபின்பே தெரியவந்தது. தோழமையுணர்வும் பேச்சுத்திறமையும் தேடலுமுள்ள கம்பன் புலிகளால் ரெலோ அழிக்கப்பட்ட பின் தற்கொலை செய்து கொண்டார் என அறிந்தேன். ஏன் எப்படி எதற்கு என்பது இதுவரைக்கும் தெளிவில்லாத ஒரு கனவைப்போலவேயிருக்கின்றது.

மதுரைக்கு பக்கத்தில் உள்ள அருப்புக் கோட்டை என்ற பெரிய கிராமத்தில் ஒரு பாடசாலை விழாவில் தமிழ் இளைஞர்பேரவையின் ஆரம்பப்போராளிகளில் ஒருவரான சத்தியசீலனுடன் மகேஸ் அக்காவும் பிரதம விருந்தினர்களாக அழைக்கப்பட்டு தமிழ் மக்களுக்கு நடக்கும் கொடுமைகள் பற்றி பேசிக் கொண்டிருந்தார்கள். அங்கே நானும் வின்சனுமிருந்தோம். பாடசாலை மாணவர்கள் கலையும் கலைவிழாவுமாக பாட்டும் கூத்துமாகவிருந்தனர். எங்களுக்கோ சிங்களவனைக் கொல்லவேணும் எண்டதை தவிர வேற ஒரு அறுப்பும் தெரியாது. அந்த ஆத்திரத்தில இருக்க என்னையும் ரெலோ சார்பில் மேடைக்கு பேச அழைத்தார்கள். நான் பேசிய இரண்டு வரிகள் இவைதான். தமிழ் நாட்டு மக்களே அங்கே தமிழன் கொல்லப்படுகிறான் பெண்கள் கற்பழிக்கப்படுகிறார்கள் நீங்கள் இங்கே பாட்டும் கூத்துமா போட்டுக் கெண்டிருக்கிறீர்கள். எனது பேச்சு பாடசாலை மாணவர்களை சங்கடப்படுத்தியது. அந்தச் சங்கடத்திற்காக மகேசக்கா அல்லது சத்தியசீலன் யாரோ ஒருவர் அவர்களிடம் மன்னிப்புகேட்டு சமாதானம் செய்தார்கள். தமிழன் கொல்லப்படுகிறான் தமிழ்ப்பெண்கள் கற்பழிக்கப்படுகிறார்கள் என்ற பிரச்சாரத்தின் நீட்சிதான் இயக்கங்களுக்கு தமிழ் நாட்டு மக்களிடம் இருந்து ஆதரவையும் காசையும் உறவுகளையும் பெற்றுத்தந்தன. மாறாக இதை மீறி மகேசக்கா குறுங்குழுவாத அரசியலுக்கு அப்பாற்பட்டு செயற்பட்டார் என்றே நினைக்கிறேன். தமிழ்நாட்டில் உள்ள மாவடங்கள் வட்டங்கள் என நகைச்சுவை கலந்து அழைக்கப்படும் அரசியல் தொண்டர்கள் முதல் லயஸ்ன்கிளப் றோட்டரிக்கிளப் புள்ளிகள் பொலிஸ்அதிகாரிகள் மற்றும் எம்.எல்.ஏக்கள் எம்பிக்கள் மாணவத்தலைவர் எல்லாரிடமும் செல்வாக்குப் பெற்றிருந்தார். அவர்களெல்லாம் கிராமங்களிலும் நகரத்திலும் கூட்டங்கள் ஏற்பாடு செய்து மகேசக்காவை பேசவைத்து மடிநிறைய பொற்காசும் பொற்கிளியும் கொடுத்து வாழ்க தமிழ்ஈழம் என வாழ்த்தினார்கள். அவர் கிராமம் கிராமாக சென்று மேடையேறிப் பேசி சேர்த்த காசிலதான் பதினாறு இயக்கங்களும் மதுரையில் சாப்பிட்டு வளர்ந்தன. இயங்கங்கள் மக்களிடமும் அரசியல் தலைவர்களிடமும் அங்கீகாரம் பெறுவதற்குமுன் மகேசக்காவின் பேச்சுத்திறனும் அவரின் செயற்பாடுகளும் அங்கீகாரம் பெற்றிருந்தன. பொலிஸ் அதிகாரிகளின் புள்ளட் மோட்டார் சைக்கிளின் பின்னாலிருந்தும் அரசியல் தலைவர்களின் கார்களிலும் கூட்டங்களுக்கு சென்று பேசியிருக்கிறா. அவவிடம் காசைமட்டும் வாங்கிகொண்டு ஆண்களுடன் நெருங்கிப்பழகிறா மோசமான பொம்பிளை என தமிழ் கலாச்சார காவலர்கள் திட்டிக்கொண்டிருந்தார்கள். அவ யாரையும் பொருட்படுத்தியதாக தெரியவில்லை. திருமணம் செய்து கொள்ளாமல் கலாச்சாரக் காவல்நாய்களின் ஏச்சுக்கும் பேச்சுக்கும் கிண்டலுக்கும் ஆளாகி கடைசிவரைக்கும் சிரித்துச்சிரித்து அரசியல் பேசிக்கொண்டும் மனித உரிமைகளுக்காகவும் தனது வாழ்வை பலியிட்டார். வெட்டிக்கொல்லாமல் மண்டையில் போட்டுத்தள்ளாமல் முதுகில் குத்தாமல் சிரித்துச்சிரித்தே அரசில் செய்யலாம் பேசலாம் என்ற மிகச்சாதாரமான மனித பண்பை வாழ்ந்து காட்டியிருக்கிறார். இதெல்லாம் நாசமாய் போகிற தமிழ் அரசியல் இரசிக மணிகளுக்கும் கொலைகாரத் தலைவர்களுக்கும் எங்கே விளங்கப்போகுது.

"துரோகம்" இந்த வாத்தையின் அர்த்தமதுதான் என்னவென இன்றுவரை தேடிக் கொண்டிருக்கிறேன் மகேசக்கா. உருவமற்ற உயிரற்ற மனித உடல்களா? அல்லது நாம் சாப்பிடும் சோற்றுப் பருக்கைகளா? குழந்தையின் சிரிப்பா? தாயின் மார்பகங்களா? தாயின் அணைப்பா?
துரோகம் என்பது இராணுவ முட்டாளின் கனவின் கற்பிதமாக ஒரு அடிமுட்டாளின் நம்பிக்கையாகவும் ஆசையாகவும் இன்று இருக்கிறது மகேசக்கா. ஆனால் உண்மையிலும் உண்மை அது யாழ்மையவாதத்தின் ஆண்குறி. அழுகிக் கொண்டிருக்கும் குரூரமான ஈவு இரக்கமற்ற ஆண்குறி. அது அழுகிவிழும் என்ற நம்பிக்கை யாருக்குமேயில்லை. அதைவெட்டியெறிவதே சிரித்துச்சிரித்து அரசியல் பேசுகின்ற அரசியல் செய்கின்ற ஒரு காலத்தை பெற்றுத்தரும்.

நினைவுகளை மீட்டெடுத்து, மீட்டெடுத்த நினைவுகளை அழிக்கும் வழமையில் வாழும் நான் கனவுகளே வராத ஒரு தூக்கத்தை வேண்டி நிற்கின்றேன்.
கனவுகள் தூக்கத்தின் எதிரிகள்.
கனவுகள் கண்களின் எதிரிகள்.
கனவுகள் நினைவுகளை மீட்டெடுக்கும் நோய்கிருமிகள்.
ஆதலால் என் தூக்கத்தை கலைக்காத கனவொன்றை நான் காணவிரும்புகிறேன்.
என் நினைவுகளை அழித்துவிட்டு வருகின்ற கனவொன்றை நான் காண விரும்புகிறேன். ❍



# 2008ம் ஆண்டிற்கான Zola பரிசில்

Tove Smaadahl

-ஆர்த்தி நோர்வே-

பெண்கள் பாதுகாப்புச் செயலகத்தின் தலைவி தோவ ஸ்மோடால் அவர்களுக்கு 2008ம் ஆண்டிற்கான **zola** பரிசில், பெண்களுக்கெதிராக இழைக்கப்படும் வன்முறைகளுக்கெதிரான அவரது பணிகளுக்காக வழங்கப்பட்டுள்ளது. மனித மேம்பாடுகளை பேணுவதிலும் நாட்டின் சகல பிரசைகளுக்குமான ஜனநாயகம், சட்டரீதியான பாதுகாப்பு போன்றவை நடைமுறைப்படுத்தப்படுவதில் உழைப்பவர்களுக்கும் இந்தப்பரிசில் ஆண்டுதோறும் வழங்கப்படுகின்றது. இந்த வரிசையில் இந்த ஆண்டிற்கான பரிசை பெற்றுக்கொள்ளும் தோவ ஸ்மோடால் அவர்கள், பல ஆண்டுகளாக பெண்கள் பாதுகாப்புச் செயலகத்தின் தலைவியாக பணி புரிந்து வருகின்றார். இவர் பல கொலை மிரட்டல்களுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் ஆளானவர் என்பது குறிப்பிடத்தக்கது. பெண்களுக்கு இழைக்கப்படும் வன்முறைகளுக்கெதிரான பணிகளில் தன்னை மிகவும் ஈடுபடுத்திக்கொண்டுள்ளார்.

ஜனவரி 14, ஒஸ்லோவில் பரிசளிப்பு வைபவத்தில் கலந்து கொண்டு நன்றியுரை ஆற்றுகையில் தன்னோடு இணைந்து பணியாற்றியவர்களை நன்றியுடன் நினைவு கூர்ந்தார். தனக்குக் கிடைத்த இந்தப்பரிசினை வன்முறைக்கெதிராக போராடுகின்ற அனைத்துப் பெண்களோடும் பகிர்ந்து கொள்வதாக தெரிவித்தார்.

பெண்கள் பாதுகாப்பகமும் அது சார்ந்த பெண்களும் அவர்கள் மேற்கொண்ட சட்டபூர்வமான செயற்பாடுகளும், வன்முறைக்குள்ளாக்கப்பட்ட பெண்களுக்கும் அவர்களது குழந்தைகளுக்கும் மிகவும் முக்கியமானதொன்றாகும். எனது பங்களிப்பு இந்த முயற்சிகளின் ஒரு பகுதியேயாகும். எனது வேலைகளினூடாக தனிப்பட்டரீதியானதும் சமூகரீதியிலானதுமான போராட்டங்களைச் சந்தித்துள்ளேன்.


பெண்களுக்கு இழைக்கப்படும் வன்முறைகளிற்கெதிரான எங்களது பணிகளுக்கு இந்தப்பரிசு மிகவும் உந்துசக்தியாக அமைந்துள்ளது. பலவருடங்களாக மேற்கொள்ளப்பட்டு வரும் இந்தப் போராட்டம் இன்னும் முழுமூச்சுடன் தொடரும். தொடரப்பட வேண்டிய கட்டாயமும் உள்ளது. இருப்பினும் எங்களது இந்த முயற்சிகளிற்கு எதிர்ப்பும் எமது சமூகத்திடமிருந்து உள்ளது. என்னைப் பொறுத்தவரை இந்தப் பரிசில் எனக்கு தன்னம்பிக்கையையும், தொடர்ந்து இந்தப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்குமுரிய பலத்தையும் தந்துள்ளது.பெண்களுக்கெதிரான வன்முறைகள் இல்லாத உலகத்தில் நாங்கள் எப்பொழுது வாழ முடிகிறதோ துரதிர்ஸ்டவசமாக அதுவரையில் பெரும்பணிகள் எங்கள்முன்னே காத்திருக்கின்றன.

"உலகம் முழுமையும் பெண்களும் குழந்தைகளும் வழக்கமாக வீடுகளில் ஆண்களினது வன்முறைக்கு ஆளாக்கப்படுகின்றனர் என்பதைக் கண்டித்து குரல் கொடுப்பது எங்களது கட்டாயமான கடமையாகின்றது."

"பால்வினைத் தொழிற்சாலையில் பெண்கள் விற்பனைப் பண்டங்களாக்கப்படுவதை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதையும் கண்டித்து குரல் எழுப்புவது எங்களது கட்டாயமான கடமையாகின்றது."

இறுதியாக அவர் தனதுரையில் எல்லோரும் ஒன்றிணைந்து எங்களது இலக்கை எட்டுவதற்கு பாடுபடவேண்டுமென்று கேட்டுக் கொண்டார். ஒவ்வொரு தனிமனிதர்களும் எல்லாவிதமான உரிமைகளோடும் தமது ஒவ்வொரு நாளையும் பாதுகாப்போடும் முன்னேற்றத்திற்கான வழிமுறைகளோடும் வாழ உரிமையுள்ளவர்களாக இருக்கிறார்கள். மனித உயிர்கள் பெறுமதி இழந்து படுகொலை என்பது எங்களது நாளாந்த வாழ்க்கையில் ஒரு நிகழ்வாகிப்போன நிலையில், வன்முறைக்கும், அச்சுறுத்தல்களுக்கும், பாலியல் வன்புணர்விற்கும் ஆளாவதிலிருந்தும் விடுபட்டு வாழக்கூடிய சூழல் உருவாக்கப்படவேண்டும்.

வன்முறைகளற்ற வாழ்வு அடிப்படை மனித உரிமைகளில் ஒன்று என்றும் குறிப்பிட்டார்.



-ம.மதிவண்ணன்-
தமிழ்நாடு

# மதுரைவீரன் பாட்டு

(1)

செருப்பு தைக்கும் பையை
மறுத்து என் பூட்டனின்
வாளை கையிலெடுத்தது முதலாய்
பூதாகரமாய் வளர்ந்து பெருகி
உங்கள் பீதி
பின் தொடர்கிறது என்னை.
நீங்களோவெனில்,
என் துடிப்பை நடுக்கமென்றும்
சிலாவரிசையைத் தள்ளாட்டமென்றும்
மொழி பெயர்த்து
மொழியில் சதியெழுதி
உலவ விட்டுக் கொண்டிருக்கிறீர்கள்.

(2)

பாளையக்காரன் மகளைச் சிறையெடுக்க
வெள்ளைக் குதிரை ஏறிய கணம்
வீரனுக்குப் புலப்பட்டவை:
கானகத்து விதிகளென்ன?
வேட்டையின் நுட்பங்கள் எவை?
நகர்வுக்குத் தடையான
அன்றாடமெனும் வலையறுத்து
காலத்தின் திசையில் பயணிப்பது எப்படி?
மற்றும்,
ஏற்பைப் பெறுவதில்
கடைசிக்கு அடுத்தவனாகவும்,
நியமந்தவறா தண்டனைகளுக்கு
முதல்வனுக்கு முந்தினவனாகவும்
நிறுத்தப் பட்டிருக்கும்
மாதியனுக்கும் சேர்த்துதான்
உலகம் உருண்டையென்று.

(3)

என் பிரிய பொம்மியிலிருந்து
அவ்வப்போது எட்டிப் பார்க்கிறாள்
பொம்மணன் மகள்.
அவள் தடுமாறுகிறாள்
நான் பதறுகிறேன்
அருகில் எங்கோ
அரவத்தின் வாடை அடிக்கிறது.

அவள் பிடிவாதம் பிடிக்கிறாள்;
கையறு நிலையில் தத்தளிக்கிறாள்
சின்னானும் செல்லியும்;
என் வரம்பு எனக்குத் தெரியவில்லை.

சிறையெடுத்து வந்தநாள் முதலாய்
சிறையிருக்கிறான் வீரன்.

(4)

அ.
உன் கள்ளப் புன்னகையில்
கொஞ்சத்தை
மடியில் எனக்காக வைத்துக்கொண்டு
விடிகிறது ஒவ்வொரு நாளும்.

ஆ.
அகப்பட்டாயா?
ஆட்கொண்டாயா?
அடி வெள்ளையம்மா!
உன் அழகெனக்கு
இரையா?
தூண்டிலா?

இ.
கூப்பாடு போட்டுக் கரையும்
இக்கூட்டத்தின் நடுவே
உன் மீதான மோகத்தைச்
சுமக்கிறேன்
காலங் கடந்து கனிந்த
கர்ப்பத்தைப் போலே.



# பெண்கள் தினம்

Alexandra Kollontai (1913)



*தமிழில்: பானுபாரதி*

ரஷ்ய புரட்சியாளரான Alexandra kollonthai 1972 ல் சென் பீட்டர்ஸ்பேர்க்கில் பிறந்தவர். இவரது தந்தை ரஸ்யப் படையில் இராணுவத் தளபதியாக இருந்தார். தாயார் finlandஐச் சேர்ந்த ஒரு பண்ணை உரிமையாளரது மகள். அந்த நேரம் finland ரஸ்யாவினது ஒரு பகுதியாக இருந்தது. அவரது கல்வியை அங்குதான் தொடர்ந்தார். இந்த வேளையில்தான் தொழிலாளவர்க்கத்தினரதும் விவசாயிகளினதும் பிரச்சனை பற்றி அறிந்து கொள்கிறார்.

1893ல் தனது மைத்துனரைத் திருமணம் செய்துகொண்டவருக்கு குடும்ப வாழ்க்கை மிகுந்த ஏமாற்றத்தையே தந்தது. வீட்டுக்குள்ளே தான் சிறைப்படுத்தப் பட்டதாக உணர்கிறார். ஒரு பெரிய நெசவாலை ஒன்றின் கண்காணிப்பின்போது தொழிலாளர் குடியிருப்பொன்றில் இறந்து கிடந்த சிறுவனொருவனைக் காண்கிறார். இந்த நிகழ்வு அவரது வாழ்க்கையின் ஒரு திருப்புமுனையாக, அவரை ஒரு புரட்சியாளராக மாற்றியதெனலாம்.

1890களின் பின்னதாக அரசியலில் ஈடுபடத் தொடங்கும் kollontai 1898ல் தனது குடும்ப வாழ்க்கையை விட்டு வெளியேறியபின் அரசியல் பொருளாதாரம் கற்பதற்காக சூரிச் செல்கின்றார். 1914களிலிருந்து போல்சிவிக் கட்சியில் இணைந்து செயற்படுகின்றார். அவரது முதலாவது படைப்பான "குழந்தைகளும் அவர்களது சுற்றாடலுக்கும் இடையிலான அபிவிருத்தி" மார்க்சிய சஞ்சிகையான "Obrazovaniie"ல் வெளியாகியது. 1914களிலிருந்து போல்சுவிக் கட்சியில் இணைந்து செயற்படுன்றார். லெனினது மத்திய கமிட்டியின் ஒரேயொரு பெண் உறுப்பினர். தொடர்ந்த அவரது செயற்பாடுகளில் சர்வதேச பெண்களியக்கத்தின் செயலாளராகவும் புரட்சிக்குப் பின்னர் அரசின் சமூக காப்புறுதியில் மக்கள் ஆணையாளராகவும், சோவியத் குடியரசின் ஸ்கன்டிநேவியன் நாடுகளுக்கான தூதுவராகவும், ராஜதந்திரியாகவும் பணியாற்றினார்

பெண்கள்தினம் என்பது என்ன? உண்மையில் அப்படியொன்று தேவைதானா? இது மத்தியதரவர்க்கப் பெண்களினதும், பெண்களினது வாக்குரிமைக்காகப் போராடியவர்களினதும் நாளாக ஒப்புக் கொள்ளப் பட்டதில்லையா? இது தொழிலாளர் இயக்கத்தின் ஒற்றுமைக்குப் பாதகமான விடையம் இல்லையா? இவ்வாறான மாறுபட்ட கருத்துக்கள், ஆட்சேபனைகள் இன்னமும் ரஷ்யாவில் கேட்டவண்ணம்தான் இருக்கின்றன. ஆனால் வெளி நாடுகளில் இத்தகைய ஆட்சேபனைகள் தற்போது எழுவதில்லை. அங்கே தேவைகள் நிறைவு செய்யப்பட்டு வாழ்க்கையைப் பற்றிய தெளிவான பதில்களை அவர்கள் கொண்டுள்ளனர்.

பெண்கள் தினம் என்பது பெண் தொழிலாள இயக்கத்தின் நீண்ட இறுக்கமான ஒரு சங்கிலியின் பிணைப்புப் போன்றது. ஒழுங்கமைக்கப்பட்ட பெண் தொழிலாளர் படையின் படிப்படியான உழைப்பினால் உருவாக்கப் பட்டுள்ளது. இருபது வருடங்களுக்கு முன்பு சிறிதளவிலான தொழிலாளப் பெண்களே இங்கும் அங்குமாக தொழிற் சங்கங்களிலும் கட்சிகளிலும் இணைந்திருந்தனர். இப்போது 292000 இற்கும் மேற்பட்ட பெண் உறுப்பினர்கள் ஐரோப்பிய தொழிற்சங்கங்களில் இருக்கின்றனர். ஜேர்மன் தொழிற் சங்கத்தில் இரண்டுலட்சம் உறுப்பினர்களும், ஒருலட்சத்து ஐம்பதாயிரம்பேர் தொழிற் கட்சியிலும், ஒஸ்ற்ரியாவில் 47,000 உறுப்பினர்கள் தொழிற் சங்கத்திலும், இருபதாயிரம் உறுப்பினர்கள் கட்சியிலும் அங்கம் வகிக்கின்றனர். இத்தாலி, ஹங்கேரி, டென்மார்க், ஸ்வீடன், நோர்வே, சுவிட்சர்லாந்து போன்ற நாடுகளில் பெண்கள் அமைப்பாக ஒன்று பட்டனர். சோசலிசப் பெண்கள் அமைப்பில் அங்கம் வகிக்கும் பெண்கள் ஒரு மில்லியன் ஆகும். எத்தகைய மிகப்பெரிய பலம் வாய்ந்த சக்தி! இத்தகைய பலம் பொருந்திய சக்தியின் குரலுக்கு வாழ்க்கைச் செலவு, குழந்தைத் தொழிலாளர்களின் பிரச்சனைகள், பெண் தொழிலாளர்களது உரிமைகளைப் பேணுவதற்குரிய சட்டங்களைப் பேணுதல் போன்ற அது எழுப்பும் கேள்விகளுக்கு உலகை ஆள்பவர்கள் பதிலளிக்க வேண்டியவர்களாகின்றனர்.

ஒரு காலத்தில் உழைக்கும் ஆண் தொழிலாளர்கள் தாங்கள் மட்டுமே முதலாளித்துவத்துக்கு எதிரான யுத்தத்தை தனித்துத் தமது தோளிலே சுமக்க வேண்டியவர்களாக இருக்கின்றனர் என்று கருதினர். அதன் அடிப்படையில் பழமைவாத உலகத்திற்கெதிரான யுத்தத்தில் தங்கள் பெண் மக்களின் பங்கேற்றலை நிராகரித்து தனித்து நின்றனர். ஆயினும் தொழிலாள வர்க்கப் பெண்கள் தங்கள் உழைப்பு சக்தியை விற்பனை செய்ததன் மூலம் உழைப்பு சந்தையில் பெண் தொழிலாளர்களது

தேவை அதிகமாகியது. தொழிலாள வர்க்கத்துப் பெண்களும் உழைப்பில் ஈடுபட்டனர். தொழிற் சங்கத்துச் செயற்பாடுகள் உழைப்புச் சுரண்டல் பற்றிய எந்தவித தெளிவுமற்ற தொழிலாள வர்க்கத்துப் பெண்களால் தொழிற்சங்க செயற்பாடுகள் செயலிழந்து போகும் அல்லது பின் தள்ளப்படும் என்ற கருத்தே ஆண்களிடம் இருந்தது. ஆனால் சட்ட ரீதியாகவும், சமூகத்திலும் எந்தவித உரிமைகளுமற்று காலங்காலமாக அடுப்போடும் கணவனதும் தந்தையினதும் பணிப்பின் பேரில் சகல பணிகளையும் நிறைவேற்ற நிர்ப்பந்திக்கப்பட்ட



பெண்களுக்கு தொழிற்சங்க செயற்பாடுகள் பற்றியோ, உலக நடப்புக்கள் பற்றியோ என்ன தெளிவு இருந்துவிட முடியும்?

இத்தகைய பின்னடைவுகளும், எந்தவித உரிமைகளுமற்று பெண்கள் கீழ்ப்படுத்தப் படும் நிலமைகளும் அதனாலேயே அவர்களிடமுள்ள அசிரத்தையான தன்மைகளும் தொழிலாள வர்க்கத்தினர்க்கு அனுகூலமானதாக இருக்கவில்லை. அதேவேளை இவை நேரடியான பாதிப்புக்களை ஏற்படுத்தவே செய்யும். ஆனால் பெண் தொழிலாளர்களை எவ்வாறு அமைப்பில் ஈடுபடுத்துவது?, அவர்களை எவ்வாறு விழிப்படையச் செய்வது?

ஏனைய நாடுகளில் சோசலிச ஜனநாயக அடிப்படையில் தற்காலிகமாகவேனும் இத்தகைய கேள்விகளுக்கு எதுவித தீர்வும் இருக்கவில்லை. தொழிற்சங்க அமைப்புக்களின் கதவுகள் பெண்களுக்காகத் திறந்து விடப்பட்டபோதும் மிகக் குறைந்தளவிலான பெண்களே அங்கத்தவர்களாகப் பதிவு செய்து கொண்டனர். ஏன் இந்த நிலமை? தொழிலாள வர்க்கம் பெண் தொழிலாளர்கள் சட்ட ரீதியாகவும், சமூக ரீதியாகவும் மிகவும் கீழ்ப்படுத்தப்பட்ட பிரிவினராக இருப்பதை ஆரம்பத்தில் புரிந்து கொள்ளவில்லை. நூற்றாண்டு காலமாக பெண்கள் வன்முறைக்குள்ளாக்கப் பட்டும், பயமுறுத்தல்களுக்கு ஆளாக்கப்பட்டுமிருந்த சூழலிலிருந்து அவர்களை வெளியே கொண்டு வருவதற்கு சிறப்பான அணுகுமுறைகளும், மிகுந்த ஊக்குவிப்பும் தேவை என்பதை அவர்கள் அறிந்திருக்கவில்லை.

அத்தோடு உழைப்பில் ஈடுபடும் ஒரு பெண் தாயாகவும், மனைவியாகவும் இருக்க வேண்டியவளாகின்றாள் என்பதையும் இவர்கள் புரிந்து கொள்ளவில்லை. ஆனால் எப்பொழுது தொழிலாளர்களின் சோசலிசக் கட்சி இதைப் புரிந்து கொண்டதோ அந்த நேரமே அவர்களது பிரச்சனைகளுக்காகக் குரல் கொடுத்ததுடன் தம்மோடு இணைத்தும் கொண்டது. ஏனைய நாடுகளிலும் சோசலிசவாதிகள் பெண் தொழிலாளர்களுக்கான விசேடமான பாதுகாப்பை உறுதிப்படுத்தக் கோரியும், குழந்தைகளுக்கும் பெண்களுக்குமான உதவித்தொகை வழங்கப்பட வேண்டும் எனவும், பெண்கள் அரசியலில் ஈடுபடவும், அதனூடாக தங்களது உரிமைகள், பாதுகாப்பு என்பவற்றை உறுதிப்படுத்தக் கோரியும் குரல் கொடுத்தனர்.

எந்தளவிற்கு தொழிற்கட்சி பெண் தொழிலாளர்கள் பற்றி அதிகளவான அக்கறை கொண்டதோ, அந்தளவிற்கு அதிகளவிலான பெண்கள் தொழிற் கட்சியோடு இணைந்து கொண்டனர். பெண்கள் என்ற ரீதியில் தாங்கள் முகம் கொடுக்கின்ற பிரச்சனையை உணர்ந்துகொண்டு தமக்காகவும் குரல் கொடுப்பதால், தொழிற்கட்சி தங்களது விடுதலைக்காகவும் போராடுகின்ற அமைப்பு என்பதில் பெண்கள் நம்பிக்கை கொண்டனர். பெண் தொழிலாளர்கள் தமக்குள் அமைப்பாக ஒன்றுபட்டு தங்களது இலக்கை எட்டுவதற்குக் கடுமையாக உழைத்தனர். அதிகளவிலான பெண் தொழிலாளர்கள் சோசலிசக் கட்சியில் இணைந்து கொண்டனர். வேறுசில நாடுகளில் கட்சியில் பெண்கள் பிரிவென தனியாக அமைக்கப்பட்டு, பல்வேறு நிர்வாக அலகுகளாகப் பிரித்து பெண்களாலேயே நிர்வகிக்கப் படுகின்றது. இவர்கள் தொழிற்சங்கத்திலோ அல்லது பெண்கள் அமைப்புக்களோடோ இணைந்து கொள்ளாத பெண்கள் மத்தியிலும் பணி புரிகின்றனர். கர்ப்பிணித் தாய்மாருக்கான உதவி, சிறுகுழந்தைகளைக் கொண்ட தாய்மாருக்கான உதவி, பெண்களுடைய உழைப்புத் தொடர்பான சட்ட ஒழுங்குகள், பால்வினைத் தொழிலில் பெண்களை ஈடுபடுத்துவதற்கு எதிரான நடவடிக்கைகள், குழந்தைகளின் இறப்பு வீதம், பெண்களுடைய அரசியல் உரிமைகளுக்கான பிரேரணைகள், அதிகளவிலான வாழ்க்கைச் செலவீனத்துக்கு எதிரான தீர்மானங்கள், அடிப்படை வீட்டு வசதிகள் போன்றவற்றை முன்நிறுத்தி இயங்குகின்றனர்.

கட்சியிலுள்ள பெண் தொழிலாளர்கள் பொதுவான விடையங்களுக்காக கட்சியுடன் இணைந்து செயலாற்றும் அதேவேளை, பெண்ணுரிமைக்காகவும் உழைத்தார்கள். பெண்களது கோரிக்கைகளுக்காக கட்சியும் இணைந்து குரல் கொடுத்தது. உழைக்கும் பெண்களின் கோரிக்கைகள் கட்சியின் வேலைத் திட்டங்களில் ஒன்றாக இருந்தது.



பெண்கள் தினத்திலன்று இன்னமும் கிடைக்கப் பெறாமல் இருக்கும் உரிமைகளுக்காக பெண்கள் குரல் கொடுக்கின்றனர். ஆனால் சிலர் கேட்கின்றனர் "பெண்கள் ஏன் இவ்வாறு குரல் எழுப்புகின்றனர்?, ஏன் பெண்களுக்கான தினம் நினைவு கூரப்பட வேண்டும்?" சோசலிசப் பெண்கள் இயக்கத்திற்கும், மத்தியதர வர்க்கப் பெண்ணிய வாதிகளுக்கும் இடையிலான வேறுபாட்டைப் புரிந்து கொள்ளாதவர்களால்த்தான் இவ்வாறான கேள்விகளை எழுப்ப முடியும்.

மத்தியதர வர்க்கத்துப் பெண்ணியவாதிகளது இலக்கு என்ன? தங்களது சமூகத்தினுள், தங்களது தந்தையருக்கும், சகோதரர்களுக்கும், கணவனுக்கும் இருக்கக்கூடிய சகல உரிமைகளையும் அதிகாரத்தையும் பெற்றுக் கொள்வதே அவர்களது இலக்காகும். ஆனால் சொத்துரிமைகள், பிறப்பு சார்ந்த எல்லா விதமான சலுகைகளையும் இல்லாமல் செய்வதே பெண் தொழிலாளர்களது இலக்காக இருந்தது. தொழிலாள வர்க்கப் பெண்களைப் பொறுத்த வரையில் முதலாளி ஸ்தானத்தில் இருப்பவர் ஆணா பெண்ணா என்பதெல்லாம் முக்கியமற்றது. ஏனைய தொழிலாள வர்க்கத்துடன் இணைந்து ஒரு உழைப்பாளியாக தன்னுடைய தனித்துவத்தை அவளால் பேண முடியும்.

மத்தியதரவர்க்கத்துப் பெண்ணியவாதிகள் எல்லா இடத்திலும், தமக்கான சம உரிமைகளைக் கோருகின்றனர். தொழிலாள வர்க்கத்துப் பெண்கள் ஆண் பெண் உட்பட ஒவ்வொரு பிரஜைக்குமான உரிமைகளைக் கோருகின்றனர். ஆனால் "நாங்கள் உழைப்பாளர்களாக மட்டுமல்லாது, நாட்டின் பிரஜையாக இருப்பதுடன் பெண்ணாகவும் தாயாகவும் இருக்கின்றோம் என்பதையும் மறந்து விடவில்லை. ஒரு பெண்ணாக, தாயாக எதிர்கால சந்ததியினரை எமது கரங்களிலே சுமந்துகொண்டு முன்னேறுகின்றோம். ஆகவே குழந்தைகளுக்கும் எங்களுக்குமான பாதுகாப்பையும் அக்கறையையும் அரசிடமிருந்தும், சமூகத்திடமிருந்தும் நாங்கள் கோருகின்றோம்."

பெண்ணியவாதிகள் அரசியல் உரிமைகளுக்காகக் கடுமையாகப் போராடுகின்றனர். ஆனால் இங்கேதான் எமது வழிகள் வேறு படுகின்றன. மத்தியதர வர்க்கத்துப் பெண்களைப் பொறுத்தவரை அரசியல் உரிமை என்பது தொழிலாள வர்க்கத்தின் உழைப்பினால் பெறப்படுகின்ற இலாபத்தை அடிப்படையாகக் கொண்டு கட்டமைக்கப் பட்டிருக்கும் உலகத்துள் தங்களை இணைத்துக் கொள்வதற்கான ஒரு வழி மட்டுமேயாகும். ஆனால் நேர்மாறாக தொழிலாளப் பெண்களைப் பொறுத்தவரை அரசியல் உரிமை என்பது சமதர்மத்தை நோக்கிய கடினமானதும், வலிகள் நிறைந்ததுமான நீண்டதொரு பாதையாகும்.

மத்தியதர வர்க்கப் பெண்ணியவாதிகளும் தொழிலாள வர்க்கப் பெண்களும் பயணிக்கின்ற இந்த இரு வழிகளும் நீண்ட காலமாக தனித்தனியாகவே பிரிந்து செல்கின்றன. இது மிகவும் வெவ்வேறான இலக்குகளை நோக்கிய வாழ்முறைக்கு கொண்டு சென்றுள்ளது. ஒரு தொழிலாள வர்க்கப் பெண்ணுக்கும் பண்ணை எஜமானிக்கும் வீட்டு வேலை பார்க்கும் பெண்ணுக்கும், அவளது எஜமானிக்குமிடையில் அவரவரது ஈடுபாடுகள் என்பவற்றிற்கிடையில் மிகப் பெரிய முரண்பாடுகளே காணப் படுகின்றது. ஆகவேதான் தொழிலாள வர்க்கத்து ஆண்கள் பெண்கள் தினத்தையிட்டோ அல்லது பெண்கள் மாநாடு பற்றியோ அச்சமடையத் தேவையில்லை.

ஒவ்வொரு விசேடமானதும் முற்றிலும் வேறானதுமான தொழில் முறைகள் தொழிலாளப் பெண்கள் மத்தியில் அவர்களது செயற்படும் தன்மையை உயர்த்திப் பிடிக்கவும், ஒரு சிறந்த எதிர் காலத்துக்காக உழைப்பவர்களின் வரிசையில் சேர்ந்து கொள்வதற்குமான வழிகளாகின்றது. பெண்கள் தினமும், பெண் தொழிலாளர்களது சுய பிரக்ஞையை ஏற்படுத்துவதற்குமான ஆழமான நீண்டகால செயற்பாடுகளும் பிளவு படுத்தப்பட வேண்டியவையல்ல. மாறாக அவை தொழிலாள வர்க்கத்தோடு இணைந்ததாக அமைய வேண்டும்.

மிகுந்த ஆர்வத்துடனும், திட நம்பிக்கையுடனும் தொழிலாள வர்க்கத்திற்காக உழைக்கின்ற அதேவேளை, பெண் உரிமைக்காகவும் உழைக்கின்ற தொழிலாள வர்க்கப் பெண்கள், பெண்கள் தினத்தோடு இணைந்து கொள்கிறார்கள். ❍

# கனவுக்கும் கடவுளுக்கும் நடுவே சூரியனுக்கு சற்றருகே



ஜீவமுரளி ஜேர்மன்

அழியும் நினைவுகளை மீட்டெடுத்து, மீட்டெடுத்த நினைவுகளை அழிக்கும் வழமையில் வாழும் நான், கனவுகளே வராத ஒரு தூக்கத்தை வேண்டி நிற்கின்றேன். கனவுகள் தூக்கத்தின் எதிரிகள் கனவுகள் மனிதர்களின் எதிரிகள். கனவுகள் நினைவுகளை மீட்டெடுக்கும் நோய்க்கிருமிகள். கனவே உன்னை இரந்து கேட்கிறேன் என் தூக்கத்தை கலைக்காத கனவொன்றை நான் காணவிரும்புகிறேன். என் நினைவுகளை அழித்துவிட்டு வருகின்ற கனவொன்றை நான் காண விரும்புகிறேன்.

சூரியன் மறைவதற்கு சற்று முன்தான் இது நடந்தது. யுத்தம் நோய் பசி அவதி இவை எல்லாவற்றையும் கண்டு மனம் நொந்தார் அலி. மனம் நொந்த அலி ஒருநாள் கடவுளை வணங்கிக் கொண்டிருந்தார். கடவுளும் அவர் முன் தோன்றினார். அலியின் மனக்கவலை என்னவென்று முன்பே தெரிந்திருந்தார். இருப்பினும் என்னவென்று கேட்டார்.

யுத்தம் நோய் பசி அவதி இவையெல்லாம் நீங்கி மக்கள் ஆரோக்கியமாகவும் சந்தோசமாகவும் வாழவேண்டுமென்று கடவுளிடம் இரந்து வேண்டினார். இவையெல்லாம் முடியாத காரியமென்றும், தனது ஆளுமையை மீறிய விசயங்கள் என்றும் ஒரேயடியாக மறுத்துவிட்டார். அலியோ கடவுளை விடுவதாக இல்லை கடவுளும் தொடர்ச்சியாக மறுத்துக் கொண்டிருந்தார்.

யுத்தம் நோய் பசி அவதி இவற்றிலிருந்து மக்களைக் காப்பாற்றாவிட்டால் இவ்விடத்திலேயே உயிரை விட்டுவிடுவதாக அலி கூறிவிட்டார். கடவுளுக்கு தலைசுற்றியது. என்ன செய்வதென்று கடுமையான யோசனை செய்தார். ஒரு விடையும் அலி ஏற்றுக்கொள்ளக்கூடியவாறு கிடைக்கவில்லை. தன் ஆளுமை அறிவு எல்லாவற்றையும் மீறி யோசனை செய்தார். இந்த நேரத்தில் மனிதர்களுக்கும் தலை சுற்றியது. அவர்களின் தலைகளும் சுற்றப்பட்டன. கடவுளுக்கோ தலைச்சுற்று தெளிந்தது. அவர் ஒரு முடிவிற்கு வந்தவராய் அலியைப்பார்த்து அதோ அந்தப் பறவைகளைப் பார்த்தாயா! அந்தப் பறவைகள் போலல்லாமல் ஒரு புதிய பறவையை நான் படைத்தது போன்று உன்னால் உருவாக்கிக் காட்ட முடியுமா என்று கேட்டார்.

அலி சற்று யோசித்தார்

உன்னால் ஒரு புதிய பறவையை படைத்துக் காட்ட முடியுமென்றால் இந்த மக்களை யுத்தம் நோய் பசி அவதி இவற்றிலிந்து காப்பாற்றுகிறேன் என்று கடவுள் கூறினார். கடவுளின் வாயிலிருந்து காப்பாற்றுகிறேன் என்ற வார்த்தையை கேட்டதும் அலி சந்தோசத்தில் குதித்தார். கடவுளின் கட்டளை துரும்பாய்ப்போனது. நாளை ஒரு புதிய பறவையுடன் கடவுளைச் சந்திப்பதாக கூறிவிட்டு சென்றார் அலி.

சூரியன் மறைவதற்கு சற்று முன்தான் இது நடந்தது.


மறு நாள் அதிகாலை இளஞ்சூரியனின் வெப்பத்திலும் ஒளியிலும் ஒரு புத்தம் புதிய பறவையை அலி படைத்தார். இருந்தும் சூரியன் மறைவதற்கு சற்று முன்தான் கடவுள் அலி முன் தோன்றினார். அலி உருவாக்கிய அந்தப் பறவையைக்கண்டு வியந்து போனார்.
இந்தப்பறவை பறக்குமா என்று கேட்டார். அதற்கு ஆம் என தலையசைத்துக்கொண்டே இளஞ்சூரியனின் வெப்பத்தையும் ஒளியையும் கலந்து தயாரித்த அந்தப் பறவையை பறக்கவிட்டார். அது பறந்து சென்று இன்றோ நாளையோ முறிந்து விழப்போகின்ற ஒரு பட்டுப்போன மரத்தின் கிளையின் நுனியில் சென்று இருந்தது. அது கடவுள் படைத்தது போலல்லாமல் மரக்கிளையில் கால்களைப் பற்றி தலைகீழாய் தொங்கியது .

கடவுள் வாய்விட்டுச்சிரித்தார்.

நான் படைத்ததைப் போன்று நீ படைத்த பறவை முழுமையானதுதானே என்றபடி கடவுள் அலியின் பக்கம் திரும்பினார். அது பறந்ததை நீங்கள் நேரிலேயே பார்த்தீர்கள்தானே என்றார் அலி. அதை பரிசோதனை செய்யவேண்டும் என கடவுள் அலியிடம் கேட்டுக்கொண்டார்.

இளஞ்சூரியனின் வெப்பமும் ஒளியும் தன்னை கைவிடாது என்ற நம்பிக்கையில் அந்தப்பறவையை பிடித்து கடவுளின் கையில் கொடுத்தார் அலி.

மேலும்கீழுமாக அப்பறவையை சோதனை செய்தார் கடவுள். அதன் சிறகுகள் மற்றைய பறவைகளின் சிறகுகள் போலல்லாமல் இறப்பர் போன்று தடிப்பாகவும் ஒரு நாய்க்குட்டியின் முகத்தையும் ஒத்திருந்தது. அதற்கு மலவாசல் இருக்கவில்லை. கடவுள் அலியைபார்த்து மீண்டும் சிரித்தார். அது ஒரு கொடுமையான கொடுப்புச் சிரிப்பு.



பார்த்தாயா அலி நீ உருவாக்கிய பறவைக்கு மலவாசலைக் காணவில்லையே தவறிவிட்டாயே அலி என்றார் கடவுள்.

இருப்பினும் அது பறக்கின்றதுதானே என்றார் அலி

இருப்பினும் இல்லை அலி....... இருப்பினும் இல்லை... மிகச்சரியாக மிகச்சரியாக படைத்திருக்கவேண்டும். ஒரெயொரு பறவையைக்கூட பிழையின்றிப் படைக்க முடியவில்லை பார்த்தாயா! இத்தனை கோடிக்கணக்கான மனிதர்களையும் ஏனையவற்றையும் படைத்த நான் மட்டும் எப்படி தவறின்றி படைத்திருக்கமுடியும் என்றார் கடவுள்.

சூரியன் மறைவதற்கு சில கணங்களுக்கு முன்தான் இது நடந்தது. இவர் ஏமாற்றப்பட்டுக் கொண்டிருக்கிறார் எனக் கண்ட சூரியனின் கடைசிக்கதிர்கள்கூட அலியைச் சுட்டுப்பார்த்தன.

அலி கடவுளுடன் மறுவாதம் செய்யவில்லை

பறப்பவையெல்லாம் பறவையுமல்ல கறுப்பெல்லாம் காகமுமல்ல என்ற தர்க்க வழக்கிற்குள் அலியும் கடவுளால் ஆட்கொள்ளப்பட்டார். வெற்றி என்றும் கடவுளர்களுக்கே

சூரியன் மறைந்து விட்டான். அதன் பின் நிலவும் தோன்றவில்லை. நீண்ட அமாவாசை. யுத்தம் நோய் பசி அவதி இவற்றையெல்லாம் கண்டு மனம் நொந்த அலியின் கண்முன் இருளின் பிடியில் அகப்பட்டுக் கொண்ட அந்தப்பறவைகள் சுற்றிசுற்றி பறந்துகொண்டிருந்தன.
சில பழங்கள் உள்ள மரங்கள் நோக்கியும் சில பட்டுபோன மரங்கள் நோக்கியும் பறந்தன. அந்த மரங்களின் கிளைகளில் கால்களைப்பற்றி தயைகீழாய் தொங்கின.

சூரியன் மறைவதற்கு சற்று முன்தான் என் பள்ளிக்கூட வாழக்கையை இழந்தேன்

சூரியன் மறைவதற்கு சற்றுமுன்தான் துப்பாக்கி சுட பயிற்சி பெற்றேன்.

ஆதிகாலை இளஞ்சூரியனின் வெப்பத்தில் பெற்றுக் கொண்ட இளமை உணர்வை
சூரியன் மறைவதற்கு சற்றுமுன்தான் எப்படிக் கொல்வது எனக் கற்பிக்கப்பட்டேன்

சூரியன் மறைவதற்கு சற்று முன்தான் விமானமேறினேன். விமானம் என்னை நீண்ட அமாவசையைக் கொண்ட ஓர் இருண்ட கண்டத்தில் இறக்கி விட்டது. என் கண்கள் இந்த இருளில் பழக்கப்பட்டுப் போயின. இருந்தும் துலக்கமாக பார்க்க முடிகிறது. அது சூரியன் எனக்குத்தந்த வரம்.
வீட்டு முற்றத்தில் பூக்கும் முருங்கையின் வெள்ளைப் பூக்கள் பற்றி, முற்றத்து ஒற்றைப் பனைமரத்தைப்பற்றி, இளஞ்சூரியன் என் கன்னத்தில் முத்தமிடும் உணர்வு பற்றி, துலக்கமான வெளிச்சம் பற்றி கண்களை அகலத்திறந்து கனவு காண்கிறேன்.

முற்றத்து ஒற்றைப் பனையை தறித்திருப்பார்களா!!!!!! முள்முருங்கை இன்னும் அழகிய சிவப்புப் பூக்களை மட்டுதான் பூக்கின்றனவா??

நானொரு பாவி. ஒரு அலியைப்போல் ஒரு வெளவாலைப் போல் குரூரக்கடவுளர்களால் ஏமாற்றப்பட்ட பாவி நான். என் நினைவுகளை அழித்துவிட்டு வருகின்ற கனவொன்றை நான் காண விரும்புகிறேன்.❑

# தமிழ்ப் பாசிசத்திலிருந்து மெல்ல விலகும் கிழக்கிலங்கை



-கற்சுறா-
கனடா

வடக்கோடு என்றுமே இணைந்திராத கிழக்குப் பிரிந்து தனி மாகாணமாக தனக்கென ஒரு முதலமைச்சரைத் தெரிவு செய்துள்ளது. இது இலங்கை வரலாற்றில் மிகப்பெரிய ஒரு மாற்றம். இந்த மாற்றம் குறித்து பலர் தமது கருத்துக்களைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். விவாதிக்கிறார்கள். இது குறித்த விவாதங்களில், கிழக்கு தனியாகப் பிரிந்து போகவேண்டியதில்லை. வடக்கு கிழக்கென்பதுதானே தமிழர் தாயகம். கிழக்கைப் பிரித்து சிங்களக் குடியேற்றங்களை அரசு முன்னெடுக்கப்போகிறது. என்பனவே பலரது அபிப்பிராயமாக முன்வைக்கப்பட்டு இருக்கிறது. இந்தக் கவலைகளுடன் விவாதங்களில் ஈடுபட்டுள்ளவர்களில் அநேகர் முற்போக்கு சக்திகளாக சமூகத்தின் பல பாகங்களில் இயங்கிக் கொண்டிருப்பவர்கள் என்பது கவனிக்கப்படவேண்டியது. ஈழவிடுதலைப் போராட்டம் என்ற பெயரில் இன்றுவரை நடைபெற்று வந்த அழிவுகளும் படுகொலைகளும் யாரும் நினைத்துப் பார்க்க முடியாது. இனி அதற்கு காரணம் சொல்லமுடியாது போய்விட்டது. ஈழவிடுதலை என்ற மிகப்பெரிய கனவு மூட்டை உடைந்து விட்டது. ஆனால் அநேகம் பேர் அப்பாவித்தனமாக இன்னும் அந்த வடக்குக் கிழக்கு இணைந்த தமிழர் தாயகக் கனவை நம்பிக் கொண்டிருக்கிறார்கள். 1987ம் ஆண்டு இலங்கை இந்திய ஒப்பந்தம் மூலம் நிர்வாக ரீதியாக இணைக்கப்பட்ட வடக்குக் கிழக்குப் பிரதேசம் 2006ம் ஆண்டு உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் பிரிக்கப்பட்டது. இந்தப் பிரிப்புக்குறித்து பிளவுபட்டுப் போயுள்ள அத்தனை தமிழ் அமைப்புக்களும் ஒன்றாகி தமது கண்டனங்களையும் கவலைகளையும் தெரிவித்துக் கொண்டன. யாருக்கும் கிழக்குமாகாணம் பிரிந்து தனியாகப் போவது குறித்து ஏற்கக் கூடியதாக இருக்கவில்லை. பலரும் பலவித காரணங்களைத் தேடினார்கள். எவ்வகையிலும் வடக்குக்கிழக்கு பிரிக்கப்படக் கூடாது என்பதற்கு புதிது புதிதாக காரணங்களைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள். வடக்குக் கிழக்குப்பிரிவு என்பது வடக்குப்பாசிசவாதிகளையும்





தெற்கின் அதிதீவிர சக்திகளையும் பலப்படுத்துமென கவலை கொண்டது ஈ.பி.ஆர்.எல்.எப் பத்மநாபா அணி. யுத்தம் நடந்து மக்கள் இடம் பெயர்ந்த நிலையில் வடக்கையும் கிழக்கையும் பிரிப்பது அதற்கு தேர்தல் நடாத்துவது தகுந்த தருணமில்லை என்றது தினக்குரல். இதில் எல்லோரது கவலையும் தமிழர் தாயகம் என்பது வடக்குக்கிழக்கு அது ஒருபோதும் பிளவுடக்கூடாது அதற்காகவே இதுநாள் வரையும் போராடினோம் என்பதாகவே கவலைகொள்கிறார்கள். வடக்குக்கிழக்குப் பிரிவுக்கு எதிரான கூச்சலில் புலிகளுடன் சங்கமித்து விடுகிறார்கள். ஞானம் அருட்பிரகாசம் சொல்வது போல் வடக்குக் கிழக்குப் பிரிவுக்கு எதிரான அனைவரது கூச்சல்களும் தமிழ் மக்களின் நலன் சார்ந்ததல்ல முழுப் பிரதேசத்தையும் பாசிசமயப் படுத்துவதே அவர்களின் நோக்கம். இந்த நோக்கம்தான் எல்லோரதும் மனதில் நிறைந்து இருக்கிறது. 30வருட தொடர் யுத்த அனுபவத்திற்குப் பிற்பாடும் தமிழர் தாயகம் ஒன்றிருப்பதாகவும் அதற்காகப் போராடுவதாகவும் எண்ணிக் கொண்டிருப்பவர்களை என்ன சொல்வது? வடக்குக் கிழக்கு இணைவு தேவையற்றது என அறிவிக்கப்பட்டதும் தேசப்பற்று தலைக்கேறித்திரிந்த அத்தனை பேரும் தமது முரண்பாடுகளை மறந்து இரவோடிரவாய் ஒன்று சேர்ந்தார்கள். அறிக்கை விட்டார்கள். வடக்கிலிருந்து முஸ்லீம்கள் விரட்டப்பட்டபோது இப்படி ஒன்று சேர்ந்து இவர்கள் அறிக்கை விட்டது கிடையாது என்பது கவனிக்க வேண்டியது. பாழ்ப்பாணியத்தின் பேரில் வெருகல் படுகொலை நிகழ்த்தியதற்கு இன்றுவரை ஒரு வார்த்தைகூட பேசாதவர்கள் இவர்கள். தமிழர் தேசியக் கூட்டமைப்பு சார்பில் ரவிராஜும் புளொட் சித்தார்த்தனும் இணைந்த வடக்குக்கிழக்கு தமிழர் தாயகப் பிரதேசம் என்றும் இதனை உள்ளடக்கியதான எந்தவொரு தீர்வுத் திட்டமே நிரந்தர அமைதிக்கும் சமாதானத்திற்கும் வழிவகுக்கும் என்று அறிவித்தார்கள். ஈ.பி.டி.பி, மேலக மக்கள் முன்னணி மற்றும் ரெலோ அமைப்பினர் இணைந்த வடக்குக்கிழக்கு என்பதுவே தமிழர் தாயகமாகப் பிரகடனப்படுத்தினர். இவர்கள் யாவரும் ஈழவிடுதலை என்பதை வெறுமனே யாழ்மேலாதிக்கத்திற்குள் வைத்துச் சிந்திப்பதை இதிலிருந்து இலகுவாக இனம் காணமுடியும். வெறுமையான தமிழீழக் கனவில் இதுநாள் வரையில் ஓடியிருந்த அஞ்சலோட்டத்தை இவர்களால் இடையில் நிறுத்த முடியாத ஒரு வாதமாக நாம் விட்டுவிட முடியும். ஆனால் மாற்றுக் கருத்து மாற்று அரசியல் மாற்றுக் கலாச்சாரம் என்று சமூகத்தில் இன்னொரு பக்கம் இயங்கிக் கொண்டிருப்பவர்கள் கொண்டிருக்கும் கருத்து என்னை அச்சம் கொள்ள வைக்கிறது.

வடக்குகிழக்கு தமிழர்களின் உயிர் நாடி என்று கூச்சமில்லாது கனடாவில் இருக்கும் கருமையம் எனும் அமைப்பு அறிக்கை வெளியிட்டது பெரிய அச்சத்தைத் தந்தது. கனடியத் தமிழ்ச் சூழலில் பல சவால்களை எதிர் கொண்டு மாற்றுக் கருத்துச் சூழலை வளர்த்து வரும் ஒரு அமைப்பு இது. சுவிஸ் ரவி கிழக்குப் பிரிந்து போனதின் கடுப்பில் தரப்படுத்தலுக்கு புதுப்புது அர்த்தம் தேடுகிறார். (தமிழ்த் தேசியம் குறித்து ரவி கொண்டிருக்கும் கருத்துக்களுக்கும் அவர் எழுதிய கட்டுரைக்கும் இன்னொரு இடத்தில் பதில் எழுத வேண்டி வரும்) யாழ்ப்பாணியள் தரப்படுத்தலைக் காட்டி மற்றய மாவட்டங்களை ஏமாற்றினார்கள் என்று சொல்கையில் யாழ்ப்பாணியம் என்பதின் மிகப்பெரிய வன்முறையை மறைத்து விடுகிறார். யாழ்ப்பாணியள் என்று கொச்சைப்படுத்தி தந்திரமாக குறுக்கிவிடுகிறார். சாதியத்திற்கு எதிரான போரளிகளும் யாழ் மேலாதிக்கத்திற்கு எதிரான போரளிகளும் உருவாகினார்கள். இவர்கள் ஆதிக்க நிலையிலிருந்த யாழ் மனோபாவத்துடன் முரண்பாடு கொண்டவர்கள். இவர்களே உட்கொலையில் பலியாகினவர்கள் என்று சொல்லும் ரவி புளொட்டை உதாரணப்படுத்துவது தவிர்க்க முடியாததாகிறது. உட்கொலையில் பலியாவதற்குக் காரணமானவர்களின் தலைவிதியைத்தானே யாழ்ப்பாணியம் என்கிறோம். வேண்டுமென்று வீணாக யாழ்ப்பாணத்தவர்களையும் யாழ்ப்பாணியத்தையும் ஒன்றாக்கிக் குழப்புகிறார். அவர் அப்படிக் குழப்புவதற்குக் காரணத்தையும் அடுத்தவரியில் சொல்லிவிடுகிறார். இந்த முனைப்புக் கிள்ளி எறியப்பட்டாலும் தமிழ்த் தேசியம் சரியான பாதையில் செல்வதற்கான சாத்தியங்கள் இல்லாமல் இல்லை என்கிறார் இதுதான். இந்தத்தமிழ்த் தேசியப்பற்றுத்தான் இவரைப் போட்டு ஆட்டுது. பற்று முத்திப் போய் வடக்குப் புலிகளை அழிக்க இலங்கை அரசு கிழக்குப் புலிகளை பயன்படுத்தும் என்று கண்டுபிடித்து நமது கா.சிவத்தம்பியின் ஆய்வுப் பாணியை தோற்கடித்து விடுகிறார். கிழக்கில் உள்ள புலிகளைக் கொல்ல ஜெயந்தன் படையணி என்ற கிழக்குப்புலிகளை அனுப்பிய யாழ்ப்பணியத்தின் கொடூரத்தை கொஞ்சம் தன்னும் நினைக்க மறுத்து விடுகிறார். இதுவரை மிக மறைமுகமாக பாசிசம் நோக்கி எழுதிவந்த வைகறைப் பத்திரிகை தனது 157வது இதழில் மிக வெளிப்படையாகவே தனது பாசிச முகத்தைக் காட்டியிருக்கிறது. தமிழ்த்தேசியம் என்பதின் அத்தனை பலவீனங்களையும் மறந்துபோய் உணர்ச்சிவசப்பட்டு தமது முகமூடியைக் கழற்றி எறிந்து விட்டது. கிழக்கு மாகாணசபைத் தேர்தலைப் புறக்கணிக்க வேண்டும் என



பகிரங்கமாக அறைகூவியது. இரண்டரை வருடங்களுக்கு முன்பு தமிழீழ விடுதலைப் புலிகளுக்குள் தோன்றிய உள்ளியக்க முரண்பாடு வடக்குகிழக்கு என்ற பிரதேச அடிப்படையிலான ஒரு பிளவுக்கு வழிசமைத்தது என்று வரலாற்றின் மிகப்பெரிய பூசணியை சோற்றில் புதைத்தது. எப்பொழுதும் பொருந்திவராத பண்பாடுகளையும் கலாசாரங்களையும் உடையது வடக்கும் கிழக்கும் என்பது அனைவருக்கும் தெரிந்தது. ஆனால் ஈழவிடுதலைப் போராட்டம் என்ற பெயரில் ஒன்று சேர்ந்த வடக்குக்கிழக்கு என்ற கோசம் ஒருவெற்றுக் கோசம் என்பதை பல சந்தர்ப்பங்களில் வடக்குத் தமிழர்களே வெளிக்காட்டியுள்ளார்கள். அப்படியிருக்க புலிகளில் தோன்றிய உள்ளியக்க முரண்பாடே இதற்கு வழிகோலியது என்று கதையைத் திசைதிருப்புவது அபத்தமானது. சரி இவர்கள் சொல்வது போல் பார்த்தாலும் மார்ச் பிளவின் முக்கிய பிரச்சனையாக முன்வைக்கப்பட்ட இடைக்கால நிர்வாகசபை உறுப்பினர்கள் அனைவரும் வடபகுதியினராக இருப்பது எப்படி நியாயமானது என்ற ஒரேயொரு கேள்விக்கு இதுவரை பொம்பளப் பொறுக்கி துரோகி களவெடுத்தவன் என்பனதானே பதிலாக இருக்கிறது. இதுகுறித்து விவாதிக்க முடியாத வைகறை தனது தேசிய ஆசையில் அனைத்தையும் மறைத்து மக்களிடம் பாசிச ஆசையை வளர்த்து விடுகிறது. வெறுமனே விடுதலைப்புலிகளின் பிராந்தியத்தளபதிகளின் குறுகிய நலன்கள் முதன்மை பெற்றதின் விளைவாக இப்பிளவு ஏற்பட்டது என்று கொச்சைப்படுத்துகிறது. இறுதியில் ஈழத்தமிழர்களின் தாயகத்தைக் கூறுபோடும் கிழக்கு மாகாணசபைத் தேர்தல் உடனடியாக நிறுத்தப்பட வேண்டுமாயின் இரண்டு வழிகளைப் பரிந்துரைக்கிறது. இலங்கை இந்திய ஒப்பந்தம் குறித்து இலங்கையை இந்தியா நிர்ப்பந்திக்க வேண்டும் என்கிறது. மற்றது தமிழ் மக்களின் விடுதலைக்கு கால் நூற்றாண்டுக்கு முன் புறப்பட்டவர்கள் அதற்காகப் பல தியாகங்களைப் புரிந்தவர்கள் தமது குறுகிய திருப்தி செய்யப்பட முடியாத நலன்களை சிறிது ஒதுக்கிவிட்டு மக்களின் பெயரில் மக்களின் நலன்களுக்காக ஒரே குரலில் இம்மாகாணசபைத் தேர்தல்களை எதிர்க்க வேண்டும் என்று பரிந்துரை செய்கிறது. இங்கு விடுதலைப்புலிகள் என்று சொல்வதற்கு கௌரவப் பிரச்சனையுள்ளவர்கள் பூடகமாக கால்நூற்றாண்டுகளுக்கு முன் போராடப் புறப்பட்டவர்கள், தியாகங்கள் புரிந்தவர்கள் என்று விடுதலைப்புலிகளின் பாசிச முகத்திற்கு தேசிய முலாம் போட்டு அவர்களை மக்களின் பெயரில் தேர்தலை எதிர்க்கச் சொல்கிறார்கள். இந்த நான்கு வருடத்திற்குள் கிழக்கிலங்கை மக்களின் மீது ஏவப்பட்ட எந்த அட்டூழியங்களுக்கும் இவர்கள் கோபப்பட்டது கிடையாது. அதை ஒரு பொருட்டாக நினைத்ததும் கிடையாது. இரண்டு இதழ்கள் கழித்து வந்த 160வது இதழில் தமிழ்த் தலைமையைப் பொறுத்தளவில் வடக்குக் கிழக்கைப் பிரிப்பதென்பது அறவே ஏற்றுக் கொள்ள முடியாததொன்றாகவே கருதப்பட்டு வந்தது என்று எழுதுகின்றது. இவர்களது தமிழ்த் தலைமை என்பது எது? தமிழரசுக்கட்சிதானே? அது எப்போது கிழக்கிலங்கை மக்கள் பற்றி அக்கறைப்பட்டது? கடைசியில் எல்லாம் இழந்துபோன கவலையில் கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் பிள்ளையான் குழு வெற்றி பெறலாம், ஹக்கீம் வெற்றி பெறலாம், ஹிஸ்புல்லா வெற்றிபெறலாம், ஏன் ஜாதிக ஹெல உறுமயவும் ஜேவிபியும் கூட வெற்றி பெறலாம் ஆனால் தோற்றுப் போனவர்கள் ஈழத்தமிழ் மக்கள் மட்டுமே என்று எழுதி முடிக்கிறது. இந்த வார்த்தைகளில் படிந்திருக்கும்



வக்கிரத்தைப் பாருங்கள். தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகளையோ மற்றைய முஸ்லீம் அமைப்புக்களையோ ஈழத்தமிழ் மக்களாகப் பார்க்க இயலாத மனம் அவர்களுடையது. தமிழத் தேசியத்தின் உச்ச வெறியின் புலம்பல் இது. தமது பாசிச பலத்திற்கு உடனடியாக சுரேஸ் பிரேமச்சந்திரனிடம் பேட்டியை எடுத்து பிரசுரித்து விடுகிறார்கள். அவரும் தான் தாண்டிய பாதையை மறந்து பிள்ளையான் குழு ஒரு பொம்மை முதலமைச்சர் என்ற பழுத்தேறிய வார்த்தைகளுடன் தன்னை ஒரு கடைசி மனிதனாக அடையாளப் படுத்துகிறார். வைகறைப் பத்திரிகையும் தனது தேசியக்காய்ச்சலைக் குறைக்க கடைசிவரை வழிதேடியும் முடியவில்லை. வைகறைப் பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கங்கள் குறித்து விபரமாக நாம் இன்னொரு கட்டுரையில் பார்ப்போம். வடக்கு கிழக்குப் பிரிவு குறித்து ஜனநாயகத்திற்கான கிழக்கிலங்கை முன்னணி வெளியிட்ட கிழக்கின் சுய நிர்ணயம் எனும் அறிக்கை கிழக்குப் பிளவின் முக்கியத்துவத்தை மிகத் தெளிவாக முன்வைத்துள்ளது. வரலாற்றில் இராமாயண இதிகாசம் தொடக்கம் இன்றுவரை அது தனித்துவமான பிரதேசம் என்பதைத் தெளிவாக முன்வைத்துள்ளது. கிழக்கிலங்கை முன்னணி தவிர வேறு எந்த அமைப்பும் கிழக்கின் தனித்துவத்திற்கு குரல் கொடுக்காதது என்பதுதான் தமிழ்ப் பாசிசத்தின் உச்சம். இங்கு புலிகளின் மொழி பொதுமொழியாக்கப்படுவதன் வன்முறையை நீங்கள் கவனிக்க வேண்டும். பொதுவாக புலிகளின் மொழிகளையே உள்வாங்கிப் பழகிவிட்ட மக்களின் உரையாடல்கள் எப்பொழுதும் புலி பாசையிலேயே இருக்கும். புலிகள் ஒருவிடையத்தை என்ன மொழியில் பாவிக்கிறார்களோ அதை அப்படியே உள்வாங்கும் மனோபாவத்திலே அத்தனை தமிழரது செயற்பாடும் இருக்கிறது. புலிகள் யாரையெல்லாம் துரோகிகள் என்கிறார்களோ அவர்களெல்லாம் அத்தனை தமிழரது துரோகிகளாகவும் ஆகிவிடுகிறார்கள். புலிகளிலிருந்து பிரிந்த கிழக்குப் புலிகளை கருணாகுழு என்றும் ஒட்டுக்குழு என்றும் அடையாளப்படுத்தியது. பின்பு பிள்ளையான் குழு என்றே குறிப்பிட்டுவந்தது. அவர்கள் ஆரம்பத்திலே தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகள் என்று கட்சி பதிவு செய்த பின்னர்கூட பிள்ளையான்குழு என்று குறிப்பிட்டார்கள். இன்றும்கூட அவர்களால் அப்படித்தான் அழைக்க முடிகிறது. ஆனால் துரதிட்ட வசம் என்னவென்றால் தமிழ்ப் பத்திரிகைகள் வானொலிகள் தொலைக்காட்சிகள் எல்லாம் அப்படியே புலிகளின் மொழியை உள்வாங்கி புலிமொழியை அப்படியே உரைத்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு தமிழீழ மக்கள் விடுதலைப்புலிகள் என்று அடையாளம் கொள்வதற்கு தெரியாமல் இருக்கிறது. மனித உரிமை கண்காணிப்புக்குழு கூட அநேக இடங்களில் பிள்ளையான்குழு என்றே விழிக்கிறது. தற்போதுள்ள சூழ்நிலையில் நாம் நமது மொழிப் பயன் பாடுகளை மாற்றம் செய்ய வேண்டிய கட்டாயத்திலிருக்கிறோம். தமிழர்தாயகம் அல்லது தாயகக் கோட்பாடு தமிழர் தரப்பு என்று ஒருமைப் படுத்துவது பயன்பாடற்றுப் போய்விட்டது நீண்ட நெடுங்காலமாக வேதனைக்குரிய வாழ்வியலைக்



கடந்து வந்துகொண்டிருக்கும் நாங்கள் மிகக் கடினமான வார்த்தைகளை மிக இலகுவாகப் பயன்படுத்தி விட்டுவிடும் நிலையில் வந்து விட்டிருக்கிறோம். வார்த்தைகள் எங்களை ஒருபோதும் மட்டுப்படுத்துவதில்லை. எல்லை கடந்த வார்த்தைகளும் எல்லை கடந்த வாழ்வியலுமாய் ஓடிக்கொண்டிருக்கும் நிலையில் இரண்டினது அர்த்தங்களும் ஏன் மாறாமலேயே இருந்து கொண்டிருக்கிறது. பொதுவாக நாம் அன்றாடம் பயன்படுத்தும் வார்த்தைகள் நாம் கடந்து வரும் செயற்பாடுகளை பொதுவாக யுத்தம் போராட்டம் வாழ்வு புலம்பெயர்வு படுகொலை வன்முறை அமைதி சமாதானம் என்ற சொற்கள் நமக்கு அன்றாடம் சொல்வது என்ன எவ்வகையான அர்த்தங்களில் நாம் அவற்றைப் பயன்படுத்துகிறோம்? படுகொலை என்ற சொல்லை 1977ம் ஆண்டுகளில் பயன்படுத்திய அர்த்தத்தில் இப்போதும் பயன்படுத்த முடியுமா? தற்போதைய தமிழ் மனங்கள் சாதாரணமாக நடந்துவிடக்கூடிய ஒரு கொலையை சலிப்புடனேயே ஏற்றுக் கொள்கிறது. அதற்குப் பலவித வன்முறைகொண்ட சாகசக் கொலை தேவைப்படுகிறது. அதற்குப் பழக்கப்பட்டுவிட்டது. இதுகுறித்து அடுத்த கட்டுரையில் தொடருவோம். கடைசியாக ஒரு வார்த்தை சிவநேசதுரை சந்திரகாந்தன் என்ற கிழக்கு மாகாண முதலமைச்சர் குறித்து கொலையாளி துரோகி வன்முறையாளன் என்று சொல்பவர்கள் குறித்து கவனம் கொள்கிறோம். அடுத்த தேர்தல்களில் உங்களை முதலமைச்சர் ஆக்குகிறோம் அன்புடையீர் நீங்கள் எல்லோரும் எம்மைக் காப்பாற்றுவீராக. ஆனால் கிழக்கு பிரிந்தது பிரிந்ததுதான்.

பகுதி 2 கெதியில்

# கடைசிப் புத்தகம்

-க.கலாமோகன்-
பிரான்ஸ்

நான் கடைசியாக வாசித்த புத்தகம் அது. அதனை எழுதியது யார், அதனது தலைப்பு எது என்பதெல்லாம் எனது நினைவில் இல்லை. ஓர் மழை தினத்தில் அது வீதியில் நனைந்து கொண்டிருந்தபோது, அதனைக் கையிலெடுத்து நனைந்து போயிருந்த பக்கங்களை மிகவும் கவனத்தோடு விரித்தேன்.

*"நான் அவளைக் கற்பழித்தேன். எனது பசி முடிந்ததும் அவள் என்னிடமிருந்து தப்புவதற்காகக் கெஞ்சினாள். நான் அவளது கழுத்தைத் திருகினேன். துடித்தாள். மீண்டும் கெஞ்சினாள். அவள் விழிகள் மூடப்படும் வரை நான் அவளைத் திருகினேன். அவளது பிணம் நிர்வாணமாக. நான் போலீஸ் ஸ்டேசன் சென்று "நான் இளம் பெண்ணைக் கற்பழித்தும் கொலையும் செய்துவிட்டேன்" எனச் சொன்னேன். எனக்கும் பைத்தியம் எனச் சொல்லி என்னை அவர்கள் வெளியே துரத்தினார்கள். மறுநாள் காலைப்பத்திரிகையில் அவள் கற்பழித்துக் கொலைசெய்யப்பட்ட செய்தியும் அவளைக் கொன்றவன் படமும் இருந்தது. அது எனது படமாக இருக்கவில்லை."*

எனது உடல் விறைத்தது. வீடு வந்து புத்தகத்தை மிகவும் கவனமாக விரித்து ஒவ்வொரு பக்கங்களாகப் படித்தபோது பல சேதிகள் எனக்குக் கிடைத்தன. ஆனால் கடைசிப் புத்தகத்தின் கடைசிப் பக்கம் கிழிக்கப்பட்டிருந்தது. நான் கடைசியாகப் படித்த புத்தகம் அது. என்னிடம் இருந்து தொலைந்து பல வருடங்கள். எழுதியவர் பெயர் புத்தகத் தலைப்பு இவைகள் என்னை விட்டு மறைந்துபோனபோதும் நான் வாசித்தவைகள் பல எனக்குள் அழியாமல்.

*"எனது விழிகள் முன் யாவும் தூரமாகப்பட்டன. ஆனால் பல குழந்தைகளின் விழிகள் என்முன் ஓடிவந்தன. கதறிய விழிகள். சில விழிகளுள் கடைசியாக மறைந்து கொண்டிருக்கும் கடைசிப் புன்னகை. காமப் புன்னகைகள். எரியும் பிணங்களோடு ஒட்டிப்பிறக்கும் புகையின் வான உலாவில் கருத்தரிக்கும் எத்தனை விழிகள். நான் இன்று தூங்கமாட்டேன். நான் இன்று சுடலைக்குச் செல்வேன். நான் இன்று அங்கே தூங்குவேன்."*

கடைசிப்புத்தகம் எங்கே தொலைந்தது எப்படித்தொலைந்தது பற்றி எனக்கு எதுவும் தெரியாது. யாராவது என்னிடம் இருந்து வாசிப்பதற்காகப் பெற்றுக் கொண்டனரா? என்னிடமிருந்த புத்தகங்கள் பல தொலைந்துவிட்டன. நான் இப்போது எதுவும் வாசிக்காமலிருப்பதால் தொலைந்து போனவைகளைத் தேடும் விருப்புக்கூட எனக்குள் இல்லை. ஆனால் கடைசிப் புத்தகம் எனது நினைவை அவ்வப்போது தொட்டு விடுவதுண்டு. எனது மனைவியிடமும் அதனைப் படிக்கமுடியுமா எனக் கேட்டுக்கொண்டபோது அவள் ஓம் என்றாள், படிக்கத் தொடங்கினாள். *"இது கொலையாளியால் எழுதப்பட்டது."* என்றபடி எறிந்தாள். அன்றுதான் கடைசிப்புத்தகத்தின் கடைசிப்பக்கம் கிழிந்தது.

*"ஓர் பக்கத்தை மட்டும் படித்துவிட்டு அது கொலையாளியால் எழுதப்பட்டது என முடிவெடுத்தல் சரியா?"* என மனைவியிடம் கேட்டேன்.

*"அது கொலையாளியால் எழுதப்பட்டதே!"* என மீண்டும் சொல்லியபடி அவள் எனது முகத்திற்குத் தூரமாகி மறைந்தாள். நான் எறியப்பட்ட புத்தகத்தைத் தூக்கினேன்.

*"எலிஸாவினைக் கொலை செய்தது நான் எனச் சொல்லியும் பொலீஸ் நான் அல்ல எனச் சொன்னபோது அது என்னைத் துன்பத்திலாழ்த்தியது. சிலமாதங்கள் நான் சற்றே அதிகமாகக் குடிக்க வெளிக்கிட்டேன்."*

*"நான் எலிஸாவினை ஓர் பாரில் கண்டபோது அவள் பலர் மத்தியுள் இருந்தாள். எனது விழிகளால் அவளிற்கு அழைப்புகள் விட்டேன். எனக்கு அவள் தேவைப்பட்டாள். அவள் தன்னோடு இருந்தவர்களின் உபசரணைகளைத் தட்டிவிட்டு வெளியேறியபோது, அந்த வெளியேற்றத்தை எனது அழைப்பின் அங்கீகாரமாக் கருதி நானும் வெளியேறியபோது அவள் எனக்காக ஓர் வீதி மூலையில் காத்திருந்தாள். நான் அவள்முன் சென்றபோது என்னை அணைத்தாள். நான் அவளது உதடுகளைக் கடித்தேன். அவளது உடல் நெருப்பை நான் சுவாசித்தேன். அந்த இரவில் அவளை எனது அறைக்கு அழைத்துச்சென்று அணுஅணுவாக வாசித்தேன். எனது தாகம் தணிந்ததும், அவளது கழுத்தைத் திருகினேன். "நான் உன்னை விரும்புகின்றேன்" என அவள் கெஞ்சினாள். "நானும் உன்னை விரும்புகின்றேன்" என நான் சொல்லிய வேளையில் அவளது உடல் உலகை விட்டுப்பிரிந்தது."*

சில வேளைகளில் எனக்கு எனது மனைவியின் மீது கூடச் சந்தேகம் ஏற்படுவதுண்டு. கடைசிப்புத்தகத்தை அவள் குப்பைகளோடு குப்பைகளாகச் சேர்த்து எறிந்துவிட்டாளா? இந்தச் சந்தேகத்தின் நிழலில் அவளோடு கேள்விகள் எதனையும் நான் ஒருபோதுமே எழுப்பியதில்லை. என்னைத் தினம் தினம் தொடருவதுமல்ல இந்தச் சந்தேகம். கடைசிப்புத்தகம் எனது கையைவிட்டுப் போனதற்கு எனது மனைவி காரணம் எனும் சந்தேகம் எழுந்ததையிட்டு நான் எனக்குள் வருந்தியதுண்டு.

அது ஓர் குளிர் காலையாக இருந்தது. எனது மனைவி என்னை வித்தியாசமாகப் பார்த்தாள். ஆனால் அவளது பார்வையை உதறிவிட்டு கடுதாசிப் பெட்டியொன்றை என்னிடம் இருந்த புத்தகங்களால் நிரப்பினேன்.

எனது புத்தகச்சேமிப்புகளை வெகுஜனச் சந்தையில் மலிவுவிலைக்கு விற்கப்போகின்றேன் எனச்சொல்லி கதவுவரை சென்றபோது என்னை அவள் தடுத்தாள்.

"இந்தப் புத்தகங்களை நீ அதிக விலைகொடுத்து வாங்கினாய்!"

"நீ சொல்வது உண்மை. ஆனால் நீ இவைகளை வாசிப்பதில்லை. எனக்கோ வாசிக்கும் விருப்பம் முன்புபோல இல்லை."

"அந்த விருப்பம் நாளை மீண்டும் வரலாம். அப்போது இந்தப் புத்தகங்கள் உனக்குத் தேவைப்படலாம்."

"இந்தப் பெட்டிக்குள் கவ்காவின் புத்தகங்களும் உள்ளன."

"என்ன? கவ்காவின் புத்தகங்களையுமா?"

"ஆம்! கவ்காவை வாசித்தது எனது தப்பு! அவன் தனது எழுத்துப்பிரதிகளை எரிக்குமாறு சொல்லிவிட்டுச் செத்தான். ஆனால் அவை எரிக்கப்படவில்லை. அவனது புத்தகங்களை மலிவு விலையில் விற்பதிலே என்ன தப்பு?" என்றபடி கதவை இழுத்து மூடினேன்.

நான் புத்தகங்களை சந்தையில் வாடிக்கையாளர்கள் கேட்ட விலைக்கு விற்றேன். சிலருக்கு இலவசமாகவும். தரமான புத்தகங்கள் எனச் சிலர் குசுகுசுத்தது மெல்லக் கேட்டது. கிட்டத்தட்ட அனைத்துப் புத்தகங்களும் விற்கப்பட்டபோது மீண்டும் சந்தைக்கு வரவேண்டும் என நினைத்துக் கொண்டேன்.

நான் இப்போது புத்தகங்கள் எதுவுமே படிப்பதில்லை. மெத்ரோக்களில் ஒட்டப்படும் கவிதைகளையும், வீதிச் சுவர்களின் கிறாபிற்றிகள் மரண அறிவிப்புகளையும், ரெலிபோன் கபின்களில் ஒட்டப்படும் நடன நிகழ்ச்சி விளம்பரங்களையுமே நான் விரும்பினால் வாசிப்பதுண்டு.

ஆனால் கடைசிப்புத்தகம் மட்டும் எனது நினைவில் அழியாமல்.

அதனது பல பக்கங்கள் எனக்கு மறந்து போனாலும், இந்த மறந்துபோன பக்கங்கள் திடுதிப்பென நினைவில் வந்துவிடும். இந்த நினைவில் வரும் பக்கங்களைத் தொகுத்து எழுதவேண்டும் என்ற விருப்பு எனக்குள் ஒருபோதுமே எழுந்ததில்லை. இன்று எனது கையில் கடைசிப்புத்தகம் இல்லை. அதுபற்றி நான் எதை எழுதினாலும் அது முழுமையற்றதாகவே இருக்கும். ஆனால் அது ஓர் முழுமையான வாசிப்பாக எனக்குப்பட்டது.

"செயின் நதிக்கரையில் அந்தக்கிழவி. அவளின் கூந்தல் கட்டையாக இருந்தது. அவள் எதையோ எண்ணிக்கொண்டிருப்பதுபோல எனக்குப்பட்டது. நான் அருகில் சென்றேன். அவள் சோற்றுப்பருக்கைகளை எண்ணிக்கொண்டிருந்தாள்."

- ஏன் இவைகளை எண்ணுகின்றாய்?

- நான் எண்ணவில்லை.

- இவைகளை நீ ஏன் சாப்பிடவில்லை?

- எனது குழந்தைகள் இறந்துகொண்டுள்ளனர்?

- உனக்கு எத்தனை குழந்தைகள். அவைகள் எங்கேயுள்ளன?

- என்னால் எனது குழந்தைகளை எண்ணமுடியாது. யாவரும் எனது குழந்தைகளே. எனது குழந்தைகளினது இருப்பிடத்தின் பெயர்: நிலம்.

- உனதின் பெயர்?

- நிலம்.

- உனது குழந்தைகளின் பெயர்கள்?

- நிலம், நிலங்கள்.

- நான் கொலையாளி.

- நீ எனது குழந்தை.

- நான் கொலையாளி. என்னால் உன்னைக் கொல்லமுடியும்.

- கொல்!

நான் ஓடினேன். அவள் கத்தினாள்.

கொல்! கொல்! கொல்!"

நான் சந்தையில் இருந்து திரும்பி வீட்டை நோக்கி நடந்து கொண்டிருந்தபோது பெரிதாக மழைபெய்யத் தொடங்கியது. ஆம்! பெரியமழை. தூரத்தில் ஓர் குப்பைப் பெட்டிக்கு அருகில் ஓர் புத்தகம் நனைந்து கொண்டிருப்பதுபோல பட்டது. அது
கடைசிப் புத்தகமாக இருக்குமோ என்ற அவதியில் அதனை நோக்கி ஓடினேன். இல்லை. நான் வாசித்த முதலாவது காதல்கதைப் புத்தகமாக அது இருந்தது.○

# எதிர்ப்பு- கிலோ என்ன விலை?

- ஆதவன் தீட்சண்யா -
தமிழ்நாடு


ஒரு சலூனில் சவரத்திற்காக காத்திருந்தபோது
தற்செயலாகத்தான் நிகழ்ந்தது எங்கள் சந்திப்பு
அசப்பில் ரொம்பவும் தெரிந்தவர்போல் தோற்றம்
உன் யூகம் சரிதான் என்றார் அவராகவே
கண்களில் முன்பிருந்த கருணையில்லையே என்றேன்
ரெண்டாயிரம் வருசமாய் தீராமலிருக்க
என் கண்களென்ன கருணைக்கிடங்கா என்றார் எரிச்சலோடு
மயக்கும் வசீகர மொழியும்கூட மறைந்துவிட்ட வருத்தம் எனக்கு
மயங்குவதற்கு மொழியொன்றும் லாகிரிவஸ்து அல்லவென எச்சரித்தார்
மேலோட்டமாய் செய்தித்தாளைப் புரட்டியபடியே
இப்படி சலூனில் காத்திருக்கப் பொறுக்காமல்தான்
இத்தனைநாளும் தாடிவளர்த்ததாய் சலித்துக்கொண்டார்
உண்மையில், பின்லேடனுடையதை விடவும் நீளமானதுதான்
- ஒப்பிட வேறு ஆளே கிடைக்கவில்லையா...
அவனைத் தேடியலைந்துதான் இப்படியானேன் என்று
பட்டென அறைந்தார் கன்னத்தில்
மறுகன்னத்தைக் காட்டினேன்
அவர் மன்னிப்பேதும் கோரவில்லை

ராணுவச்சிப்பாய் போன்ற சிகையலங்காரத்தோடு வெளியேறும்
அவரது அங்கியிலிருந்து குதித்துப் பின்தொடர்கின்றனர்
எண்ணற்ற பின்லேடன்கள்

நிழல்போலும் தெரிகின்றனர்.

# அருந்ததியர் வாழ்வும் இலக்கியமும்

-ஆதவன் தீட்சண்யா-
தமிழ்நாடு
படங்கள்: தமயந்தி



**எல்லா வேலைகளையும் முடித்து விட்டு ஓட்டடையடித்துவிடலாம் என்று நினைப்பதைபோல, ஒருவார காலம் விடுப்பெடுத்துக்கொண்டு சாதியை ஒழித்துவிடலாம் என்று நினைத்துக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. சமத்துவத்திற்காகப் போராடுவதென்பது நமது இயக்கத்தின் கொள்கையாக மட்டுமில்லாமல் நமது வாழ்வியல் நெறியாக- நமக்குள்ளிருக்கும் இயல்பானதொரு உணர்வாக மாறவேண்டியுள்ளது.**

(2008 ஜூலை 27 அன்று தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் தென்சென்னை மாவட்ட மாநாட்டையொட்டி நடைபெற்ற அருந்ததியர் வாழ்வும் இலக்கியமும் என்ற கருத்தரங்கின் தலைமையுரை )




தன் சாதி பிறரை என்னவாகப் பார்க்க வேண்டும் என்று கற்றுக் கொடுத்திருக்கிறதோ அந்த பொதுப்புத்தியிலிருந்து தன்னை ரத்தம் சொட்டச் சொட்ட அறுத்துக்கொண்டு வெளியேறாமல்- அப்படி அறுத்துக்கொள்ளும்போது ஏற்படும் வலியையும் வாதையையும் வாய்விட்டுக் கதறி வெளிப்படுத்தத் துணியாமல்- நிலவும் சூழலை நியாயப்படுத்துகிற ஒருவரிடமிருந்து- அவர் கொம்பாதி கொம்பு படைப்பாளியாயிருந்தாலும் அவரிடமிருந்து வெளிப்படுகிற படைப்புகளை- அவை எத்தனை உன்னதமானதென்று உலகம் கொண்டாடினாலும் - அவை காகிதத்திற்கு கேடானது என்பதே என் கருத்து.

*1.*

நம்மில் பலரும் தம்மை சாதிமுறைமைக்கு எதிரானவர்களாக நம்பிக் கொள்கிறோம். கருத்தியல் ரீதியாக சாதியத்தை எதிர்க்க முன்வந்திருக்கிற நாம் நடைமுறையில்- சொந்த வாழ்க்கையில்- சாதியத்தைக் கடக்கத் துணிந்திருக்கிறோமா? என்று கேள்வியெழுப்பும் நேரம் வந்துவிட்டது. சாதிக்கெதிரான போராட்டம் என்றதும் தொழிற்சங்க நடவடிக்கையைப் போல கூட்டாக சேர்ந்து ஆர்ப்பாட்டமோ உண்ணாவிரதமோ நடத்தி சாதியை ஒழித்துவிடலாம் என்று நினைப்பது அறிவுக்கொவ்வாத அணுகுமுறை. தமக்குள் இருக்கிற சாதிய சிந்தனைகள் குறித்து குற்றவுணர்ச்சி கொள்வது, அச்சிந்தனைகளிலிருந்து விடுபடுவது, சகமனிதரிடம் தீண்டாமை பாராட்டாமல் இருப்பது, எல்லாநிலைகளிலும் சாதியை மறுப்பது, சாதிய ஒடுக்குமுறைகள் நிகழ்கிறபோது தன்னொத்தவர்களோடு இணைந்து போராடுவது- என தனிப்பட்ட வாழ்வில் சாதியத்திற்கெதிரான போராட்டம் மலைப்பூட்டும் வகையில் பெரும் சவாலாக நம்முன் நிற்கிறது. எல்லா வேலைகளையும் முடித்து விட்டு ஒட்டடையடித்துவிடலாம் என்று நினைப்பதைபோல, ஒருவார காலம் விடுப்பெடுத்துக்கொண்டு சாதியை ஒழித்துவிடலாம் என்று நினைத்துக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. சமத்துவத்திற்காகப் போராடுவதென்பது நமது இயக்கத்தின் கொள்கையாக மட்டுமில்லாமல் நமது வாழ்வியல் நெறியாக- நமக்குள்ளிருக்கும் இயல்பானதொரு உணர்வாக மாறவேண்டியுள்ளது.

நமக்குள் நிகழ்த்திக்கொள்ள வேண்டிய இந்த உள்முகப்பயணத்திற்கு உதவும் பொருட்டே இந்த கருத்தரங்கம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. சுவாரஸ்யமான சொற்பொழிவின் பெயரால் எல்லாப் பேச்சுக்களையும் 'செவியின்பமாகவோ, செவிக்குணவாகவோ' சுருக்கிப் புரிந்துகொள்ளும் போக்கு மிகவும் அபாயகரமானது. நேரத்தையும் உழைப்பையும் வீணடிக்கக்கூடியது. எனவே ஒரு தீவிரமான உரையாடலுக்கும் விவாதத்திற்குமாக நமது சந்திப்புகளை மறுகட்டமைப்பு செய்துகொள்ள வேண்டியிருக்கிறது.

*2.*

கலை இலக்கியம் என்பவை மனிதமனத்தின் வெளிப்பாடுகள். மனிதமனமோ சமூகத்தின் விளைபொருள்.

இந்த விளைபொருளுக்கான நிலமாகவும் விதையாகவும் உரமாகவும் சமூகச்சூழலே இருக்கிறது என்பதை ஒப்புக்கொள்ள சிலருக்கு தயக்கம் இருக்கிறது. எதன் சாயலும் படியாத ஒரிஜனல் சரக்கு என்று தமது சிந்தனைகளையும் அதிலிருந்து பிறக்கிற படைப்புகளையும் உருவகித்து வைத்திருக்கும் 'சுயம்புகளான' இவர்களுக்கு, அவை சமூகத்தின் விளைபொருள் என்று ஒப்பமுடியாமல் போவது இயல்பானதுதான். ஆனால் இப்படி ஒவ்வாமை கொள்கிறவர்கள் நடைமுறையில் தங்களது மறுப்பை நிறுவ எந்தவொரு சான்றாதாரத்தையும் முன்வைக்க முடியாதவர்களாகவே இருக்கின்றனர்.

சமூகம் என்கிற பெரும்பரப்புக்குள் தான் யார்? அந்த பெரும்பரப்பு தனக்குள் எவ்வாறு வினையாற்றுகிறது? சகமனிதரோடு தனக்கிருக்கும் உறவு சமத்துவமானதா? மேல்கீழ் படிநிலை கொண்டதா? அசமத்துவம் நிலவுகிறதென்றால் அதற்கான அடிப்படை என்ன? அந்த அசமத்துவத்தை ஏற்றுக்கொள்ள அல்ல நிராகரிக்கவும் எதிர்க்கவும் உள்ள நியாயங்கள் என்னென்ன என்று மனித மனம் ஓயாமல் தனக்குள் ஓர் உள்முகத்தேடலை நடத்திக் கொண்டேயிருக்கிறது. இந்தத் தேடல் குறித்த பதிவுகளே கலை இலக்கியப் படைப்புகளாக வெளிப்படுவதாக கருதுகிறேன்.
அப்படியானால் கலை இலக்கியம் குறித்த மதிப்பீடானது இந்த சமூகத்தைப் பற்றிய மதிப்பீட்டுக்கு நம்மை தவிர்க்கவியலாமல் இட்டுச்செல்கிறது. எனவே இங்கு சமூகம் என்னவாக இருக்கிறது என்பதிலிருந்தே எல்லாவற்றையும் தொடங்க வேண்டியிருக்கிறது.


இந்தியச் சமூகம் ஒன்றாக இல்லை. அது தீண்டப்படுவோர் இந்தியாவாகவும் தீண்டப்படாதோரின் இந்தியாவாகவும் இரண்டாகப் பிரிந்திருக்கிறது. பிரிந்திருக்கிறது என்றால் - அது வெறுமனே நிலவியல் ரீதியாக மட்டுமில்லாமல், வாழ்வின் எல்லா அம்சங்களிலும் இணக்கம் காணமுடியாதபடி பிரிந்திருக்கிறது. இந்தப் பிரிவினையை - இடைவெளியை இட்டுநிரப்ப எடுக்கப்பட்ட எல்லா முயற்சிகளையும் உள்வாங்கிச் செரித்துவிட்டு காலத்திற்கேற்ற ரூபங்களில் மீண்டும் மீண்டும் நீடித்து நிற்பதாயிருக்கிறது இந்தப் பிரிவினை என்று அம்பேத்கருக்கும் முன்பிருந்தே சொல்லப்பட்டு வருகிறது.

தீட்டு-புனிதம், நல்லது-கெட்டது, உயர்வு-தாழ்வு என்பதற்கான விளக்கங்கள் மாறிக்கொண்டே வந்தாலும் ஒவ்வொருகாலத்திலும் ஏதோ ஒன்று புனிதமாக- நல்லதாக- உயர்வாக கட்டமைக்கப்பட்டுக் கொண்டே இருக்கிற நிலையில் மாற்றமேதுமில்லை. எனவேதான் தீண்டாமையும் ஒடுக்குமுறையும் நீடிக்கிறது. நிலவும் இந்த உண்மைக்கு யார் அல்லது எது மூலகாரணமாய் அமைந்திருக்கக்கூடும் என்று தேடப்புகுந்தால் அது ஆதிக்கசாதியினரை குற்றம் சாட்டக்கூடும் என்ற பதற்றத்தில் இந்தியாவை ஒரே நாடாக - ஒன்றுபட்டு வாழும் ஒரு சமூகமாக முன்னிறுத்துகிற மோசடி நடந்துவருகிறது. இந்த மோசடிக்கு சற்றும் குறையாததுதான் மொழிவழி தேசியமும்.

ஆகவே இந்திய, தமிழ்ச்சமூகத்தின் மனநிலை நெடுங்காலமாகவே ஒடுக்குகிற அல்லது ஒடுங்குகிற நிலைக்குதான் பழக்கப்படுத்தப்பட்டுள்ளது. சகமனிதனை சமமாக கருதுகிற மேன்மையான குணம் அதற்கு தெரியாத ஒன்று. சமத்துவவுணர்வை ஒருபோதும் துய்த்திராத அந்த மனம்- அதனாலேயே சுதந்திரவுணர்வையும் துய்க்கமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது. தத்தமது சாதியின் புனிதத்தைக் காப்பாற்றும் பொறுப்பு ஒவ்வொரு தனிமனிதனின் பொறுப்புகளிலும் தலையாயதாய் நிறுவப்பட்டிருப்பதால் எப்போதும் ஒரு தற்காப்பு மனநிலையிலேயே வாழ வேண்டியராயிருக்கிறார். சற்று அயர்ந்தாலும் மோசம் போய்விடுவோம் என்ற பீதியில் உறைந்துகிடக்கும் ஒருவரது மனநிலை அழுத்தம் தாளாது நிலைபிறழ்ந்து தம்மைச்சுற்றி பாதுகாப்பு அரண்களை நிறுவிக்கொள்ளவேண்டியிருக்கிறது. மாற்றாரைத் தடுக்க அமைக்கப்பட்ட இந்த தடுப்பரணுக்குள் ஒவ்வொரு சாதியும் ஒவ்வொரு தனிமனிதரும் ஒரு கைதியாக வாழ்ந்து கொண்டிருப்பதுதான் இன்றைய நிலை.

எனவே இந்திய- தமிழ்ச் சமூகத்தின் மனம், பாரபட்சங்களையும் புறக்கணிப்பையும் அநீதியாக பார்ப்பதற்கு

துணிவதில்லை. அம்மாதிரியான அநீதிகளை இயல்பானதாக ஏற்றுக்கொள்வதும் அதை சகமனிதர்மீது நிகழ்த்திப் பார்க்கத் துணிவதாயுமே இருக்கிறது. அசமத்துவத்தை, ஒடுக்குமுறையை இயல்பானதாக ஏற்றுக்கொள்கிற இந்த மனநிலைதான் - சமூக ஒடுக்குமுறைக்கு ஆளாகிற- அதன் காரணமாகவே அரசியல், பொருளாதார, பண்பாட்டுத் தளங்களிலும் ஒடுக்கப்படுகிற- தலித்துகளையும்கூட, தமக்குள் உட்சாதிப் பிளவுகளை பேணுவதிலும் தம்வீட்டுப் பெண்களை ஒடுக்குவதிலும், இழிவாக- தம்மிலும் கீழானவர்களாகக் கருதுவதற்கு நெட்டித்தள்ளுகிறது.



இந்தப் பின்புலத்தோடு கலைஇலக்கியத்தை மதிப்பீடு செய்யப் புகுந்தால் அங்கும் அசமத்துவமான பிரதிநிதித்துவமும், வாழ்வின் எல்லாநிலைகளிலும் ஊடாடி வழிநடத்தும் சாதிய/ பால்நிலைச் சாய்மானமும் வெளிப்பட்டிருப்பதை உணரமுடியும். நிலவும் ஏற்றத்தாழ்வான நிலைகளை இயல்பான ஒன்றாக ஏற்றுக்கொண்ட ஒரு சமூகத்தின் அங்கத்தினராய் இருக்கிற ஒருவர் தம் வாழ்வியல் அனுபவங்களிலிருந்து எதை- ஏன்- எப்படி- எதற்காக வெளிப்படுத்த முன்வருகிறார் என்ற தொடக்கப்புள்ளியிலேயே அவரது சாய்மானமும் உள்ளுறையாக இணைந்துவிடுகிறது. தன் படைப்புமனதை வெளிப்படுத்த அவர் வாய்மொழி மரபைத் தெரிவு செய்கிறாரா அல்லது எழுத்துவழியாக வெளிப்படுத்துகிறாரா என்பதிலும்கூட அவரது சாய்மானம் இணைந்தே இருக்கிறது. அதாவது இந்த நாட்டில் கல்வி கற்கும் உரிமை யாருக்கு எப்போது கிடைத்தது அல்லது கிடைக்கவில்லை என்பதோடு அது தொடர்புடையதாய் அமைகிறது.

ஆனால் இப்படி சொல்கிறபோது சிலர் ஆகாயத்துக்கும் பூமிக்குமாய் தவ்விக் குதிக்கிறார்கள். இலக்கியமும் கலைகளும் எல்லோருக்கும் பொதுவானது என்று கழுத்துநரம்பு புடைக்க கர்ஜிக்கிறார்கள். அப்படி இருந்தால் சரிதான் நண்பர்களே. ஆனால் இல்லை என்பதுதானே எதார்த்தம்? நிலம் நீர் காற்று ஆகாயம் பணம் காசு பண்டம் அனைத்தையும் சாதிப்பாஷாணத்தில் தோய்த்து தொங்கவிட்டிருக்கிற இந்த சமூகத்தில் இலக்கியம் மட்டும் எப்படி எல்லோருக்கும் பொதுவாய் இருக்கமுடியும் என்ற எளிய கேள்விக்கு இவர்களிடம் பதிலில்லை. இளமையில் கல் என்ற அவ்வையின் மரபும், எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும் என்ற வள்ளுவர் மரபும் அழித்தொழிக்கப்பட்டு கற்கும் உரிமையை சில சாதிகளின் ஆண்களுக்கு மட்டுமே வார்த்துக்கொடுக்கும் நிலை உருவாகி நிலைத்து நின்றுவிட்ட இச்சமூகத்தில் கல்வியோடு மிகநேரடியாக தொடர்பு கொண்டிருக்கும் கலையும் இலக்கியமும் எல்லாவற்றிலிருந்தும் விலகி சுயம்புவாக எப்படி வெளிப்பட முடியும்?

மொழி எல்லோருக்கும் பொதுவென்றால் ஏன் சமஸ்கிருதம் மட்டும் தேவபாஷையாக அறிவிக்கப்பட்டது? நமஸ்காரம் என்ற சமஸ்கிருதச் சொல்லை பொற்கொல்லர்கள் உச்சரிக்கக்கூடாது என்று பிரிட்டிஷ் அரசிடம் மனுபோட்டு தடையுத்தரவு பெறப்பட்டது எதனால்? இழிசனர் வழக்கென்ற

பதம் எதன்பொருட்டு உருவானது? இசை புனிதமென்றால் இசைக்கருவிகளும் புனிதம்தானே? எனில் ஏன் திருவையாற்றில் 'நன்னா வாசிக்கிறவாள்' ஒருத்தரும் பறையைத் தொடுவதில்லை? இந்தியாவின் தமிழகத்தின் செவ்வியல் மரபின் கலை வடிவங்களாக முன்னிறுத்தப்படுபவை எந்த சாதிக்குரியவை? கலாச்சாரப் பரிவர்த்தனைகளின் பெயரால் இந்தியாவிலிருந்து பிறநாடுகளுக்கு அறிமுகப்படுத்தப்படுகிறவை இந்த நாட்டின் பெரும்பான்மை மக்களுக்குரியவையா? பார்ப்பனர்களின் அனைத்தும் பார்ப்பனர்களின் கைச்சரக்குகள் அனைத்தும் தேசிய கலைவடிவங்களாக அந்தஸ்துப்படுத்துவதும், பார்ப்பனரல்லாதவர்களின் கலைவடிவங்களை 'எதினிக்' அல்லது' 'ஃபோ(ல்)க்' என்றோ வகைப்படுத்துவதும் தற்செயலான நிகழ்வுகளா?

இப்படி எல்லாமே சாதியாகத்தான் இருக்கிறது. இதற்குள் இருக்கிற படைப்பாளியும் சாதிவயப்பட்டவராகவே இருக்கிறார். அவர் அறிந்தவற்றை தன் படைப்பாக வெளிப்படுத்துகிறார் என்றால் அவர் அறிந்திருப்பதெல்லாம் அவரது சாதி கற்றுக்கொடுத்ததைத்தான். அவரவர் சாதி அவரவருக்கு விதித்த வரம்புகளை மீறி எழுதவும் பேசவும் ஒருவர் இயல்பாக முயற்சிப்பதில்லை. (மிகுந்த அரசியல் விருப்புறுதி கொண்ட விதிவிலக்கான சிலரை இங்கே பொருட்படுத்தி பேசவேண்டியிருந்தாலும் அவர்கள் மிகவும் சொற்பமானவர்கள் என்றே குறித்துக்கொள்ள வேண்டும்.)

தன் சாதி பிறரை என்னவாகப் பார்க்க வேண்டும் என்று கற்றுக் கொடுத்திருக்கிறதோ அந்த பொதுப்புத்தியிலிருந்து தன்னை ரத்தம் சொட்டச் சொட்ட அறுத்துக்கொண்டு வெளியேறாமல்- அப்படி அறுத்துக்கொள்ளும்போது ஏற்படும் வலியையும் வாதையையும் வாய்விட்டுக் கதறி வெளிப்படுத்தத் துணியாமல்- நிலவும் சூழலை நியாயப்படுத்துகிற ஒருவரிடமிருந்து- அவர் கொம்பாதி கொம்பு படைப்பாளியாயிருந்தாலும் அவரிடமிருந்து வெளிப்படுகிற படைப்புகளை- அவை எத்தனை உன்னதமானதென்று உலகம் கொண்டாடினாலும் - அவை காகிதத்திற்கு கேடானது என்பதே என் கருத்து.

எனவே இதுவரையான கலைஇலக்கியப் படைப்புகளை வாசிப்புக்கு உட்படுத்துகிற ஒரு தலித் மனம் அவற்றை தன் அகநிலை சார்ந்தே அணுகுகிறது. அவற்றில் சித்தரிக்கப்பட்டுள்ள வாழ்க்கை எவருடையது? அதில் தலித்துகள் இடம் பெற்றிருக்கிறார்களா இல்லையா? இடம் பெற்றுள்ளனர் என்றால் எவ்வாறு? என்றெல்லாம் அது படைப்புகளை பரிசீலிக்கிறது. பொத்தாம்பொதுவானதென்று நீங்கள் அறிவித்துக் கொண்ட எல்லாமே போலியானவை. அவை உங்கள் சாதிப் பெருமிதங்களை- சகமனிதரை ஒடுக்குவதற்கான நியாயங்களை- ஒடுங்கிக்கிடக்க வேண்டியதன் அவசியத்தைப் போதிக்கவே கைக்கூலிச் சரக்குகளாக சந்தைக்கு வந்துள்ளன என்று கடைசியில் அறிவிக்க வேண்டியதாயிற்று. இப்படி உருவானதுதான் தலித் விமர்சன மரபு.

*3.*

இதுவரையான கலைஇலக்கியங்கள் மீதான விமர்சனத்தோடு தலித் மனம் நிறைவடைந்துவிடவில்லை. அது தன் சொந்த வாழ்க்கையை தன் சொந்த மொழியில் படைக்கத்தொடங்கியது. எழுத்தறியும் வாய்ப்பு மறுக்கப்பட்டிருந்தாலும், வாய்மொழி மரபிலும் நிகழ்த்துக்கலைகளிலும் தமது வளமார்ந்த படைப்புமனத்தை தக்கவைத்துக் கொண்டிருந்த தலித்துகளிடமிருந்து வெளிப்பட்ட படைப்புகள் இதுவரை இந்திய சமூகத்தின் வாசகப்பரப்பு அறியாதவை. வாய்மொழி மரபும் எழுத்துமரபும் இணைந்த - கூகி வாங் தியாங்கோ சொல்கிற 'ஓரேச்சர்' மாதிரியான ஒரு புதுவகைமையான தலித் படைப்புகளில் புதைந்திருந்த உலகமும் அதை வெளிப்படுத்திய மொழியும் திடுமென எங்கிருந்தோ உதித்த அல்லது குதித்த மாந்திரீக வஸ்துவல்ல. ரவிதாசர், சொக்கமேளா, ஜோதிராவ் பூலே, டேனியல் என்று சாதியொடுக்குமுறைக்கு எதிரான ஒரு நீண்ட பாரம்பரியத்தில் உருவாகி அது வளர்ந்திருக்கிறது.

உண்மையில் தலித்துகள் புதிதாக எதையும் படைக்கவில்லை. தங்களது வாழ்வை பாசாங்கின்றி

வெளிப்படுத்துகிறார்கள், அவ்வளவுதான். தீட்டு தோஷம் என்கிற கெடுங்குணங்களால் வழிநடத்தப்படும் சாதிய மனம் தலித்துகளின் வாழ்வை அருகிருந்து நேரில் பார்க்கத்தவறிவிட்டது இத்தனைக்காலமும். இப்போது இலக்கியப்படைப்புகள் வழியே தரிசிக்கிறபோது புதியனவாக அவை தெரிவதில் வியப்பொன்றுமில்லை. இவ்வளவு காலமும் எட்டிப்பார்க்காமல் இருந்த தன் சாதியமனம் குறித்து குற்றவுணர்வு கொள்வதற்கு பதிலாக, இலக்கியத்திற்குள் சாதியா? இலக்கியத்தில் இடஒதுக்கீடா? என்று பொருமத் தொடங்கினார்கள். மராட்டியத்தில் தொடங்கிய இந்த பொருமல் இன்னும் ஓய்ந்தபாடில்லை. தலித் இலக்கியம் என்று ஒன்று இருந்தால், மற்ற ஒவ்வொரு சாதிக்கும்



தனித்தனியாக இலக்கியம் இருக்கிறதா என்று அப்போது ஒரு கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு மிகுந்த பொறுப்புணர்வோடு தலித் இலக்கியத்தின் முன்னோடிகள் பாகுராவ் பாகுல், அர்ஜூன் டாங்ளே போன்றவர்கள் பதிலளித்துவிட்டார்கள். தலித் இலக்கியம் என்பது என்ன, தனியாக அது உருவாக வேண்டிய அவசியம் என்ன வந்தது, தலித் இலக்கியத்தின் நோக்கம் எவையெவை என்றெல்லாம் ஒருபாடு விளக்கம் கொடுக்கப்பட்டாகிவிட்டது அப்போதே. ஆனால் நாற்பது வருடத்துக்கு முந்தைய அரதப் பழசான அந்த கேள்விகளைத் தூக்கிக்கொண்டு - அவை புத்தம்புதிதாக தம் சொந்த மூளையில் (இப்பகுதி நகைச்சுவைக்கானதல்ல) உதித்தவை என்ற பாவனையோடு இன்றும் சிலர் 'எனக்கொரு உண்மை தெரிஞ்சாகணும் சாமீ' என்று முதல் மரியாதை வீராசாமிபோல அலைந்தால் நாமென்ன செய்வது? ஆனாலும் இந்தக் கேள்வியை தூக்கிக்கொண்டு திரிய இமையம், சோ.தருமன் போன்று யாராவது 2008லும் இருக்கத்தான் செய்கிறார்கள். பாவம், சம்பளம் இல்லாத போர்ட்டர்கள். இன்னும் சா.கந்தசாமி வெளிப்படையாகவே கேட்கிறார்- தலித் இலக்கியம்னு ஒன்னு இருந்தா செட்டியார் இலக்கியம்னு, நாடார் இலக்கியம்னு, வெள்ளாளர் இலக்கியம்னு இருக்குதா? என்று. அய்யா சாதி கடந்த சமத்துவத் திலகமே, நீங்களெல்லாம் சேர்ந்து இலக்கியத்தை அந்த லட்சணத்தில்தான் சாதிவாரியாக சீரழித்து வைத்திருக்கிறீர்கள், அதை அம்பலப்படுத்தி சரிப்படுத்தத்தான் தலித் இலக்கியம் மல்லுக்கட்டிக் கொண்டிருக்கிறது என்று நாம் மெத்தப் பணிவோடு சொல்ல வேண்டியிருக்கிறது.

சாதியொடுக்குமுறைக்கு பணிந்துபோவது, சாதியொடுக்குமுறையை எதிர்த்து நிற்பது என்ற இருவகைப் பண்புகள் தலித்துகளிடம் காணப்படுகிறது. அதில் பணிந்துபோகும் குணத்தை வலியுறுத்தவே தலித்தல்லாதவர்களது படைப்பின் நோக்கமாய் இருந்துவருகிறது. ஆனால் தலித்துகளின் மீறல் குணத்தை மேலும் வளர்த்தெடுப்பதை நோக்கமாகக் கொண்டதே அசலான தலித் படைப்புகள். உடலுழைப்பை இழிவாய் எண்ணும் ஆதிக்கசாதி மனோபாவத்தை வெளிப்படுத்துவது பிறரது படைப்புகளென்றால், உழைக்கும் மக்களாகிய தலித்துகளின் படைப்புகள் உழைப்பைக் கொண்டாடுவதாய் இருக்கும்.



4.

பொத்தாம் பொதுவான இலக்கியம் என்கிற மோசடியை அம்பலப்படுத்தி தனித்துவமான அழகியலையும் உட்பொருளையும் வடிவ ஒழுங்கையும் நிறுவிக்கொண்டுள்ள தலித் இலக்கியம் உள்வயமான சில கேள்விகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. அது இந்தியாவில் இருக்கிற 1088 தலித் சாதிகளின் - அல்லது தமிழ்நாட்டிலிருக்கிற 77 சாதிகளின் குரலையும் பிரதிநிதித்துவம் செய்கிறதா? ஆம் என்றால், எவ்வாறு? இல்லையென்றால், ஏன்? இப்படிக் கேட்டதுமே, தலித் என்றால் தலித்து தான், இதில் என்ன பறையன் பள்ளன் சக்கிலி என்ற பாகுபாடு? என்று சாமார்த்தியமாக எதிர்கேள்வி வைக்கப்படுகிறது. இது சமதர்மி சா.கந்தசாமியிடம் இரவல் பெற்ற குரல்தான். (ஒருவேளை, இதைத்தான் சிலர் கூடுவிட்டு கூடுபாய்தல் என்கிறார்களோ?) அல்லது, இலக்கியத்தின் புனிதத்தைக் கெடுத்துவிடாதீர்கள் என்ற இலக்கிய உபாசகர்கள் வெற்றிலைக்காம்பை கிள்ளிக்கொண்டே வைத்த கோரிக்கையின் மறுபிரதிதான்.

இந்தியர் என்ற பேரடையாளத்தின் பலன்கள் பார்ப்பனர்களுக்கும், தமிழர் என்ற பேரடையாளம் பார்ப்பனரல்லாத உயர்சாதியினருக்கும் பயன்பட்டதைப்போல தலித் என்ற அடையாளத்தின் பலன்கள் ஒருசில தலித் சாதிகளுக்கு மட்டுமே கிடைத்துக்கொண்டிருக்கிறதா? என்று சமூக அரசியல் பொருளாதார பண்பாட்டுத்தளங்களில் எழும் இந்தக் கேள்விக்கான பதில், தலித் இலக்கியத்திற்கும் பொருந்தும். உண்மையில் தலித் இலக்கியம் என்ற பெயரால் வெளிப்படும் வாழ்வு எவருடையது என்ற கேள்வியானது, வெளியை ஜனநாயகப்படுத்துவதை உட்கிடக்கையாகக் கொண்டது. அதாவது, அசமத்துமான சமூகச்சூழலை சமத்துவமுடையதாய் மாற்றியமைப்பதை நோக்கமாய் கொண்டுள்ள தலித் இலக்கியமும் தலித் இயக்கமும், தாமேயொரு முன்னுதாரணமாய் மாறிக் காட்ட வேண்டியுள்ளது. தலித் என்ற பொது அடையாளத்தை மெய்யாகவே தமது பொது அடையாளமாக தலித்துகள் அனைவரும் உணரும்படியாக செயல்வழியே நிறுவ வேண்டியுள்ளது. அதன்பொருட்டு அது தனக்குள்ளிருக்கும் உள்முரண்களை தீர்த்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. (தீர்த்துக்கட்டுவதல்ல)

5.

தலித்துகளில் மிகவும் ஒடுக்குமுறைக்கு ஆளாகியிருக்கும் அருந்ததியர்களது வாழ்வுரிமையானது எல்லாமுனைகளிலும் கீழ்ப்படுத்தப்பட்டிருக்கிறது. கிணற்றுப் பாசனத்தைக் கொண்டிருந்த விவசாயத்திற்குத் தேவையான பரியை மூட்டித் தருவது, போர்முனைகளுக்குத் தேவையான தோல்கருவிகளை தயாரிப்பது, விவசாயப் பணிகளில் ஈடுபடுவது, செருப்பு தைப்பது என பெரும்பாலும் தோல்பணியாளர்களாகவே அறியப்பட்ட இம்மக்கள், மின்சாரம்- பம்புசெட்- பிளாஸ்டிக்- ரப்பர்- என்று உருவான மாற்றங்களால் தங்களது பாரம்பரியத் தோல்தொழிலை இழந்து மலமள்ளுகிறவர்களாகவும் துப்புரவுப் பணியாளர்களாகவும் சீரழிக்கப்பட்டுள்ளார்கள். பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள், தலித்துகளை


ஈடேற்றியதாய் சொல்லிக்கொண்டிருக்கும் சிலர், அருந்தியர்களை மலமள்ளிகளாக மாற்றியது அந்த ஆட்சிதான் என்பதை மறந்துவிடுகிறார்கள்.

நவீன விஞ்ஞான தொழில்நுட்பங்கள் எவ்வளவோ வளர்ந்துவிட்ட நிலையிலும் கையால் மலமள்ளும் கொடுமையிலிருந்து அருந்ததியர்களை விடுவிப்பதற்கான தொழில்நுட்பங்கள் இங்கே வர மறுக்கின்றன. 1993ம் ஆண்டிலேயே, கையால் மலமள்ளுதல் தடைசெய்யப்பட்டுவிட்டாலும், இன்னும் 13 லட்சம்பேர் இத்தொழிலில் பலவந்தமாய் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அருந்ததியர்களுக்கு கல்வியளித்து ஆற்றல்படுத்தும் முயற்சி 1920 களிலேயே திரு.எல்.சி.குருசாமி போன்றவர்களால் தொடங்கப் பட்டிருந்தாலும் அந்த நோக்கு எட்டப்படாததாகவே இருக்கிறது. இந்தநிலையில்தான் அருந்ததியருக்கு உள்ஒதுக்கீடு என்ற நியாயமான கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. வால்மீகி பஞ்சாயத் என்ற அமைப்பின் கோரிக்கையாகத் தோன்றி பின் நாடெங்கும் பரவியது இம்முழக்கம். பஞ்சாபில் 1975 ஆம் ஆண்டிலிருந்தும், தொடர்ந்து அரியானாவிலும், 01.04.2000 முதல் ஆந்திரத்திலும் இந்த உள் ஒதுக்கீடு நடைமுறைக்கு வந்தது. இடஒதுக்கீட்டுக்கு எதிராக ஆதிக்கசாதிகள் என்னென்ன வாதங்களை முன்வைப்பார்களோ அதே வாதங்களை இரவல் வாங்கி ஆந்திரத்து மாலாக்கள் வழக்காடினர். உச்சநீதி மன்றத்தின் தீர்ப்பு ஆந்திரத்தில் மட்டுமல்லாது அதற்கும் முன்பாகவே அமலில் இருந்த பஞ்சாப், அரியானாவையும் பாதித்தது. இப்படியாக 5.11.2004உடன் உள்ஒதுக்கீடு கோரிக்கை முடிவுக்கு வந்துவிட்டது போலத் தோன்றுகிறது.

ஆனால் உள்ஒதுக்கீடு என்பது அருந்ததியர்களின் மிக அடிப்படையான கோரிக்கை. அதை நீதிமன்ற அல்லது சட்டவிளக்கங்கள் வழியாக புரிந்துகொள்ள முடியாது. சமூகநீதி, பாரபட்சமான நியாயம் என்ற அரசியல் நிலைபாட்டிலிருந்தே விளங்கிக்கொள்ள முடியும். தவிரவும் இது சாத்தியம் தான் என்பதற்கு குஜ்ஜார் மக்களின் போராட்டமும் இப்போது அவர்கள் கோரிக்கை ஏற்கப்பட்டிருப்பதும் சமீபத்திய உதாரணங்கள். தமிழகத்தில் ஓபிசி இடஒதுக்கீட்டில் எம்பிசி என்று புதிதாக வகைப்படுத்தி 20 சதவீதம் உள் ஒதுக்கீடு பெற்ற முன்னுதாரணம் இருக்கிறது. ஓபிசிக்குள் சாத்தியம் என்றால் தலித்துகளுக்குள்ளும் சாத்தியம்தான் என்ற புரிதலில்தான் விடுதலை சிறுத்தைகள் கட்சி தனது தேர்தல் அறிக்கையொன்றில் அருந்ததியர் உள் ஒதுக்கீட்டை ஆதரித்திருந்தது. ஆனாலும் அது தன் நிலைபாட்டில் உறுதியாயில்லை. புதிய தமிழகம் போலவே விடுதலை சிறுத்தைகள் அமைப்பும் உள் ஒதுக்கீட்டை எதிர்க்கின்றன. சமூக வளங்களை தலித்துகளுடன் பகிர்ந்துகொள்ள மறுக்கிற ஆதிக்கசாதி மனோபாவத்தை இந்த அமைப்புகள் கைவிட வேண்டும் என்பது என் விருப்பம்.

6. மனித மாண்புகளுடன் வாழ்வதில் பேரார்வம் கொண்டிருக்கிற அருந்ததிய மக்களை தமிழிலக்கியம் பெரிதாக கவனப்படுத்திவிடவில்லை. ஒருசில படைப்புகளிலும் அவர்கள் இழிவாகவே சித்தரிக்கப்பட்டுள்ளார்கள்.

'ஒரு மனிதன் தன் வயிற்றை சுத்தம் செய்ய
மலம் கழிக்க வேண்டியிருக்கிறது.
ஆனால் மலத்தை சுத்தப்படுத்தி
வயிற்றை நிரப்பவேண்டியக் கொடுமை
அருந்ததியர்களுக்கு நேர்ந்திருக்கிறது' என்ற
தோழர்.ஜக்கையனின் துயரம் பொங்கும் வார்த்தைகளை
உள்வாங்காத இந்த சமூகத்தின் மீது
பீயைத்தான் கரைத்து ஊற்ற வேண்டியிருக்கிறது.



# எம்.ஆர்.இராதா எங்கள் கலைஞன்

-ஓவியா-
தமிழ்நாடு

பெரியாரின் போர்வாளாக திராவிட இயக்கத்திற்குக் கிடைத்த ஒப்பற்ற கலைஞனாகத் திகழ்ந்த நடிகவேள் எம்.ஆர் இராதாவின் நினைவு நூற்றாண்டை தமிழகம் இப்போது போற்றிக் கொண்டிருக்கிறது. திராவிட இயக்கக் கொள்கைக்கு திரை வாரிசுகளாக் கிடைத்த ஒப்பற்ற இரு கலைஞர்கள் கலைவாணரும் எம்.ஆர் இராதாவும் ஆவார்கள். இதில் கலைவாணர் மூடநம்பிக்கை ஒழிப்பு என்ற பெரியாரின் கொள்கைக்கு மட்டும் வாரிசானவர். எம்..ஆர் இராதாவோ பெரியாரின் தசையும் இரத்தமுமாய் தன்னை பாவித்து அந்தக் கட்சியின் போர்வாளாய் மிளிர்ந்தவர். கட்சியை பயன்படுத்தி கலைஉலகில் நின்றவர் இல்லை. மாறாகக் கலைஉலகில் தனது திறமைக்கு கிடைத்த இடத்தை தான் இருந்த இயக்கத்திற்கும் அதன் தலைவராம் பெரியாருக்கும் காணிக்கையாக்கியவர். மா.பொ.சி ஒருசமயம் பெரியாரை மிகவும் தாக்கி பேசிக்கொண்டிருந்தார். அந்த நேரத்தில் இரத்தக் கண்ணீர் நாடகம் போடுகிறார் இராதா. ஒவ்வொருநாள் நாடகத்திலும் அன்றைய அரசியலுக்கு ஏற்றாற் போல இராதாவின் வசனங்கள் மாறிவிடும். அந்த நாள் நாடகத்தில் தனது தாயார் இறந்ததற்கு அழுவதுபோல காட்சி. இராதா அழுகின்றார். "மா.பொ.சியே இன்னும் சாகலையேம்மா அதுக்குள்ள நீ செத்துட்டியே……" என்று. பெரியாரைப் பேசியதற்கு இராதா கொடுத்த பதிலடி இது. ஒரு கலைஞனால்தான் இப்படிப்பட்ட பதிலடிகளைக் கொடுக்க முடியும். ஒரு மேடைப்பேச்சாளர் இப்படிப் பேசமுடியுமா? முடியாது. அது அநாகரீகமாகி விடும். இப்படி ஒரு கலைஞனுக்குக் கிடைக்கும் தனித்துவமான வெளியை முழு ஆற்றலுடன் திராவிடர் கழகத்தின் தளமாக ஆக்கியவர் இராதா. இராதாவிற்கு இணையான இன்னொரு கலைஞனை திராவிடர் கழகம் அதன்பின் பெறவே இல்லை.

இராதாவின் நடிப்பாற்றலை உலகம் நன்கறியும். அவர் யாரையாவது தனது மாதிரி மனிதராகக் (ரோல் மாடலாகக்) கொண்டிருந்தாரா என்பது நமக்குத் தெரியவில்லை. ஆனால் அவருடைய நடிப்பும் மொழியும் (உடல்மொழி வாய்மொழி இரண்டுமே) தனி ஆளுமையும் ஆற்றலும் மிக்கவை. இன்று தமிழ்த் திரையுலகில் அறிவார்ந்த நகைச்சுவை நடிகரும் எம்.ஆர் இராதாவின் சாயல் தன்மீது படிவதைத் தவிர்த்து விட முடியாது. அந்த அளவில் அவரது நடிப்புக்குக் கூட வாரிசுகள் உருவாகி விடலாம். ஆனால் அவருடைய துணிச்சலுக்கு யாராவது இதுவரை பக்கத்திலாவது வர முடிந்திருக்கிறதா?. தான் துணிந்து நின்றது மட்டுமல்ல தனது நாடகத்திற்கு வரும் பார்வையாளர்களுக்கும் வீரமூட்டும் ஆற்றல் மிக்கவராக அவர் விளங்கியிருக்கிறார். பிறர் நடத்தும் நாடகங்கள் பேசப்படுபவையாக இருந்ததுண்டு. ஆனால் எங்களது திராவிடர் கழக குடும்பங்களில் இராதா நாடகத்திற்கு சென்று வந்த அனுபவங்கள் பற்றி எங்கள் குடும்பப் பெரியவர்கள் கதைபோல் எங்களிடம் சொல்லி வந்திருக்கிறார்கள். இப்போது கூட இராதாவிற்கு எடுக்கப் பட்டு வரும் பாராட்டு விழாக்கள் பற்றி தற்போது எண்பது அகவையைக் கடந்து விட்ட எனது பாட்டியாரிடம் தெரிவித்தேன். அந்தக் காலத்தில உயிருக்குத் துணிஞ்சவங்க என் நாடகம் பார்க்க வாங்க" ன்னு கூப்பிடுவார் இராதா. நாங்கள்ளாம் போயிருக்கோம். கம்பு கபடான்னு எல்லாம் தயாரா வைச்சுக்கிட்டுத்தான் நாடகம் போடுவார்

என்று நினைவு கூர்ந்தார்.

எப்பேர்ப்பட்ட கலைஞனாக இருந்தாலும் பொது மக்களின் பகையை தேடிக் கொள்ள துணியமாட்டான். ஆனால் "எனது நாடகம் கேட்டு மனம் புண்படுகிறது என்பவர்கள் எனது நாடகத்திற்கு வரவேண்டிய தேவையில்லை. அவர்கள் தருகிற காசும் எனக்குத் தேவையில்லை" என்று வாசலில் எழுதி வைத்து விட்டு நாடகம் நடத்தியவர் இராதா. நினைந்து நினைந்து வியப்படைய வைக்கும் துணிச்சல் இது. இந்தத் துணிச்சல் பெரியாரிடமிருந்து இராதாவிற்கு வருகிறது. தான் எந்த மக்களுக்காகப் பாடுபட்டாரோ அந்த மக்களுடைய எதிர்ப்பிற்கிடையிலேயே வாழ்ந்தவர் பெரியார். அந்த வழியை தனது கலைப் பயணத்தில் பின்பற்றியவர் இராதா. அவர் நடத்திய நாடகங்களுக்கு மட்டுமல்ல திரைச்சீலைகளுக்கும் கூட அரசாங்கம் தடை விதித்திருந்தது. அவருடைய நாடகங்கள் நடக்கும் ஊர்களில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டது. ஆனால் அத்தனையையும் எதிர்த்து நீச்சல் போட்டன இராதாவின் நாடகங்கள். தங்கள் இயக்க மாநாடுகளுக்குப் போகும் போராட்ட உணர்வோடே பெரியாரின் தொண்டர்கள் அவருடைய அரங்கங்களை நிறைத்தார்கள்.

இன்றும் கூட இந்த மனம் புண்படுகிறது என்ற கூச்சல் ஓயவில்லையே இந்த நாட்டில்?. அந்த கூச்சலைக் காரணம் காட்டியோ அல்லது அந்தக் கூச்சலுக்குக் கட்டுப்பட்டோதானே இன்றுவரை இங்கு அரசியல் நடந்து வருகிறது. இன்று இராதா இல்லை. ஆனால் அன்று அவர் நடத்திய இராமாயணம் நாடகம் இன்று இந்தியா முழுமைக்கும் தேவைப்படுகிறது. இராதா இன்று இருந்திருந்தால் நிச்சயம் அந்த சாதனையை செய்ய முன்வந்திருப்பார்.

பெரியார் தனது இயக்கத்திலும் தனி வாழ்விலும் செய்த செய்ய முயன்ற விசயங்களுக்கான பிரச்சார மேடையாக தனது கலைப் பயணத்தை நடத்தினார் இராதா. பெரியார் பெண்களின் உடை மாறவேண்டும் என்ற கருத்தைப் பிரச்சாரம் செய்தார். தனது மனைவி நாகம்மையாரை லுங்கி உடுத்திக் கொள்ளச் செய்தார். இராதா தான் நடித்த திரைப்படங்களில் பெண்களை நவீன உடைக்கு மாறச் சொல்பவராகத் தோன்றினார். இரத்தக் கண்ணீரில் தனது தாயாரைக் கவுண் போட்டுக் கொள்ளச் சொல்வார். இன்று வரையிலும் கூட நமது நாயகர்கள் தங்கள் காதலிக்குத்தான் நவீன உடையை மாட்ட விரும்புவார்களே தவிர தனது தாயாருக்கு அதனைச் செய்ய மாட்டார்கள். இராதா அம்மாவை கவுண் போடு என்று பேசிய வசனம் மேலோட்டமான ஒன்றல்ல.

காலத்தின் கலைஞன் இராதா என்ற தலைப்பில் எழுத்தாளர் மணா அவர்கள் வெளிக் கொணர்ந்திருக்கும் நூல் இராதாவின் பல்வேறு பரிமாணங்களை எடுத்து வைக்கின்றது. அதில் நடிகை மனோரமா இராதாவைப் பற்றிக் கூறியிருக்கும் நினைவுகள் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தவையாக இருக்கின்றன. விருப்பமான பெண்களுடன் உறவு வைத்துக் கொள்ள தனக்கிருக்கும் உரிமை சம்பந்தப்பட்ட பெண்களுக்கும் இருக்கிறது என்ற புரிதலுள்ள மனிதராக இராதா இருந்திருக்கிறார் என்ற செய்தி அவருக்குள்ளிருந்த பெரியாரின் இன்னொரு பரிமாணமாகத் தோன்றுகின்றது.

பெரியாரிடமிருந்து மாறுபட்டும் தேர்தல் போன்ற நேரங்களில் முடிவெடுத்துச் செயல்பட்டிருக்கின்றார் இராதா. அதைப் பற்றி யாராவது கேட்டால் அவர் சொல்லும் பதில்தான் முக்கியமானது. ஆமாம் நான் பெரியாரின் பக்தன். எனக்குத் தோன்றியதைத்தான் செய்வேன் என்பாராம். பெரியாரின் சுயசிந்தனைக்கான தாகத்தை அவர் உள் வாங்கியிருக்கின்றார். பெரியாரும் இதில் தலையிட்டதில்லை. எப்பேர்ப்பட்ட அரசியல் கலாச்சாரம் அன்று நிலவியிருக்கின்றது?. அந்த நாட்டில்தான் இன்று காலில் விழும் கலாச்சாரம் இருக்கின்றது என்று நினைக்க வேதனையாகத்தான் இருக்கிறது.

இவ்வளவு சிறப்புகளுக்குரிய மனிதராக இருந்த இராதா விரைந்து உணர்ச்சிகளுக்கு அடிமையாகக் கூடியவராக இருந்ததும் அவருடைய போதைப் பழக்கமும் சேர்ந்து அவரை ஒரு குற்றவாளியாக சிறைக்குள் தள்ளும் நிலை (துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம்) ஏற்பட்டு விட்டது. தனது இயக்கத்திற்கு ஒரு கலைஞன் கிடைத்திருக்கிறான் என்று பெரியார் அகமகிழ்ந்திருந்த நேரத்தில் அவரது இந்தச் செயல் பெரியாரை அதிர்ச்சிக்கும் கோபத்துக்குமாளாக்கியிருக்கிறது. உண்மையிலேயே இராதா தேடிக்கொண்ட நெருக்கடி திராவிட இயக்கத்திற்கு ஒரு பின்னடைவையே ஏற்படுத்தியது. இராதாவின் கலைப்பயணமும் அதன்பின் சோபிக்கவில்லை. அது நம் எல்லோருக்குமே இழப்புத்தான். மற்ற ஊடகங்கள் இதனை அரசியல் அவல் ஆக்கிக் கொண்டிருந்தபோது விசயத்தை விளக்கி விடுதலை நாளேடு மட்டுமே செய்தி வெளியிட்டது. இரு கூத்தாடிகளுக்கிடையிலான தொழில் தகராறு இது என்று பெரியார் கடுமையானகண்டனத்துடன் செய்தி வெளியிட்டார். தனது இயக்கத்தைச் சேர்ந்தவர் என்பதால் இராதாவிற்கு அனுசரணையாக நடந்து கொள்ள அவர் எண்ணவில்லை. அவர்தான் பெரியார். அதற்குப் பிறகும் இராதா சிறையிலிருந்த போது அவரது இல்லத் திருமணம் பெரியார் தலைமையில்தான் நடந்தது. சிறையிலிருந்து வெளியேவந்த இராதா தொடர்ந்து இறுதிவரை பெரியார் தொண்டராகவே வாழ்ந்து மறைந்தார். அவர்கள் மாமனிதர்கள்.

# இருபதாவது வருடத்தில் இலக்கியச் சந்திப்பு

-லியோன் இலண்டன்-
படங்கள்: அசுரா, சரவணன்



35வது இலக்கியச்சந்திப்பு ஜேர்மனி ஸ்ருட்காட்டின் புறநகரான ஒஸ்ட்பில்டனில் (Ostfildern) நடைபெற்றது. பல நாடுகளிலிருந்து அநேகர் கலந்து கொண்ட இச்சந்திப்பின் முதல்நாள் நிகழ்வுகள் சிவராஜாவின் வரவேற்புரையுடன் ஆரம்பமானது. அவர் தனதுரையை பரா அவர்களை நினைவுகூர்ந்து ஆரம்பித்தார். இருபது வருடங்களை அடைந்துள்ள இலக்கியச் சந்திப்பானது இதுவரை நடைபெற்ற இடங்களையும் காலங்களையும் குறிப்பிட்டார்.

இந்த இருபது வருட இலக்கியச் சந்திப்பின் வரலாற்றிற்கும் பராவிற்கு அதன் மீதிருந்த அக்கறைக்கும் நெருங்கிய தொடர்புண்டு. இந்த இருபதாவது வருட சந்திப்பானதும் ஸ்ருட்காட்டில் நடைபெற்றதானதும் பரா, இலக்கியச் சந்திப்பு, அவரது அரசியற் செயற்பாடுகள் எனபன பல நினைவுகளை ஒரு நேர்கோட்டில் தரிசிக்கும் கணங்களை மனதின்



ஓரங்களில் தோற்றுவிப்பதைத் தவிர்க்க முடியவில்லை. இலங்கையில் தமிழ் பேசும் மக்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட அரச பயங்கரவாதத்தையும் படுகொலைகளையும் ஜேர்மன் மக்களுக்கும் மனிதவுரிமை அமைப்புக்களுக்கும் பிரச்சாரப்படுத்தும் நடவடிக்கைகள் ஆகட்டும், தான் சார்ந்திருந்த சர்வதேச மாக்ஸியக்கட்சியின் தோழர்களையும் தமிழ் செயற்பாட்டாளர்களையும் இணைத்துச் செயற்பட்ட மனித உரிமைகள் சார்ந்த நடவடிக்கைகள் ஆகட்டும், அரசு மற்றும் ஆயுதக் குழுக்களின் மக்களின் உரிமைகள் மீதான மீறல்களுக்கெதிரான நடவடிக்கைகள் ஆகட்டும், தமிழ் அகதிகளின் அடிப்படை வாழ்வியற் பிரச்சனைகளைத் தீர்க்கும் நடவடிக்கைகள் ஆகட்டும் 1984-இற்குப் பின்னான ஸ்ருட்காட்டின் அரசியற் செயற்பாடுகளிலிருந்து பராவைப் பிரித்துப் பார்க்க முடியாது.

1985-இலிருந்து சிந்தனை சஞ்சிகை ஸ்ருட்காட் இலேயே வெளியிடப்பட்டது. அனைவருக்கும் அடிப்படையிலுள்ள அரசியல் மற்றும் மனித உரிமைகளுக்கும் ஜனநாயகத்திற்குமாக பலரை இணைத்த கூட்டு நடவடிக்கைகளின் பாரம்பரியத்தைக் கொண்ட ஸ்ருட்காட்டில் இருபதாவது இலக்கியச்சந்திப்பு நடைபெற்றது பொருத்தமானது. அதன் ஒரு முக்கிய உழைப்பாளியாக விளங்கிய பரா இல்லாத வெற்றிடத்தை வெறுமையுடனும் துயருடனும் உணரமுடிந்தது.

1988-இல் ஜேர்மனியில் வெளிவந்து கொண்டிருந்த சிறு சஞ்சிகை வெளியீட்டாளர்களும் வாசகர்களும்

கலந்துகொள்ளும் சந்திப்பாக ஆரம்பித்த இலக்கியச் சந்திப்பு பல்வேறு கருத்துக்களும் பரிமாறிக்கொள்ளும் தளமாக மேலும் வளர்ந்தது. அரசியல், சமூக, கலாச்சார ஒடுக்குமுறைகளிலிருந்து விடுதலையை அவாவி நிற்கும் புதிய சிந்தனைகளையும் கருத்துக்களையும் அறிமுகப்படுத்தும் பறிமாறிக்கொள்ளும் ஒரு மாற்றுச் சிந்தனையின் தளமாகவும் பரிணமித்துள்ள இச்சந்திப்புத் தொடர் இந்த வகையில் புகலிட தமிழ்ச் சூழலில் மைய நீரோட்டத் தளங்களிலிருந்து வேறுபட்டுத் தனித்துவம் மிக்கதாக இருந்து வருகிறது. அதிகாரங்களினால் நிகழ்த்தப்படும் அடக்குமுறைகளையும் படுகொலைகளும் அவை எத்தரப்பிலிருந்து நிகழ்த்தப்பட்டாலும் எதிர்ப்புக் குரல் எழுப்ப இலக்கியச் சந்திப்பு தவறியதில்லை. இருபது வருடங்களாக நிலவிவரும் இவ்வழமை 35-வது சந்திப்பிலும் தொடர்கிறது.



இச்சந்திப்பு ஆரம்பித்த ஆரம்ப வருடங்களில் (முதல் மூன்று சந்திப்புக்களில் என நினைக்கிறேன்) நிரந்தரத் தலைமை ஒன்று அதை வழி நடத்த வேண்டுமென்று சிலர் வைத்த யோசனைகள் மறுக்கப்பட்டு ஒரு சுழற்சி முறையிலான செயற்குழு ஒவ்வொரு முறையும் தெரிவு செய்யப்படுவது அதன் இன்று வரையிலான ஜனநாயக இருப்பிற்கு காரணமாகியது. இச் சுழற்சி முறை (Rotation) தெரிவை தொடர்ந்து வலியுறுத்தி வந்ததில் ட்ரொக்ஸியப் பாரம்பரியத்தைச் சேர்ந்த பரா, சிவராஜா போன்றோர் முக்கியமானவர்கள். இந்த முறையானது நடைமுறைப்படுத்தப்படாமற் போயிருப்பின் இலக்கியச் சந்திப்பு என்றோ சீரழிந்து பத்தோடு பதினொன்றான மைய நீரோட்டப் பினாமி அமைப்பாகச் சிதைந்து போயிருக்கும்.

இருபது வருட நிறைவை முன்னிட்டு இதுவரை கால நிகழ்வுகளைத் தொகுத்து ஆவணத் தொகுதியாக வெளியிடுவதில் பரா மிக்க ஆர்வங் கொண்டிருந்தார். இரு வருடங்களுக்கு முன்னரேயே இலக்கியச் சந்திப்பிற்காக இணையப்பக்கமொன்றை உருவாக்கியிருந்தார். 2001-இல் இலக்கியச் சந்திப்பில் டொமினிக் ஜீவா அவர்கள் ஆற்றிய உரையை இன்று இந்த வலைப்பக்கத்தில் நாங்கள் கேட்கக் கூடியதாகவுள்ளது.

அடுத்த நிகழ்வாக உயிர்மெய் வெளியீடாக தமயந்தியால் தயாரிக்கப்பட்ட **ஒளியில் மொழியெழுதி** என்ற பரா கலந்து கொண்ட இலக்கிய நிகழ்வுப் புகைப்படங்களினதும் அவரால் எடுக்கப்பட்ட ஒளியோவியங்களினதும் தொகுப்பு காட்சியிடப்பட்டது. இயற்கையும் அதன் வண்ணங்களும் அதன் அங்கமான விலங்குகளும் பறவைகளும் மனிதர்களும் மலர்களும் மரங்களும் இஞ்சியில் தெரியும் உருவங்களும் ஒளியோவியங்களாக்கப் பட்டிருந்தன. **ஒளியோவியக்கலை என்னை இயற்கையின் அழகையும் உலகினையும் மெச்ச வைக்கிறது. சாதாரண பொருட்களில் புதிய உருவங்களையும் புதிய அர்த்தங்களையும் காண வழிசெய்கிறது** என்ற பரா என்கின்ற கலைஞனின் மொழி இப்படங்கள் மூலம் வெளிப்படுகிறது. இக்காட்சிக்குப்பின்னர் சில நிமிடங்களையாவது இது பற்றிய கலந்துரையாடலுக்கு ஒதுக்கியிருப்பின் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும்.



அடுத்த நிகழ்வாக தலித் மக்களின் நலன் சார்ந்த விடயதானங்களை உள்ளடக்கி இலங்கை தலித் மேம்பாட்டு முன்னணியினரால் வெளியிடப்படும் வடு, காத்திரமான புகலிடச் சஞ்சிகைகளான உயிர்நிழல், உயிர்மெய் ஆகிய சஞ்சிகைகளை முறையே தேவதாசன், பிரதீபன், சரவணன் ஆகியோர் அறிமுகம் செய்து வைத்தனர். எளிமையில் புரிந்து கொள்ளக்கூடிய மொழியினில் பத்திரிகைகள் எழுதப்படுவதன் அவசியம், சஞ்சிகைகள் எதிர்நோக்கும் பொதுவான சிரமங்கள் போன்ற கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்த கலந்துரையாடலில் பலர் கருத்துத் தெரிவித்தனர். கல்வி மறுக்கப்பட்ட ஒரு சமூகத்திற்கு புதிய சிந்தனைகளை உள்வாங்குவதில் போடப்படும் தடைகளுடன் சிறு சஞ்சிகைகள் எதிர் நோக்கும் சிரமங்களுக்குமுள்ள தொடர்புபற்றியும் சிலாகிக்கப்பட்டது.

அடுத்த நிகழ்வாக லக்ஷ்மி நெறிப்படுத்த இணைய சஞ்சிகைகள் எனும் தலைப்பில் சரவணன் உரையாற்றினார். இணைய சஞ்சிகைகளின் தோற்றங்களும் அவற்றின் உபயோகங்களைப் பரவலாக்குவதின் சாத்தியங்களைப் பற்றியதாகவும் அவரது

உரை அமைந்தது.



முதல் நாள் அமர்வின் இறுதி நிகழ்வாக ஜேர்மன் இலக்கியம் பயணிக்கும் பாதையைப்பற்றி ஜெர்மன் மொழி விரிவுரையாளரான அனெற்ற உரையாற்றினார். வரலாற்றின் ஒரு காலகட்டத்தில் அதிகாரங்களின் கைகளில் இருந்த ஜேர்மன் இலக்கியத்தையும் பிறகு நவீனத்தை நோக்கிய அதன் பயணத்தையும் விபரித்த அனெற்ற நவீனத்திற்குப் பிந்திய அதன் வளர்ச்சி நிலையின் உதாரணமாக 1985இல் வெளியான Patrik Suskind இன் The Story of a Murderer என்ற நாவலை எடுத்துக் காட்டி அதன் பகுதிகளையும் எடுத்துரைத்தார். 18-ஆம் நூற்றாண்டில் நாற்றங்கள் நிறைந்த ஒரு சூழலில் பிறந்து அநாதையாக வாழ நிர்ப்பந்திக்கப்படும் Grenolius என்பவன், தான் உடலில் இயல்பான மனித வாசனைகள் இன்றிப் பிறந்திருப்பதை அறிகிறான். இதனால் சமூகத்தால் தள்ளிவைக்கப் படுகிறான். ஆனால் அவனிடம் வாசனைகளை நுகர்ந்து கண்டு பிடிக்கும் அதிசய சக்தி இருக்கிறது. அவனது அகவுலகம் வாசனைகளால் நிரம்பியதாகவிருக்கிறது. அவனது எண்ணங்கள் வாழ்வு, கனவுகள் அனைத்தும் வாசங்களின் அடிப்படையிலேயே அமைகின்றன. அவனது பால்ய பருவம் நெடுகிலும் தன்னைச்சுற்றி வாசனைகள் நிறைந்தவொரு தரைப்பரப்பு சூழ்ந்திருப்பதாக அவன் நினைத்துக் கொள்கிறான். அவன் மனிதத் தன்மையுடையவனாக மாறுவதற்கான விரக்தியான முயற்சியில் உலகிலேயே சிறந்த வாசனைத்திரவியத்தை உருவாக்குவது என்ற முடிவுக்கு வந்து நாளடைவில் அந்த எண்ணத்திற்கே அடிமையாகிவிடுகிறான். வாசனைதத்திரவியங்களை உருவாக்குவதில் தேர்ச்சி பெற்று அத்துறையில் தொழில் புரிகிறான். சம்பிரதாயபூர்வமாக வாசனைத்திரவியங்களை உருவாக்கும்முறை அவனது இலக்கை அடையப் போதுமானதாக இல்லாததால் அவன் பல தியாகங்களையும் சிரமங்களையும் எதிர்கொள்கிறான். தனது வாசங்களை மோப்பம் பிடிக்கும் சக்தியால் பெண்களின் உடலில் உள்ள வாசனைகளை அறிந்து அவற்றைப் பெறுவதற்காக அவர்களை அடுக்கடுக்காகக் கொலை செய்கிறான். அவனது அகவுலகில் அவன் தனது இலட்சியங்களை துரத்திக் கொண்டிருக்க புறவுலகில் அவனோர் கொலைகாரனாகத் தேடப்படுகிறான். இந்நாவல் ஒரு வகையில் சர்ரியலிசத் தன்மையுடையதாகவிருக்கும் அதே நேரம் வரலாற்று ஆய்வுகளின் அடிப்படையில் தகவல்களை விபரிப்பதில் அதிக சிரத்தை எடுத்து எழுதப்பட்ட ஒரு நாவலுமாகிறது. நாவலில் 18ஆம் நூற்றாண்டுப் பாரிஸ் தெருக்களைப்பற்றிய சித்தரிப்புக்கள் அக்காலத்தை வாசகர்களுக்குக் காட்சியாகத் தருகிறது. வாக்கியங்கள் அனைத்திலும் விபரிக்க வந்த நிகழ்வின் முழுப்பரிமாணத்தையும் தரிசிக்கும்படி மொழியின் சாத்தியத்தைக் கவனமாகக் கையாளும் இலாவகத்தையும் அனெற்ற விதந்துரைத்தார். வாசனைகள் பற்றிய விபரமான வருணனைகளில் குறிப்பிட்ட வாசனைகளை வாசகர்கள் நுகரக்கூடிய வகையில் மொழி பயன்படுத்தப்படுகிறது.



நாற்றங்களையும் வாசனைகளையும் பற்றிய இந்த மிதமிஞ்சிய விபரிப்பே கதையின் உயிராக இருக்கிறது. இவ்விபரிப்புக்களைக் கொண்டே நாவல் நகர்த்தப்படுகிறது. நாவலின் ஒரு நிலையில் கொலை, குற்றம் போன்றவைக்கு சமூகத்திலுள்ள அர்த்தங்களின் மாறுந் தன்மை பற்றியும் அறங்கள் பற்றிய மனிதர்களின் மாறும் மதிப்பீடுகளைப் பற்றியும் குறிப்பிடப்படுகிறது. வாசமிக்க பாரிஸ் பற்றி மனதிற் தோன்றும் விம்பத்தை நாவலின் நாற்றங்கள் சிதைக்கின்றன. மனிதம் பற்றிக் கேள்வி எழுப்பும் இந்நாவலைப் பற்றிப் பலரும் கருத்துத் தெரிவித்தனர். இந்நிகழ்வைத் தமிழில் மொழிபெயர்த்த சுசீந்திரன் மொழிபெயர்ப்பு என்பதையுந் தாண்டி கதையின் விபரிப்பை உணர்வுகள் மாறாத இன்னோரு சிருஷ்டியாக வழங்கினார். இந்நாவல் ஜெர்மன் இயக்குனர் Tom Tyker இனால் The Perfume என்ற பெயரில் படமாக்கப்பட்டு அநேக ஐரோப்பிய மொழிகளில் பார்க்கக் கிடைக்கிறது.

இரண்டாம் அமர்வின் முதல் நிகழ்வாக இலங்கையில் சிறுபான்மை இனங்களுக்கிடையிலான உறவின் இன்றைய நிலை எனும் தலைப்பிலான கலந்துரையாடல் இடம்பெற்றது. பௌசர் ஆரம்பித்து வைக்க நிர்மலா, சரவணன், அசுரா, ராகவன், கலையரசன் ஆகியோர் உரையாற்றினர். பல்லினங்கள் வாழும் இலங்கையில் தோற்றுவிக்கப்பட்டுள்ள முரண்பாடுகளின் சூழலில்

நிலம் தொடர்பான அரசியற் பிரச்சனைகள்.

அதிகாரப்பகிர்வு.

சிங்கள அரசினால் சிறுபான்மைச் சமூகங்கள் மீது இழைக்கப்படும் அரசியல் விரோதங்கள்.

சனநாயகத்துடன் கூடிய சமாதானத்தின் அவசியம்.

முஸ்லிம் மக்கள் எதிர் நோக்கும் பிரச்சனைகள்.

தலித் சமூகத்தின் எதிர்காலம்.

வடக்கு கிழக்கிற்கு வெளியில் வாழும் தலித்துக்களின் நிலை

மலையக மக்களின் வாழ்வியல் துயரங்களும் அரசியல் எதிர்காலமும்


கிழக்கு மாகாண அரசியலை அணுகும் விதத்திலுள்ள யாழ் மேலாதிக்கப் போக்கு



யாழ் மேலாதிக்கத்தால் இழைக்கப்பட்ட சமூக ஒடுக்குமுறைக்கு எதிரான ஒரு போராட்டம் நிகழ்ந்து கொண்டிருந்த ஒரு காலகட்டத்தில் தமிழ் தேசிய விடுதலை எனும் பெயரில் தொடங்கப்பட்ட அநியாயத்திற்குள் சிக்குண்டு போன தலித் சமூகத்தின் நிலை

போன்றன தொடர்பான கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

இரண்டாவது நிகழ்வாக ஊடறு வெளியீடுகளான இசை பிழியப்பட்ட வீணை என்ற மலையகப் பெண்களின் கவிதைத் தொகுதியையும் ஊடறு இணையத்தளத்தில் வெளியான கவிஞைகளின் கவிதைகளின் தொகுப்பான மை எனும் தொகுப்பையும் உமா அறிமுகப்படுத்தி விமர்சனமும் செய்தார். இசை பிழியப்பட்ட வீணையில் மலையகப் பெண்களின் வாழ்வியல் தொடர்பான கேள்விகள் எழுப்பப்படுவதை உமா குறிப்பிட்டார். மை கவிதைத் தொகுதியில் பெண்களின் பார்வையில் யுத்தம், யுத்தஎதிர்ப்பு, தற்கொலைப் போராளியாகும் பெண், ஆகியன கவிதைகளில் உரைக்கப்பட்டிருப்பதையும் அவர் குறிப்பிட்டார்.
அடுத்து இலங்கையில் வெளியிடப்பட்ட சுமதியின் ஆங்கிலக் கவிதைத் தொகுப்பான Like myth and mother எனும் நூலை சுவிஸ் றஞ்சி அறிமுகம் செய்தார்.



அதனைத் தொடர்ந்து பெண் எனும் நிலை- உடல்- மொழி மற்றும் வெளி எனும் தலைப்பில் அம்பை உரையாற்றினார். பெண்ணின் உடல் என்ற கருத்துருவாக்கத்திற்கு வெளியே பெண்ணின் உடல் ஒரு அந்தரமான வெளியில் நிலைகொள்வதைக் குறிப்பிட்ட அவர் சுதந்திரத்தின் பின்னரான தமிழ்நாட்டுச் சூழலில் நல்ல பெண்மணி என்ற பாடல் அப்போது சிறுமிகளாகவிருந்த தங்களுக்கு பெண் எப்படி இருக்க வேண்டும் என்பதை அறிவுறுத்தியதை நினைவுகூர்ந்து கல்லூரி நாட்களில் திரைப்படத்தில் கணவனின் சேவைசெய்து பாடும் பெண்ணின் விம்பத்தையும் நினைவு கூர்ந்து இப்படி எல்லா நிலையிலும் பெண்ணின் உடல் அவளுக்கு அந்நியமானதாக வைக்கபட்டிருப்பதனை அம்பை சுவையான உதாரணங்களுடன் விளக்கினார். இலக்கியத்திலும் சமூகத்திலும் பெண்களைச் சித்தரிக்கும் ஆணாதிக்க மனநிலையையும் சமூகத்தில் நிலவும் ஆணாதிக்க சொற்பிரயோகங்களும் அன்றாட வாழ்வில் இடம்பெறும் விதத்தை எழுதிய தனது தோழியான தலித் எழுத்தாளரின் எழுத்துகளுக்கு மாநில அரசினால் விதிக்கப்பட்ட தடையையும் அவர் குறிப்பிட்டார்.

இறுதியாக மீரா புஷ்பராஜாவினால் தொகுத்து வெளியிடப்பட்ட புஷ்பராஜாவின்

படைப்புகள் என்ற நூலை மேரி, சுகன் ஆகியோர் அறிமுகப்படுத்தினர். புஷ்பராஜாவின் கதைகளில் சில பகுதிகளை மேரி வாசித்துக்காட்டினார். புஷ்பராஜாவின் படைப்புக்களை விபரித்த சுகன் நுட்பமாகப் பின்னப்பட்ட சாதியமைப்பில் புகலிட வாழ்வில் அதன் இருப்பை ஒரு தலித் எப்படி அர்த்தப்படுத்திக் கொள்கிறார் என்பதை புஷ்பராஜாவின் கதை ஒன்றின் மூலம் உதாரணம் காட்டினார்.


தீண்டத்தகாதவன் என்ற தலித் எழுத்தாளர்களின் சிறுகதைத் தொகுதியை அறிமுகப்படுத்திப் பேசிய சுசீந்திரன், புகலிடத்திலும் தொடரும் சாதிப் பாகுபாட்டைக் குறிக்கும் தேவாவின் சிறுகதையைக் குறிப்பிட்டார். இந்த இடத்தில் முற்பகல் அமர்வின்போது புகலிடத்தில் அடுத்த தலைமுறையினர் சாதி வேறுபாட்டை எதிர்கொள்வார்களா என்பது தொடர்பான கருத்துப் பரிமாறல்களின்போது, ஆதிக்க சாதியினர் புகலிடங்களில் தாம் உயர்ந்த சாதியினர் என்று தமது பிள்ளைகளுக்குச் சொல்லி வரும் நிலையும் இதனால் தாழ்த்தப்பட்ட சாதிகளைச் சேர்ந்த பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு தமது சாதியை மறைத்து வரும் நிலையையும் மறைமுகமாக சாதியை அடுத்த தலைமுறைக்கும் கடத்தும் நிலையையே தோற்றுவிக்கிறது என்று ஜீவமுரளி கூறிய கருத்து சிந்திக்கத்தக்கது.

36-வது இலக்கியச்சந்திப்பு நோர்வேயில் நடப்பதெனத் தீர்மானிக்கப்பட்டு அதற்கான செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

கிருஷ்ணாவின் நன்றியுரையுடன் நிகழ்ச்சிகள் முடிவடைந்தன.

இரு நாட்களும் இச்சந்திப்பு சிறப்பாக நடைபெற உழைத்த அனைவருக்கும் குறிப்பாக சிவராஜா, மங்கை, மேரி, மோகன், சுப்பன், உதயகுமார், கொன்சன்டினா, எட்மன், சிவநேசன் ஆகியோரது தோழமையான உழைப்பு மனங்கொள்ளத்தக்கது.

◆



## ஓட்டப் பந்தயம்

-பூகம்பன்-

ஓடுகிறார்கள்
அது மரதனோட்டமா
தடையோட்டமா
தடிகொடுத்தோட்டமா

தடைகளைத் தாண்ட
தடிகொடுத்து ஓடுகிறார்கள் ஒரு மரதனோட்டம்.
தடைகள் தகர்க்கப்பட்டதாகவோ
தாண்டியதாகவோ தெரியவில்லை

பரிசுப் போட்டியில்
பெற்றவர்களும் ஓடுகிறார்கள்
பெறாதவர்களும் ஓடுகிறார்கள்

வெள்ளையர்கள் ஓடுவதற்காய் பெறுவதில்லை
அவர்கள் கலாச்சாரத்தில்
குடும்பம் தடியாகித் தடைதாண்டி ஓடும்

பெற்றவர்கள் ஓடுகிறார்கள் இப்படி;
அம்மா பகல் வேலை
அப்பா இரவு வேலை இரட்டைச் சம்பளம்
அரைப்பகலும் அவருக்கு இரவுதான்.

தொலைக்காட்சி
பிள்ளைகளைப் பார்த்துக் கொள்ளும்
அவர்களின் மூளையை மட்டும் தொலைத்துவிடும்

நாளை...
பிள்ளைகள் பெற்றோரை விட்டு விட்டு ஓடமாட்டார்கள்
ஓட்டுவார்கள்
முதியோர் பராமரிப்பு நிலையத்துக்கு.
அங்கேயும்
தொலைக்காட்சியில் பெற்றவர் தொலைந்து போய்
இருப்பார்கள்

இருப்பினும் ஒரு நிம்மதி
பெற்றோரை நினைவு கூர
வருடத்தில் ஒரு முறை
காதலர் தினம் போல்
தாயார் தினம்
தந்தையார் தினம் என்று வருகிறதே.
ஒரு வருடத்தில் ஒரு முறையாவது
பிள்ளைகளைப் பார்க்கலாம்
பெருமைப்படலாம்.

# யசோதரைகள்

-நோர்வே நக்கீரா-



பிணத்தைக்கண்டு பிணமாகிப்போன புத்தர்
வீட்டைவிட்டு
கொற்றத்தைத் துறந்து
கொண்டவளை மறந்து
ஓடினான் துறவியாய்
தெரியாத ஒன்றைத்தேடி.

சவத்தைக் கண்டு
புதிதாய் பிரசவமானது அவனது ஆத்மா.

போதிமரத்தின் கீழ் புத்தரின் வாசம்
யசோதராவுக்கோ அரண்மனையில் சிறைவாசம்.
ஆண் ஓடினால் ஞானம்
பெண்ணோடினாலோ பல வியாக்கியானம்.


ஞானம் நிறைந்து
காலம் கடந்து
அரண்மனைக் கதவுகளை
மீண்டும் தட்டினார் புத்தர்.
இன்முகத்துடன்
இளநகையுடன்
புன்முறுவல் பூத்த நரைதிரை விழுந்த யசோதராவிடம்
"என் பல்லொன்றைக் காணவில்லை கண்டாயோ" என்றார்

ஞானத்தில் பார்த்தவள்
"இலங்கையிலே இருக்கிறது" என்றாள்
மீண்டும் சொல்லாமல் கொள்ளாமல் ஓடிய புத்தர்
இன்னும் திரும்பி வரவேயில்லை.

தமிழ் பெண்கள் போல்
கணவனின் தேகத்தைத் தேடினாள்
சிங்கள தேசமெங்கும்.

எந்தவித பொலிஸ் அறிக்கையுமின்றி
விகாரை எனும் கல்லறைக்குள்
புத்தர் புதைக்கப்படிருந்தார்.
சமாதியினுள் எரிந்து கொண்டிருந்தது திரிபுடகம்

வழிமேல் விழிவைத்து இன்றும்
வானுலகில் காத்திருக்கிறாள் யசோதரா
காத்திருப்புத் தொடர்கிறது
எங்கள் ஈழத்துப் பெண்களிலிருந்து
தமிழ்நாடு கரையோரப் பெண்கள்வரை.




# உத்தப்புரம் இரண்டாம் பாகம்
# நெடுங்குருதி மூன்றாம் பாகம்

நான் வீட்டுக் கதவுகளை இறுகப் பூட்டியபடி தனித்திருந்தேன். இரண்டு நாட்களாக பித்தம் பிடித்தவன் போலிருந்தேன். எனது நண்பர்களெல்லாம் ஒரு கிளாஸ் அடியின் பின் ஏன் எப்படி அடுத்த நிமிடமே என் எதிரிகளாய் மாறிப் போயினர்?
வீட்டுக் கதவு சம்மட்டி கொண்டு தாக்குவது போல் தட்டப்பட்டுக் கொண்டே இருந்தன. நான் உள்ளே போய் அறைக் கதவுகளையும் இறுகப் பூட்டி விட்டு நடுங்கிக்கொண்டிருந்தேன். என்னை சுற்றிவர என்ன நடக்கின்றது என ஒன்றுமே விளங்கவில்லை நான் தனித்திருந்தேன். நான் விடியற்காலை எழுந்து பார்க்கையில் மேசையில் இருந்த புத்தகங்கள் எல்லாம் என் படுக்கைப் போர்வையால் போர்கப்பட்டிருந்தன. அதை நான்தான் போர்த்தியிருக்க வேண்டும். என் நினைவுகளுக்கு அது ஞாபகமில்லை. நான் தனித்திருந்தேன். அச்சமும் வெறுமையும் என்னை ஆண்டுகொண்டிருந்தன.

-ஜீவமுரளி ஜேர்மன்-

படங்கள்: தமயந்தி நோர்வே

**ஊ**டகவியலாளனும் தோழனுமான சரவணன் மீதான வன்முறைத் தாக்குதல் ஒரு கிளாஸ் தாக்குதல் விவகாரமாக மட்டும் ஏன் பார்க்கப்படுகிறது? வன்முறைக்கும் மாற்றுக் கருத்துக்கும் குரல்கொடுக்கும் இணையத் தளங்கள், தோழர்கள் என பலரும் ஏன் மௌனமாக இருந்தனர்? ஒரு சிலரைத்தவிர இக்கேள்வி யாரையும் உறுத்துவதாக தெரியவில்லை. யூலை 19-இல் நடைபெற்ற தாக்குதல் பன்னிரண்டு நாட்களின் பின்தான் "தூ..." இணையத்தளத்தின் மூலம் வெளியுலகுக்கு தெரியவந்தது. பின் தேசம் நெற், ஊடறு இணையத்தளங்கள் செய்தியை வெளியே கொண்டுவந்தன. இத்தனைக்கும் அடிவிழுந்த அடுத்த நாளே தகவல் தெரிந்து என் உயிர்த்தோழர்களுடன் ஒன்றாக இருந்து 26ம் திகதி தேவதாஸ் வீட்டு பின் வளவுக்குள் மறக்கப்பட்ட நெடுங்குருதியுடனும், சரவணனின் குருதியுடனும் மதுவருந்திக் கொண்டிருந்தோம். அந்த அற்புதமான மாலைப்பொழுதில் இனிமையான மதுவின் மயக்கத்தில்கூட சரவணனுக்கு அடிவிழுந்த செய்தி யாருக்குமே தெரிவிக்கப்படவில்லை! யாருமே அறிந்திருக்கவில்லை. மழைக்கால் இருட்டானாலும் மந்தி கொப்பிழக்கப் பாயாது என இதைத்தான் சொல்வார்களா??




ஏன் சரவணன் மீதான வன்முறை விவாகரம் அலட்சியப்படுத்தப்பட்டது. அல்லது அவர்சார்ந்த insd (International Network of Sri Lankan Diaspora) அமைப்புத் தோழர்களால் இரகசியமாக வைக்கப்பட்டன. விடைகளைத் தேடிச் செல்வோம். ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு விடைகளிருக்கலாம். ஒன்று glass விவகாரம்
இரண்டாவது "class" விவகாரம். மூன்றாவது சரவரணனுக்கு இனி வரப்போகும் உயிராபத்தை தவிர்த்தல் என்ற அடிப்படைகளில் கையாளப்பட்டிருக்கலாம்! அல்லது அலட்சியப் படுத்தப்பட்டிருக்கலாம்! அல்லது இரகசியமாக வைக்கப்பட்டிருக்கலாம்!!!

சிங்கள மக்களெல்லாம் இனவாதிகளல்ல என்ற சரவணனின் புரட்சிகரமான ஒஸ்லோ பிரகடனத்திற்காக தமிழ்த் தேசிய வெறிகொண்ட நோர்வேயில் உள்ள தமிழச்சமூகமே ஒன்று சேர்ந்து சரவணனின் கன்னத்திலறையும்படி glass ஐயும், "class"ஐயும் எடுத்துக் கொடுத்திருக்கின்றது. glass and "class" விவகாரங்களைத் தவிர்த்து விட்டு சரவரணனுக்கு உயிராபத்து வரக்கூடாது என என்னை நம்பச் சொல்லும், அல்லது சமாதானம் சொல்லும் என் உயிர்த் தோழர்களுக்கும் அப்பால் சரவணன் எனக்கு தெரிவித்த சேதி நேரெதிரானது.

"என் கன்னத்தில் கிளாஸால் அடித்தபோது, ஏன் எனக்கு அடித்தாய் சொல்லு உனக்கு நான் என்ன தீங்கு செய்தேன்.. எதற்காக இப்படிச் செய்தாய்? பதில் சொல்லு. என நான் கேட்டுக் கொண்டே இருந்தேன். நீ துரோகி என பதில் தரப்பட்டது. ஐயோ நான் இந்த நோர்வே தமிழ் குடிமக்களுக்கு நல்லதுதானே செய்தேன்...! எனக்குள் ஏதோ உறைத்தது. அதை அப்போதுதான் நான் உணர்ந்தேன். ஒரு "சமூகமே" என்னைச்சுற்றி எனக்கெதிராக நின்றுகொண்டிருக்கிறது என்பதை"

ஒரு குருட்டுத் தேசியமும் ஒரு glassம் இன்னொரு "class"ம் சரவணனை சுற்றியிருக்கின்றன என உணர இத்தனை காலம் அவனுக்கு எடுத்துள்ளது என வேதனைப்படுகிறேன்.

"நான் வீட்டுக் கதவுகளை இறுக பூட்டியபடி தனித்திருந்தேன். இரண்டு நாட்களாக பித்தம் பிடித்தவன் போலிருந்தேன். எனது நண்பர்களெல்லாம் ஒரு கிளாஸ் அடியின் பின் ஏன் எப்படி அடுத்த நிமிடமே என் எதிரிகளாய் மாறிப் போயினர்? வீட்டுக் கதவு சம்மட்டி கொண்டு தாக்குவது போல் தட்டப்பட்டுக் கொண்டே இருந்தன. நான் உள்ளே போய் அறைக் கதவுகளையும் இறுகப் பூட்டி விட்டு நடுங்கிக்கொண்டிருந்தேன். என்னை சுற்றிவர என்ன நடக்கின்றது என ஒன்றுமே விளங்கவில்லை நான் தனித்திருந்தேன். நான் விடியற்காலை எழுந்து பார்க்கையில் மேசையில் இருந்த புத்தகங்கள் எல்லாம் என் படுக்கைப் போர்வையால் போர்க்கப்பட்டிருந்தன. அதை நான்தான் போர்த்தியிருக்க வேண்டும். என் நினைவுகளுக்கு அது ஞாபகமில்லை. நான் தனித்திருந்தேன். அச்சமும் வெறுமையும் என்னை

ஆண்டுகொண்டிருந்தன.

வைத்தியசாலையில் மட்டுமே நான் விழுந்து காயம் பட்டுவிட்டேன் என ஒரு பொய்யை சொல்லி சிகிச்சை பெற்றுக்கொண்டேன். என்னிடம் நட்பாக இருந்த சிலர் பொலிசிடம் முறையிடும்படி வற்புறுத்தினார்கள். அவர்கள் நட்புக்காக மட்டுமே அப்படி செய்வதாக சொன்னார்கள். ஆனால் அவர்கள் தமிழ்த் தேசியம் பெற்றெடுத்த புலியின் புதல்வர்கள். நான் என்ன செய்வது யாரை நம்புவது? நான் மிக மோசமான மன அழுத்தத்திலிருந்த பொழுதிலும் தகவலை தோழர்களுக்கு தெரிவிக்கும்படி சில தோழர்களுக்கு தெரிவித்திருந்தேன்"

ஆக சரவணனின் உயிரை பாதுகாக்கத்தான் அவர் மீதான வன்முறை செய்தி தாமதப்படுத்தப்பட்டன, வெளியுலகுக்கு தெரியப்படுத்தப்படவில்லை, கண்டனக் குரல் எழுப்பப் படவில்லை என இன்னும் சமதானம் சொல்லிக் கொண்டிருக்கும் என்னுயிர்த் தோழர்கள் யாரொருவர் மீதாவது இந்தக்கண்ணாடி கிளாஸ் கன்னத்தில் அறையப்பட்டிருந்தால் பத்திரிகைகளும் இணையத்தளங்களும் கண்டன செய்திகளால் நிரம்பி வழிந்திருக்கும். வன்முறைக்கு புதிய அர்த்தங்களும் புதிய பரிணாமங்களும் தமிழுக்கு கிடைத்திருக்கும்.

சபாலிங்கத்தின் மரணச்சடங்கில் அச்சத்தை புறந்தள்ளி விரட்டியடித்துவிட்டு மேடையேறி வன்முறைக்கு எதிராக குரல் கொடுத்த உயிர்த்தோழர்கள் ஒரு கிளாஸ் விடயத்தில் பின்னுக்கு நிற்பது வேடிக்கையாகவும் அதேநேரம் அர்த்தமுள்ளாதாகவும் தோன்றுகிறது.

2002ல் தெணியானினுடன் உரையாடிக்கொண்டிருக்கும் போது தனக்கு நடந்த ஒரு கிளாஸ் விடயத்தைப்பற்றி கூறினார். அதை இங்கே குறிப்பிடுவது பொருத்தமாகவிருக்கும். "எனது ஆசிரிய நண்பர்களுடன் ஒரு வீட்டிலிருந்து உரையாடிக்கொண்டிருந்தோம். அங்கே அந்த வீட்டுக்காரரால் எல்லோருக்கும் கிளாஸில் தேனீர் வழங்கப்பட்டது. குடித்து முடித்த பின் கிளாஸ் எல்லாவற்றையும் ஒரு தட்டில் சேகரித்தார் வீட்டுக்காரர். எல்லோரது கிளாசையும் நிமித்தியபடி தட்டில் வைத்ததார். நான் குடித்த கிளாசை மட்டும் கவிழ்த்து வைத்தார். அப்பொது அங்கு எல்லோருக்கும் சொன்னேன் நான் பிளாவில் கள்ளுக் கொடுப்பவன் பிளாவில் கள்ளுக் குடிப்பவனல்ல." இதுதான் கையறு நிலையினதும் அவமானத்தினதும் எதிர்வினை. கிளாஸ் விவகாரம் என்பது தெணியான் அனுபவித்த ஒருதட்டில் அல்லாது பல தட்டுக்களில் வைத்து பல வடிவங்களிலும் இன்றும் பார்க்கக்கூடிய விடயமாகவே உள்ளது.


இனி இனியொரு விதி செய்வோம் இனியொரு யுகம் படைப்போம் என மாற்றுக்கருத்தையும் அப்பழுக்கற்ற மாக்ஸிசத்தையும் உச்சரிக்கும் தோழர்களும் வன்முறைக்கு எதிராக குரல் கொடுக்கும் தோழர்களும் தூய்மையான இலட்சியங்களுடனும் மாக்சிஸ எதிரிகளை மக்களுக்கு இனங்காட்டிக் கொண்டிருக்கும் அப்துல் அலீம் என்கின்ற அசோக் யோகன் கண்ணமுத்து போன்ற தோழர்களுக்கும் தலித் என்ற சொற் தொடரே அருவருக்கத்தக்கதாக விருக்கின்றது. ஒற்றை வழி தேசியவாதிகளாலும் ஒற்றை வழி மாக்ஸிட்டுகளாலும் தலித் போராட்டங்களையும் சேறடிப்புகளையும் விளங்கிக் கொள்ளவும் முடியாது. ஏற்றுக் கொள்ளவும் முடியாது. ஆனால் அழுக்குப்படாத தூய்மையான ஒரு இணையத்தளத்தை நடத்தமுடியும் என நிறுவிக் கொண்டிருக்கிறது இனியொரு இணையத்தளம். சரவரணனுக்காக ஒரு பின்னூட்டம் மட்டும் தேசம் நெற்றில் போட்டுவிட்டு தனது அம்மணத்தை இனியொரு இணையத்தளத்தில் மறைத்துக் கொண்டுள்ளார் அப்துல் அலீம்.

தோழர் பராவின் மரணவீட்டில் அவருக்காக நடத்தப்பட்ட அஞ்சலி நிகழ்வின்போது சரவணனையும், தேவதாசையும் உரைநிகழ்த்த விட்டதற்க்காகவே கோபித்துக்கொண்டு போன தோழர்கள் பின் எந்த தலித்தொடர்பான நிகழ்வுகளிலும் கலந்து கொள்ளவில்லை. இதுதான் ஏக ஆதிபத்தியத்தின் சதி என்பது.
ஆக இணையத்தளங்களும், உயிர்த் தோழர்களும் அவர் சார்ந்து insd (International Network of Sri Lankan Diaspora) தோழர்களும் மௌனத்தையும், தாமதத்தையும் பாரபட்சத்தையும் கடைப்பிடித்ததன் காரணங்கள் சரவணன் உயிரை இனிவரும் காலங்களில் எப்படி பாதுகாப்பது என்ற தந்திரோபாயம் அல்ல. மாறாக இந்தியவம்சாவழியும் அருந்ததியர் சமூகப் பின்னணியுமே மிகவும் வலுவான காரணங்கள். அதாவது glass and class.

தோழர் சிவகாமியை பேர்ளினில் சந்தித்தபொழுது அவர் சொன்ன உயிர்ப்புள்ள வார்த்தைகளை இங்கே குறிப்பிடுவது பொருத்தமாகவிருக்கும். சமூகத்தின் அடித்தளங்களிருந்தும் விளிம்பு நிலைகளிருந்தும் மேலே வருபவர்களை இந்த ஆதிக்கசாதிச் சமூகங்களினால் ஜீரணித்துக் கொள்ள முடியாது இருக்கின்றது. அது நீ உன் இடத்திற்கே திரும்பிப்போ என உனக்கு மறைமுகமாகவும் நேரடியாகவும் சொல்லிக் கொண்டிருக்கும். அதை நான் இன்றும் அனுபவித்துக் கொணடிருக்கிறேன்.●

# வெளிச்சத்தில் பேசுவோம்

தமயந்தி



ஒவ்வொரு அநீதியையும் கண்டு
ஆத்திரத்தில் அதிர்ந்து போவாயானால்
நீ எனது தோழன்,

-சே-

இலங்கையின் தலித்தியக் கருத்தாக்கங்களை முனைப்போடு முன்னெடுத்த தோழர்களில் ஒருவனும், வர்க்கவிடுதலைப் போரில் நம்பிக்கையுள்ள போராளியும், ஊடகவியலாளருமான சரவணன் 19.07.2008 அன்று ஒஸ்லோவில் தாக்கப்பட்ட சம்பவம் பத்து நாட்களின் பின்பே (29.07.2008) "தூ..." இணையத் தளத்தில் வெளி வந்தது. தமிழ்நாட்டில் நான் நின்றிருந்த வேளை பானுபாரதி தொலைபேசியூடாக இந்தத் தகவலைத் தந்தாள்.

மேற்படி சம்பவத்தைச் சில தினங்கள் தாழ்த்தியாவது ஏதோ ஒரு வகையில் நாம் அனைவரும் அறியக்கிடைத்தது. இந்தத் தாக்குதல் வன்முறை பற்றிய சில சிறு குறிப்புகளும், அவரவர் சக்திக்கும், சந்தர்ப்பத்திற்கும் ஏற்புடைத்தான பின்னூட்டங்களும் தூ.., தேசம், இனியொரு என சில இணையத்தளங்களில் வந்தாலும்கூட இச்சம்பவம் பற்றிய கவனக் கொள்ளலோ, கண்டனங்களோ மேற்கொள்ளப் படவில்லை என்பதை எண்ணும்போது வேதனை, அதிர்ச்சி என்பதற்கப்பால் கோபமே எழுகிறது. அடித்தவனையிட்டல்ல, மவுனிகளாகிப்போன அனைத்து வன்முறைகளுக்குமெதிராகக் குரல்கொடுக்கப் போவதாய் இயங்கிக் கொண்டிருக்கும் மாற்றுக்கருத்தோர், மறுத்தோடிகள், கலகக்காரர், அணிசேர்-அணிசேரா அமைப்பினர் இன்னபிறரை நினைத்து.

சரவணனுக்கு கண்ணாடிக் கோப்பையால் அடித்ததைப் போலத்தான் 94-ம் ஆண்டு மே தினத்தன்று பாரீசில் தோழர் சபாலிங்கத்தையும் துவக்குக் குண்டால் அடித்தார்கள். கண்ணாடிக் கோப்பை என்பதால் சரவணன் தப்பினான், துவக்குக் குண்டு என்பதால் சபாலிங்கம் செத்தார் என்ற சிறு வித்தியாசம் மட்டுமே கொலைக்கும், எட்டு இளையோடு தப்பியதற்குமுள்ள இடைவெளி. இது தவிர இந்த இரண்டு தாக்குதல்களுக்குமிடையில் இருக்கும் இன்னொரு வித்தியாசம், சபாலிங்கத்தின் படுகொலை மேலிடத்து உத்தரவின்பெயரில் நடந்தது, சரவணன் மீதான தாக்குதல் புலி விசுவாசத்தைக் காட்ட தன்னிச்சையாக நடந்தது. வன்முறைக் கலாச்சாரத்தையே தன்தொழிலாய்க் கொண்ட அமைப்பின் ஆதரவாளன் ஒருவனால் இப்படித்தான் நடக்க முடியும்.

எமது தேசத்தில் பஞ்சப்பட்டுப்போன கருத்துச் சுதந்திரம், ஜனநாயகம் போன்றவற்றிற்கு புலம்பெயர்ந்த இந்த நாடுகளில் அகலத் திறந்த கதவுகள் இருந்தபோதும் புலி தமது ஆதரவாளர்களையும் விசுவாசிகளையும் இந்த வன்முறைக் கலாச்சாரத்தினூடாகவே வளர்த்து வைத்திருக்கிறது, வளர்த்தும் வருகிறது. சொல்லப்போனால் நாம் எல்லோருமே தமிழ்த் தேசியத்தின் பெயரால் ஏதோவொரு வகையில் வன்முறைக் கலாச்சாரத்தில் பங்கெடுத்தவர்கள்தான். செல்வழி விளங்கி, அதிலிருந்து விடுபட்டு, சனநாயகத்தை முன்நிறுத்தி, சமூகவிடுதலை நோக்கிய அர்ப்பணிப்பில் இங்கு இயங்கிக் கொண்டிருக்கும் சக்திகளை நோக்கியே விநயமாய் இந்த விசனங்களை முன்வைக்கிறேன்.

இதனை எழுதிக்கொண்டிருக்கும் இந்த வேளையில்கூட மேற்படி சம்பவம் பற்றி சமூகக்கடமை கொண்டோராய் கருதப்படும் சிலர் ஒஸ்லோவிலிருந்து சொல்வதென்ன....? "இதொரு பிறந்தநாள் பார்ட்டியில நடந்தது, நடந்து கனநாளாகப் போயிற்று, அடித்தவனுக்கும் அரசியலுக்கும் ஏழாம் பொருத்தம், அடித்தவனொரு ரவுடி,

இதையேன் பெரிதுபடுத்தி அரசியலாக்குகிறீர்கள்....?" இப்படிப் பல.

எனது கேள்விகள் என்னவெனில்:
சரவணன் தாக்கப்பட்டது தமிழ்த் தேசியத்தின் பெயராலும், புலியின் பெயராலும்தானே?, பின் இது எப்படி அரசியல் வன்முறை இல்லாமல் இருக்கலாம்?,
அடிப்பவன் எங்கு வைத்து எதனால் அடிக்கிறான் என்பதும், அடித்தவன் ரவுடியா இல்லையா என்பதுமா பிரச்சனை?,
புலிகள், புலி ஆதரவாளர்களின் இப்படியான ரவுடித் தனங்களை பூசி மெழுகுகிறீர்கள் என்பது புரியவில்லையா? இது யாரைக் காப்பாற்றும் நடவடிக்கை?,

இப்போதும் தமிழையும், தமிழ்த் தேசியத்தையும் வளர்ப்பதற்காக உங்கள் சர்வாங்கமும் அர்ப்பணிப்பதாகச் சொல்லிக் கொண்டும், கனடாவிலிருந்து ஒஸ்லோவரை, - ஒஸ்லோவிலிருந்து வன்னி வரை- வன்னியிலிருந்து மட்டக்களப்பு வரை இயக்கம் கட்டிக் கொண்டும் இருக்கும் நீங்கள் இதை ஒரு உப்புச் சப்பில்லா விசயமென்று சும்மா சப்புக் கட்டுக் கட்டுகிறீர்களே ஏன்?

எல்லாமே வெறும் கடதாசி இயக்கம்தானா? இன்னும் யாரை ஏமாற்றும் கூத்து இது?

உங்களிடமும் எஞ்சியிருப்பது சும்மா பிழைப்புக்காக ஒரு புலியெதிர்ப்பு வாதம்தானா? வெறும் புலியெதிர்ப்பை மட்டும் வைத்துக்கொண்டு இன்னும் எத்தனை காலம்தான் வண்டியை ஓட்டப் போகிறீர்கள்?

இதைவிட இன்னொரு கோமாளித்தனம்: சரவணன் நோர்வேக்கு வந்த புதிதில் அவனை தமது கார்களில் ஏற்றி பவனி வந்தும், தத்தமது இல்லங்களுக்கு போட்டி போட்டுக்கொண்டு அழைத்து பல்சுவை விருந்து வைத்தும், மூடிய கருத்தரங்கு நடாத்தியும், குய்யோ முறையோ என்று தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடிக் கொண்டும் ஒரு கூட்டம் அலைந்தது. இவர்களும் பொதுவேலை, பொதுப்பணி, திருப்பணி, தமிழ்ப்பணி, சுனாமிப்பணி என்று ஏகப்பட்ட கடை விரித்து வைத்திருப்பவர்கள்தான். இவை மட்டுமல்ல ஒருகாலத்தில் சுவடுகள் என்ற சிறுபத்திரிகை நடாத்தியவர்களும்கூட. இந்தக் கூட்டமும் இதுபற்றி ஏதாவது வாய் திறந்ததா என்றால், இல்லை. ஏனென்று கேட்டால் தனிப்பட்ட பகையாம்.

அதென்ன தனிப்பட்ட பகை....?
பறை என்ற சஞ்சிகையை சரவணன் வெளியிடத் தொடங்கியது இவர்களுக்குப் பிடிக்கவில்லையாம். அதுதான் தனிப்பட்ட பகையாம். அதெப்படி....?
சூடு. நெஞ்சைச் சுடுகிறதாம். கறுப்பென்று வெள்ளையர் நையாண்டி பண்ணும்போது நெஞ்சைச் சுடுகிறதாம். பறை சுடுகிறதாம். பறையும் சுடுகிறதாம். பறை இவர்களது எதைப் பிடித்துச் சுட்டது....?
இவர்களுக்கு பறை சுடுகிறதென்றால்....?! விடை சுலபம்தான். இவர்கள் இதுபற்றிப் பிரஸ்தாபிக்கவோ, கண்டனம் தெரிவிக்கவோ மாட்டார்கள்தான். இவர்களை விட்டுவிடுவோம். பாவம் பிழைத்துப் போகட்டும்.
இவர்கள் பிழைக்க வந்த இடத்தில் நாலு பணம் பார்க்க ஆசைப் படுகிறார்கள்.
தமிழையும் தேசியத்தையும், வெள்ளைக்காரத் தெருவில் கோயிலையும், சுனாமியையும் வைத்து நோர்வேயில் சண்விக்கா முதல் தமிழ்நாட்டில் முட்டுக்காடுவரை மில்லியன் குரோணர்களிலும் கோடிரூபாய்களிலும் வெட்டவேண்டியதை வெட்டி கட்ட வேண்டியதைக் கட்டி குடிகுடித்தனமாய் சுகித்திருக்கிறார்கள்.
இவர்களை விட்டுவிடுவோம். ஏனென்றால் ஏமாற்றப்படுகிறோம் என்று தெரிந்தும் இவர்களைச்சுற்றி இன்னமும் மவுனிகளாகவும் மந்தைகளாகவும் இருக்கும் ஒஸ்லோவில் கொஞ்சத் தமிழ்ச்சனம் இருக்கும்வரை இவர்கள் காட்டில் செமமழைதான்.

சரவணனுக்கு அடித்தவன்கூட தனது செயலுக்காக தன்னளவில் வருந்தியிருக்கக்கூடும், ஆனால் தலைநகரம்வாழ் மாற்றுக் கருத்தாளர்(?!) எனச் சொல்லப்படுவோர் சிலருக்கு இந்தத் தாக்குதல் மகிழ்ச்சியைக் கொடுத்திருப்பதாய் அறிகின்றபோது வன்முறைமீது மோகம் கொண்டோரை விட இவர்கள் வன்முறைமீது எப்படியானதொரு அளப்பரிய காதலை வைத்திருக்கும் மனநோயாளர்கள் என்பது தெளிவாகின்றது.
"என்ன....' காய்க்கு அடி விழுந்திட்டுதாமே கேள்விப்பட்டனியளோ....?"
"செம சாத்தாம். கன்னங் கிழிஞ்சுதாம்?"
"ஹி ஹி.... ஹி..!" இது மனநோயன்றி வேறெதுவாக இருக்க முடியும்?

இந்த வன்முறை தொடர்பாக நிதர்சனத்துக்கு ஏற்பட்ட "குறைந்தபட்ச நேர்மை(?)" கூட இவர்களுக்கு இல்லாமற் போனதொரு துன்பியல்தான்.

தோழர். சபாலிங்கத்தின் படுகொலையோடு பிடரியில் குதியடிபட சிதறி ஓடி மறைந்த நண்பர்கள் பலரை அன்று கண்டோம். அதில் சிலரை இன்றும் சரவணனின் சம்பவத்தோடு காண்கிறோம். அன்று பேத்ரோ சொன்ன ஒன்றை மட்டும்தான் இப்போதைக்குக் கேட்டுவைக்க முடியும். "உயிரைத் துச்சமெனவாக்கி நீச்சலடிக்கத் துணிந்தவர்கள் மட்டும் நிற்க, மற்றவர்கள் கரையேறலாமே?!" ●

# யாரும் பின்பற்றாத சுயமரியாதைக் காரியின் தடம்

## வீராங்கனை குஞ்சிதம் நூற்றாண்டு 1909 – 2008



-அநாத்மா-
தமிழ்நாடு

தன் வாழ்நாளில் கறாரான பகுத்தறிவாளராகவும், பெரியார் சொன்ன "ஆண்மை ஒழிய வேண்டும்" என்று போராடியும் செத்துப்போன சுயமரியாதை இயக்க வீராங்கனை குஞ்சிதம் பிறந்து நூற்றாண்டுகளாகி விட்டது. அவர் இயங்கிய இயக்கங்கள்கூட அமைதியாக இருந்துவிட்ட நிலையில் சென்னைப் பல்கலைக்கழகம் தமிழ் இலக்கியத்துறை தோழர் குஞ்சிதம் நூற்றாண்டையொட்டி அவரின் எழுத்துக்களிலிருந்து வாசிப்பு மற்றும் கருத்தரங்கத்தை ஜுலை 29ம் தேதி நடத்தியது.

மரப்பாச்சி குழு உருவாக்கிய வாசிப்பு நிகழ்ச்சியை அறிமுகம் செய்து வைத்து வ.கீதா, "சாதி, பார்ப்பனியம், இந்துமதம் ஆகியவற்றை ஒழித்தால் சமதர்மம் உருவாகுமென்று பெரியார் கூறினார். இவை மூன்றையும் இணைத்து குஞ்சிதம் தன் வாழ்நாள் முழுதும் போராடினார். பெண்ணுரிமை என்றாலே பாரதியார், பாரதிதாசன் ஆகியோரைக் காட்டுகின்றனர். ஆனால் உண்மையில் பெண்ணுரிமை பேசிய பெண்ணின் தடையம்கூட இல்லாமல் போய்விட்டது. குஞ்சிதம் வாழ்க்கை அருமையானது. 1909-ல் இசைவேளாளர் குடும்பத்தில் பிறந்து குருசாமியை திருமணம் செய்துகொள்வதற்கு முன்பே 'ரிவோல்ட்' பத்திரிகையில் எழுதியவர்.

இந்து மதத்தை எதிர்ப்பது சாமானியமானதல்ல. இந்த மண்ணில் இதனைக் காறாராகச் செய்தவர் அவர். இந்துமத எதிர்ப்பில் பெரியாருக்கு இணையானது குஞ்சிதத்தின் செயற்பாடுகள். பாமர மக்களுக்கும் புரியும்படி பேசியவர். குஞ்சிதம்-குருசாமி ஆகியோரின் வாழ்க்கை சமூகத்துக்கான பொது வாழ்க்கையாகவே இருந்தது. இவர்களின் வாழ்க்கையை திருமணம் என்ற வட்டத்திற்குள் அடக்க முடியுமா?" என்ற கேள்வியோடு முடித்தார்.

"நான் ஒரு பகுத்தறிவுவாதி, நாத்திகப்பெண் என்பதை நீங்கள் அறிவீர்கள். இப்பொழுது நான் மரணப் படுக்கையில் இருக்கின்றேன், நான் உங்களுக்கு ஒன்றை நினைவூட்டுகின்றேன். அதையே மற்றவர்களுக்கும் சொல்லவும். நானொரு பகுத்தறிவுடைய நாத்திகப் பெண்மணியாகவே சாகிறேன்" என்று தான் கொள்கைப் பிடிப்போடு கூடிய பெண் என்பதை சாகும்போது


மற்றவர்களுக்கு அறிவித்துவிட்டுச் சாகும் குஞ்சிதத்தின் குரலோடு வாசிப்புத் தொடங்கியது.

அந்தக் காலத்திலேயே பி.ஏ.எல்.டி படித்து ஆங்கிலத்தில் உரையாடும், எழுதும் வல்லமை பெற்ற குஞ்சிதத்தின் மேடைப் பேச்சை, மந்திரிகளின் பேச்சைத் தமிழில் மொழி பெயர்த்துத் தரும் கண்ணப்பர் மொழி பெயர்க்கிறார். அவரும் அதைத் தன் பாக்கியமாகவே கருதி செய்கிறார். ஆங்கிலத்தில் இருந்து பல விஷயங்களை தமிழில் தொகுத்து பெண்களுக்கு அறிமுகம் செய்து வைக்கிறார் குஞ்சிதம். அவரின் எழுத்துக்களின் ஊடாக இவர் எழுதியதுபோல் குருசாமி எழுதிய கற்பனைக் கடிதங்களும் வாசிக்கப்பட்டன.

இந்த 21-ம் நூற்றாண்டில் கூட கண்டு கொள்ளப்படாத, சமூகத்தில் இயல்பாய் உள்ள விஷயங்களை கேள்விக்குள்ளாக்குகிறார். எள்ளி நகையாடுகிறார். "பெண்களுக்கு 13-வது வயது ஆரம்பமாயிற்றோ இல்லையோ அவள் எந்தவிதமான ஆட்ட பாட்டங்களிலும் கலந்து கொள்ளக்கூடாது. வேண்டுமானால் நோயாளிகள், அங்கவீனர்கள் விளையாடுவதுபோல் பல்லாங்குழி விளையாடலாம்; தாயம் விளையாடலாம்; தப்பித்தவறி ஏதோ படித்த பெண்கள் பந்து விளையாட்டு முதலிய நல்ல விளையாட்டுக்களை விளையாடினால் சென்னை போன்ற நாகரிகமான நகரங்களில் துட்டுக்கூட இல்லாதவன் மிட்டாய்க் கடையை முழித்துப் பார்ப்பதுபோல ஆண்கள் வேடிக்கை பார்க்கிறார்கள். இதிலிருந்தே இந்தியப் பெண்களைப்போன்ற கேவலமான வாழ்க்கை வாழும் ஜீவன்கள் எங்காவது இருக்கின்றனவா என்பதை யோசித்துப் பாருங்கள்." என்று நம் சிந்தனையைத் தூண்டுகிறார் குஞ்சிதம். அதைப் போலவே ஏழை மனிதன்கூட சுயேட்சையாக கை, கால்களை உபயோகப்படுத்த முடியும். அந்த சுயேட்சைகூட பெண்களுக்கு அளிக்கப் படாததை நினைத்து மனம் பதறுகிறார்.

"ஆண்கள் உலக ஞானத்தின் ருசியைச் சிறிதாவது உணர்ந்தாலொழிய அவர்களைப் பிடித்திருக்கும் ஜாதிப் பீடையும் மதப்பீடையும் ஒழிய மார்க்கமில்லை. இவ்விதம் கைதிகளைவிடக் கொடுமையாக நடத்தப்படும் பெண்களை மீட்க வேண்டுமானால் சர்க்கார்கூட இதில் தலையிட்டு இவ்விதம் செய்யும் பெற்றோர்களைத் தண்டிக்க வேண்டும்" என்று குஞ்சிதம் பேசியது இன்று இந்தியாவில் குடும்ப வன்முறைத் தடைச்சட்டமாக உள்ளது. இந்தச் சட்டத்தின் மூலம் பெற்றோர்கள் தனது சொந்த மகளைக் கொடுமைப் படுத்தினாலும் தண்டிக்க முடியும்.

தெலுங்கு நாட்டிலும், தமிழ் நாட்டிலும் பக்குவமடையாத பெண்களைக்கூட ஆண்களின் மிருக உணர்ச்சிக்கு ஈடுபடுத்தி, பிறகு செயற்கை வழியாக அப்பெண் பக்குவமடையும்படி செய்யும் வழக்கம் சில ஜாதியாருள் இருந்து வருகிறது. இத்தகைய மிருகத் தனமானதும், காட்டுமிராண்டித் தனமானதும், மூளையில்லாததும்,



மணக்கோலம்- 1929

அநாகரிகமானதுமான ஒரு சாந்தி முகூர்த்த விழாவின் கொண்டாட்டத்தை நானே சமீபத்தில் ராஜமகேந்திரத்தில் பார்க்க நேர்ந்தது. ஐயோ! என்ன கொடுமை! ஆண்களின் முட்டாளத் தனத்தைப் பரீட்சை செய்யவா பெண்கள் இந்நாட்டில் பிறந்திருக்கிறார்கள்? என்று அவர் அன்று சொன்னதுபோலவே இன்றும் ஆணின் சோதனைக் களமாக பெண்கள் இருக்கும் அவலநிலை உள்ளது.

"குடியரசின் எட்டாவது ஆண்டு தொடங்கி விட்டது. குடியரசு ஆண்களுக்காக மாத்திரம் பாடுபட்டதா என்றால் இல்லை. பெண்களைத் தட்டியெழுப்பி அம்மா எழுந்திரு; வெளியே வா; ஆகாயத்தைப் பார்; பரந்த வெளியைப் பார்; கடலைப் பார்; மனித சமூகத்தைப் பார்; அதோ பார் உன்னைப் போன்ற ஒருத்தி கம்பியின்மேல் சைக்கிள் விடுகிறாள் என்றெல்லாம் சொல்லி பெண்கள் கண்களுக்கு ஒரு தூரதிருஷ்டிக் கண்ணாடியாக விளங்குகிறது." குடியரசின் முனையோ எதிரிகளின் இரத்தக்கறை பட்டுக் காய்ந்துபோயிருக்கிறது. அதைத்

துடைத்து முனை மழுங்காமல் வைப்பது யாருடைய கடமை? பெண்களாகிய நமது கடமையல்லவா?" என்று அவர் குடியரசில் எழுதியுள்ளது இன்று பெரியார் திடலில் கறுப்புப் புடவை கட்டிக்கொண்டு முறுக்கு விற்றுக்கொண்டிருக்கும் பெண்கள் படித்திருப்பார்களா என்றே தெரியவில்லை.

சிறிரங்கத்தில் 1933-ம் ஆண்டு நடைபெற்ற சுயமரியாதை மாநாட்டில் குஞ்சிதம், "ரஷ்யாவில் முக்கிய தலைநகரத்தில் ஜார் சக்கரவர்த்தியின் கொடுங்கோன்மையைக் காட்டும்படியான பல சாமான்களை கண்காட்சியில் பத்திரப்படுத்தி வைத்திருக்கிறார்களாம். அதுபோலவே, பின்னொரு காலத்தில் நமது நாட்டில் சமதர்ம அரசாட்சி ஏற்பட்டதும் சமதர்மக் கண்காட்சியில் வைக்கப்பட வேண்டிய சில பொருட்கள் இருக்கின்றன. அதில் இவ்வூர்க் கோவிலில் நீட்டி நிமிர்ந்து படுத்திருக்கும் கல்லும், (ரங்கநாதர்) அதற்காக ஏற்பட்டிருக்கும் (வெள்ளிச்) செருப்பும், வருடத்துக்கு ஒரு நாளில் எல்லோரும் சொர்க்கத்திற்குப் போகும்படி அனுமதிக்கும் சொர்க்கவாசல்க் கதவும், அந்தக் கதவுக்கு இருக்கும் சாவியும் முக்கியமானதாகும். இவைகளையெல்லாம் வைத்து, இவைகளைக் காப்பாற்றுவதற்காக ஏற்பட்டிருக்கும் தரகர்களான இந்த ஊர் அய்யங்கார் ஒருவரின் திரேகத்தையும், அவருடைய நாமத்தோடு திராவகத்தில் போட்டுப் பத்திரப்படுத்தி வைக்க வேண்டும். இவைகளைப் பார்த்ததும், பின் சந்ததியார்கள், இதோ பார், நமது முன்னோர்களை அடக்கி ஆண்டு நசுக்கிப் பிழிந்து, முழுமூடர்களாய் வைத்திருந்த சாதனங்களைப் பார்! இதோ இருக்கிறாரே, இவரைப் போன்றவர்கள்தான் கருங்கல்லைக் காட்டி, காசு பறித்து ஜன சமூகத்தின் இரத்தத்தை உறிஞ்சிய பாதகர்கள் என்று ஒருவருக்கொருவர் பேசிக் கொள்வார்கள்" என்று பார்ப்பனர்களின் அட்டூழியங்களைப் பெருஞ்சத்தமாய் ஒலித்திருக்கிறார். அவர் கண்ட கனவு இன்றும் கனவாகவே இருக்கிறது.

"புலியும் ஆட்டுக்குட்டியும் ஒரு துறையில் தண்ணீர் குடிக்கும் சுயராஜ்யம் எங்களுக்குத் தேவையில்லை. அது சர்க்கஸில் கூட நடக்கிறது. பறையனும் பார்ப்பானும் ஒரு துறையில் தண்ணீர் குடிக்கக்கூடிய அரசாங்கமே எங்களுக்குத் தேவை. ஒரே உத்தியோகத்திலிருக்கும் கருப்பு மனிதனுக்கு குறைந்த சம்பளமும், வெள்ளை மனிதனுக்கு அதிகச் சம்பளமும் கொடுக்கக்கூடிய அரசாங்கம் எங்களுக்குத் தேவையில்லை. இரண்டு பேருக்கும் ஒரேவித கூலி கொடுக்கக்கூடிய அரசாங்கமே தேவையாகும். பதினாயிரம் பேர்கள் சேர்ந்து பூமிக்குக் கீழே 6,000 அடி இறங்கித் தங்கம் எடுக்க, அவர்களுக்கு ஆளுக்கு தினம் 8அணா கூலி கொடுத்துவிட்டு, தங்கக் கட்டியைக் கல்கல்லாக 2,3பேர் அமுக்கிக் கொள்ளுகிற பகற்கொள்ளை அரசாங்கம் எங்களுக்குத் தேவையில்லை. தேனெடுத்தவனுக்குத் தேனின் ஒரு பாகமும், தங்கம் எடுத்தவனுக்குத் தங்கத்தில் ஒரு பாகமும் கிடைக்கும்படி செய்யக்கூடிய அரசாங்கமே தேவையாகும்." என்று சாதி ஒழிந்த, ஏழை பணக்காரன் பாகுபாடு ஒழிந்த



விருது உடையில் வீராங்கனையும் கணவரும்-1930

அரசாங்கமே தேவையென்று உறுதியாய் கூறுகிறார்.

பெண்கள், சாதி, மதம், பகுத்தறிவு, அரசு என அனைத்துத் துறைகளிலும் வீரியம் வாய்ந்த அவரின் எழுத்துக்களை மரப்பாச்சிக் குழுவினர் வாசித்தனர்.

இதனைத் தொடர்ந்து நடைபெற்ற கருத்தரங்கில் ஓவியா பேசியதாவது:

பெண்ணுரிமை என்றால் பாரதியின் பெயரைச் சொல்வார்கள். சுயமரியாதை இயக்கத்தின் பெண்களின் பேச்சுக்களை யாரும் சொல்ல மாட்டார்கள். இப்படி நான் சொல்லக் காரணம் பாரதியாரின்மீது எனக்குக் காழ்ப்புணர்வு இருப்பதாக கருதக்கூடாது. நாம் அப்படி பாரதியை பெண்ணுரிமைப் போராளி என்று சொல்வதென்பது வரலாற்றுப் பிழையாக மாறிவிடும். இதனைத் தவிர்க்க சரியான வரலாற்றை நாம் சொல்லவேண்டும். இப்போது வாசிக்கப்பட்ட வரிகளில் ஒரு வரிக்கு இணையான வரியை பாரதியின் வரிகளில் காண்பிக்க முடியுமா? குஞ்சிதம் மறைந்த இடத்தில் ஏன் பாரதியைக் கொண்டுவந்து நிரப்பினார்கள் என்பதே என்

கேள்வி.

"ஆண்மை ஒழியவேண்டும்" என்று பேசியவர் பெரியார். அதனை அப்போதே ஒழித்திருக்கிறார் குஞ்சிதம். அதற்கான களத்தை, தளத்தை சுயமரியாதை இயக்கம், திராவிடர் இயக்கம் உருவாக்கிக் கொடுத்திருக்கிறது. ஆண்குழந்தை, பெண்குழந்த இருவரில் ஒருவரைத்தான் படிக்க வைக்க முடியும் என்றால் பெண் குழந்தையைப் படிக்கவை என்று வழி காட்டியவர் பெரியார். அந்தக் கொள்கையின் தொடர்ச்சி இப்போது எங்கே போயிற்று? ஒருவேளை பெண்கள் திருமணம் செய்யாதிருந்தால் அதன் தொடர்ச்சி இருந்திருக்கலாம் என்று தன் கருத்தைச் சொல்லி முடித்தார்.

சுயமரியாதை இயக்கப் பெண்களின் எழுத்துக்களை முதன்முதலாகத் தொகுத்து "சுயமரியாதை இயக்க வீராங்கனைகள்" என்ற புத்தகத்தை வெளியிட்ட பேராசிரியர் மு.வளர்மதி "காங்கிரஸ் பெண்கள் தேசிய விடுதலை என்பது இந்து மதத்தையும், புராணத்தையும் தலையில் வைத்துக்கொண்டு கொண்டாடியது. பொதுவுடமையினர் புரட்சியின் மூலம் உருவாகும் சமதர்ம ஆட்சியில் பெண்களின் விடுதலை கிடைத்துவிடும் என்று நம்பினர். ஆனால் சுயமரியாதை இயக்கப் பெண்கள் மட்டும்தான் நடைமுறையில் உள்ள சிக்கல்களை, பெண்கள் பிரச்சனைகளை அறிவியல் நோக்கோடு அணுகினர். தாங்கள் பேசிய விஷயங்களை தங்களது வாழ்க்கையில் செய்தும் காட்டினர். கைம்பெண் திருமணம், மதமறுப்பு, சாதிமறுப்பு திருமணங்கள், சுயமரியாதைத் திருமணங்கள் எதுவாக இருந்தாலும் தம் வாழ்க்கையில் துணிச்சலாகச் செய்து காண்பித்தனர்.

குஞ்சிதம் எல்லாவற்றிலும் முதலாவதாக இருந்தவர். நன்கு படித்தவர். ஆங்கிலப் புலமை மிக்கவர். 144 தடைஉத்தரவை மீறி பொது இடத்தில் பேசியவர். ஆனால் 3ம் வகுப்புக்கூடப் படிக்காத சிவகாமி கோவில்களை இடிக்க வேண்டும் என்று எழுதியிருக்கிறார். அந்த அளவிற்கு சுயமரியாதை இயக்கப் பெண்கள் துணிந்து பணியாற்றினார்கள். அதன் தொடர்ச்சி இருந்திருந்தால் இன்று 95சதவீதப் பெண்கள் பகுத்தறிவுவாதிகளாக இருந்திருப்பார்கள். ஆனால் அதற்கு மாறாக பால் தூக்கிக்கொண்டு கோயிலுக்குப் போகும் பெண்களே இன்று நம் சமுதாயத்தில் உள்ளனர்." என்று தன் வேதனைகளைப் பகிர்ந்து கொண்டார்.

நிகழ்ச்சியில், பேராசிரியர் மணிகண்டன், விடுதலை ராஜேந்திரன் கலந்து கொண்டனர். இறுதியாக, பொதுவுடமை மேடைகள் தோறும் கொள்கைப் பாடல்களைப் பாடிவரும் கவின்மலர் குஞ்சிதம் குருசாமி இணையரின் மகள் ரஷ்யாவிற்காகப் பாரதிதாசன் எழுதிய "சாணிக்குப் பொட்டிட்டு..." என்ற பாடலைப் பாடி நிகழ்ச்சியை நிறைவு செய்தார். ●

## ஆண்டுதோறும் 80ஆயிரம் பெண்கள் உயிரிழப்பு



இந்தியாவில் ஆண்டுதோறும் கருக்கலைப்பு காரணமாக 80ஆயிரம் பெண்கள் உயிரிழக்கின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் தவறான சிகிச்சை காரணமாக உயிரிழப்பதாக இந்திய மகப்பேற்று மருத்துவர் சங்கத்தின் தலைவர் டாக்டர் ஹேமா திவாஹர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் ஆண்டுதோறும் ஒரு கோடியே பத்துலட்சம் பெண்கள் கருக்கலைப்புச் செய்கின்றனர். இதில் போதியளவு அனுபவம் இல்லாதவர்கள் அளிக்கும் கருக்கலைப்பு சிகிச்சையால் 80ஆயிரம் பெண்கள் உயிரிழக்கின்றனர்.

தேவையற்ற கருவைத் தவிர்ப்பது குறித்து பெண்களிடையே போதுமா விழிப்புணர்வு இல்லாததே இதற்குக் காரணமாகும். தற்போது வெளிவந்துள்ள அவசரகால கருத்தடை மாத்திரைகள் குறித்து பெரும்பாலான பெண்கள் அறிந்திருக்கவில்லை. ஒருசத வீதம் பெண்கள் மட்டுமே இம் மாத்திரைகள் தொடர்பாக தெரிந்து வைத்திருக்கின்றனர். அவசரகால கருத்தடை மாத்திரையை 72 மணி நேரத்திற்குள் சாப்பிட்டால் தேவையற்ற கருவைத் தவிர்க்க முடியும். இத்தகைய மாத்திரைகளை எப்போதாவது ஒரு முறையோ அல்லது இரு முறையோ பயன் படுத்தலாம். இதையே தொடர்ந்து பயன்படுத்தவும் கூடாது. அதேவேளை இது கருக்கலைப்பு மாத்திரைகளென்று பெண்கள் நினைப்பதும் தவறு. ●

# மகேஸ்வரி வேல்-ஆயுதம்
## *EPDP*க்கு பின்



அவதூறுகளை செய்கின்ற மாற்றுக்கருத்து தோழர்களுக்கும், அவதூறுகளையும் அவமானங்களையும் எதிர்கொள்கின்ற மாற்றுக்கருத்து தோழர்களுக்கும், அவமானங்களைப் படுகின்ற தோழர்களுக்கும் இதை சமர்ப்பணம் செய்கிறேன்.

-ஜீவமுரளி- ஜேர்மன்

அவமானங்களையும், அவதூறுகளையும் மரணம்வரையும் சுமந்து திரிகின்ற, கல்லோலை என்ற பெயரால் நிந்திக்கப்பட்ட, அவதூறு செய்யப்பட்ட அவமானப்படுத்தப்பட்ட விளிம்பு நிலைத் தலித் கிராமத்தின் கதை இது.

எட நீ கல்லோலையான் மாதிரி கதைக்காதை உடுக்காதை பேசாதை ஆளைப்பார் கல்லோலையாற்றை தலைமாதிரிக்கிடக்கு, உதை நீர் எப்ப வெட்டப் போறீர். அப்பா வாத்தியார் நீ என்னடா எண்டால் கல்லோலையார் மாதிரி தலை வளத்திருக்கிறீர். உந்தக் கல்லோலையார் பொல்லாதாக்கள் வெட்டுக்குத்துக்கு பயப்பிடாதவங்கள் கள்ளர், கடைப்புலிகள், காடையர் படிப்பறிவில்லாதவங்கள் என இன்றுவகைக்கும் ஆதிக்கசாதிகளானாலும் சரி இடைச்சாதிகளானாலும் சரி தங்களின் சமூக அந்தஸ்த்தை இருப்பை அளவிட்டுக் கொள்வதற்கும், நிலைநிறுத்திக் கொள்வதற்கும் ஓர் அரசியல் மொழியாக கல்லோடை என்ற பெயரைக் கொண்ட கிராமம் கல்லோலை என பரிகசித்து அழைக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. அவதூறுகளின் தாங்கிகளாகவும் குறியீடுகளாகவும், அவமானத்தின் மொழியாக சாட்சியாகவும் இருக்கின்றது அந்தக்கிராமம்.

இயற் பெயராகவும் தான்தோன்றிப் பெயராகவும் கல்லோடை என வழக்கத்திலிருந்த கிராமம் கற்களையும் கற்பாறைகளையும், பாறைகளிலும் வலிய மக்களைக் கொண்ட கந்தகப் பூமியது.. இக்கிராமம் ஆதிக்கசாதிகளினதும் இடைச்சாதிகளினதும் ஆசைக்கும் அரசியல் இருப்புக்கும் விருப்புக்குமாக கல்லோலை என பரிகசித்து அவமானப்படுத்தப்பட்டு அழைக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. நாற்பத்திரண்டு ஆண்டுகளுக்குமுன் 66களில் சாதிய எதிர்ப்புப் போராட்டத்தின் விழிப்புணர்வின் குறியீடாக கன்பொல்லை என அக்கிராமத்தின் பெயர் மாற்றப்பட்டது.

ஆனால் அது இன்றுவரைக்கும் கல்லோலை என அவமானத்தையும் அவதூறுகளையும் சுமந்து கொண்டே இருக்கின்றது.

மனித உரிமைபோராளி, சட்டத்தரணி, என அறியப்பட்ட மகோஸ்வரி வேலாயுத்தின் வீடும் வளவுக்காணியும் வடமராட்சி தெற்கு மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அமைந்துள்ள கரவெட்டி மேற்கில் கன்பொல்லைக் கிராமத்துக்கும் கலட்டிக் கிராமத்துக்கும் இடையே கலட்டிக்கிராமத்தினை ஒட்டினால்ப்போல் அமைந்துள்ள. கீரிப்பல்லிக்கு அருகே வண்ணாவளவில் (வண்ணார்வளவு) இருக்கின்றது. வண்ணாவளவில் வாழ்ந்தவர்களின் குலதெய்வம் கட்டையடி வைரவர். வண்ணாவளவு எனும் காணிப்பெயரை மறைத்து கட்டையடி வைரவர் எனும் குலதெய்வத்தினையும் மறைத்து சாதியத்தீட்டுப்படாமல் கீரிப்பல்லியில் அன்னாரின் வீடு அமைந்துள்ளதாக கரவெட்டி வெள்ளாளரால் அழைக்கப்படுகிறது.

புலிகளால் படுகொலை செய்யப்பட்ட இரண்டு நாட்களின் பின் மகேஸ்வரியைக் கொன்றவர் EPDPயினரால் பழிதீர்த்து கொல்லப்பட்டார். அந்தக்கிராமத்தில் ஐந்து பேர்கள் ஒன்றன்பின் ஒன்றாக 27 நாட்களுக்குள் EPDPயினரால் கொல்லப்பட்டிருக்கிறார்கள். முதற்கொலை மகேஸ்வரியைக் கொன்றதாக நம்பப்படும் புலிகளின் உறுப்பினர். அதன்பின் கொல்லப்பட்ட நால்வரும் மிகச்சாதரணமாக கருத்துச்சொல்லும் பொதுசனங்கள். கன்பொல்லை புலிகளின் கோட்டை எனவும் அந்தக்கிரமத்தை கூண்டோடு அழிப்போம் எனவும் EPDPயினர் மகேஸ்வரியின் பெயரால் சபதமெடுத்து கொலை செய்து கொண்டிருக்கின்றனர். மறுபக்கத்தில் EPDP உறுப்பினர்கள் என புலிகள் கருதுமிடத்தில் அவர்களை போட்டுத் தள்ளிக் கொண்டிருக்கின்றனர்.

EPDP-புலி, புலி-EPDP என்ற பழிதீர்க்கும் வழமைக்கும், தந்திரோபாயங்களுக்கும் அப்பால் கன்பொல்லைக் கிராமத்து மக்கள் இரண்டு பக்கத்து சாதிவெறியர்களினாலும் வேட்டையாடப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். மகேஸ்வரி என்ற மனித உரிமைப்போராளிக்காக EPDP புலியை பழிவாங்கியபின் மகேஸ்வரி என்ற வெள்ளாருக்காக மகேஸ்வரியின் சாதிக்காரர்களினால் கன்பொல்லைக் கிராமத்து மக்கள் ஒவ்வொன்றாக துரோகத்தின் பெயராலும் புலிகளின் பெயராலும் EPDPயினர் பழிதீர்த்துக் கொண்டிருக்கின்றனர். அதாவது மகேஸ்வரியின் சாதிக்காரர்களால் கன்பொல்லை பழிதீர்க்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. தமிழ் நாட்டில் தாமிரபரணி ஆத்தங்கரை படுகொலையை அரசு இயந்திரம் தலித் சமூகத்து போலிஸ்காரர்களை வைத்து செய்தது என்றும், யாழ்பாணத்திலிருந்து முஸ்லீம்களை விரட்டியபொழுது தலித் சமூகங்களில் இருந்து வந்த புலிகள் முன்நின்றார்கள் என்றும் கூறப்பட்டது. ஆனால் இன்று

மகேஸ்வரி வேலாயுதம் என்ற சட்டத்தரணியையும், மனிதஉரிமைவாதியான வெள்ளாரையும் கொலை செய்ததுகூட ஒரு தலித் புலி என்றும் கூறப்படுகிறது. எனவே இந்தப் படிப்பினைகள் சமூகத்தின் மிக மோசமான கூறுகளைக் கொண்டது தலித் சமூகம் என்று நிறுவ வசதியான காரணங்களாக ஆதிக்கசாதி புத்திசீவிகளுக்கும் மாற்றுக்கருத்தாளர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் வாய்ப்பாகிவிடுகின்றன.

மகேஸ்வரியின் கொலையில் சம்பந்தப்பட்டதாக ஒருவரை இராணுவம் கைது செய்திருக்கின்றது. பின்னர் அவர் தப்பி ஓடியிருக்கிறார். பொடியனின் தாய் தந்தையர் அவரைக் காப்பாற்ற கொண்டு போய் மனித உரிமைகள் அமைப்பிடம் கையளித்திருக்கின்றனர். மனிதஉரிமைகள் அமைப்பு அவரை நீதிமன்றத்திற்கு கொண்டு சென்றது. கோட்ஸ் முடிந்து திரும்பும் வழியில் வாசலில் வைத்து ஈபிடிபியால் சுட்டுக்கொல்லப்பட்டார் என கன்பொல்லை மக்கள் சொல்கிறார்கள். அதன்பின் அவருடைய தாயும் தந்தையும் கடத்தப்பட்டிருக்கிறார்கள்.

சில வருடங்களுக்கு முன், ஆதிக்கசாதிகளினால் கல்லோலை என இழிவுபடுத்தி அழைக்கப்பட்ட கிராமத்தின் பெயரை கன்பொல்லை என 66களில் மாற்றிய மூதண்ணா என்ற இராசரத்தினம் மாஸ்டரின் மகன் இராயேஸ்வரனின் கழுத்தை வெட்டிக் கொண்டு போய் ஆரியகுளச் சந்தியில் எறிந்து விட்டுப்போனார்கள். அதனால் ஆத்திரமடைந்த அந்தக்கிராமமே திரண்டு போய் நெல்லியடியில் இராணுவமுகாம்களுக்கு அருகிலிருந்த EPDPயினர் மற்றும் புளட் முகாம்களை தாக்கி எரித்துமிருக்கின்றனர். இதே பாணியில்தான் மகேஸ்வரியின் ஆன்மாவை சாந்தியடையச் செய்வதற்காக கன்பொல்லையில் நடத்தப்பட்ட வேள்வியில் கடைசியாகக் கொல்லப்பட்டவரின் தலையை கொய்து கொண்டு போய் உப்புவெளியில் எறிந்து விட்டுப் போயிருக்கின்றனர் கரவெட்டி வெள்ளாள EPDPயினர். ஆனால் இம்முறை கன்பொல்லை மக்கள் கதிகலங்கிப் போயிருக்கின்றனர்.
டக்ளஸ் தேவானந்தா இந்து மதத்தை வளர்த்தெடுக்க கோவில்களுக்கு காசு வாரிவழங்கி, கோவில்களை புனருத்தாரணம் செய்து கலரும் வெள்ளையும் அடிக்க வெளிக்கிடேக்கையே தலித்துகளின் காதில் பூக்களும் சேர்த்து சுற்றப்படப்போகிறன என உறுதியாகிவிட்டது.

இவ்வளவு நடந்தும் கிட்டத்தட்ட ஒன்றரை மாதத்துக்கு மேலாக ஒரு ஊடகங்களிலும் இந்த சாதிவெறி சம்பவம் குறித்து ஒரு பெட்டிச்செய்தி கூட வரவில்லை. ஊடகங்கள் பெரும்பாலும் ஆதிக்கசாதிகளின் கைகளில் இருப்பதினால் இந்த படுகொலைகளை மகேஸ்வரிக்காக வெட்டப்பட்ட வேள்விக்கடாய்கள் என்ற அளவில் கருதி அமுக்கப்பட்டுவிட்டன. மிகவும் கவனமாக இச்செய்தி தவிர்க்கப்பட்டிருக்கின்றது. அலட்சியப்படுத்தப்பட்டிருக்கிற து. கள்ளர் கடப்புலிகள் காவாலிகள் படிப்பறிவில்லாததுகள் கொலைக்கு அஞ்சாச் சாதி என அவமானங்களையும் அவதூறுகளையும் சுமந்து திரிகின்ற கன்பொல்லை மக்களின் தலைகள் வெள்ளாளப் புலிகளாலும் வெள்ளாள ஈபிடிபியினராலும் வெட்டப்பட்டு ஆரியகுளச்சந்திலிலும் உப்பு வெளியிலும் வீசப்பட்டிருக்கின்றன. இது தாழ்த்தப்பட்ட மக்களை குறியீட்டு முறையில் எச்சரித்துக் காட்டப்பட்டிருக்கின்றது.

மிகக்கவனமாக ஆதிக்க சாதிகளால் தவிர்க்கப்பட்ட கன்பொல்லை கிராமத்துக் கதை புகலிட ஊடகங்கள் ஒன்றில் கூடவரவில்லை. மாற்றுக் கருத்துக்கும் புதிய தேடல்களுக்கும் மதிப்பளிக்கும் இணையத் தளங்கள் ஒன்றில் கூட காணக் கிடைக்கவில்லை. மொட்டைக் கடிதங்களினதும் பின்னுட்டங்களினதும் கருத்துச்சுதந்திரத்தினதும் ஒற்றைக் குறியீடான தேசம் நெற்றிலோ சரி, தலித்துக்களின் போராட்டங்களையும் உணர்வுகளையும் கடனாகவும் மொத்தக் குத்தகைக்கும் எடுத்துக் கொண்டுள்ள சத்தியக்கடதாசியிலும் சரி, புலிகளுக்கு எதிரான அரசியலைக் கொண்ட ஆனந்த சங்கரி என்ற ஆதிக்கசாதி வெள்ளாரை குருவாக வரிந்து கட்டிக்கொண்டுள்ள தேனீ இணையத்தளத்திலும் சரி, மாக்சினதும் மாவோவினதும் நேரடித் தூதர்களாலும் தலித்துக்காரர்களை மாக்சிசத்தின் பரமவைரிகள் என ஒப்பாரி வைப்பவர்களால் நடத்தப்படும் இனியொரு, தமிழரங்கம் போன்ற இணையத்தளங்களிலும் சரி ஒரு துண்டுச் செய்திகூட வரவேயில்லை. ஆக இவர்களுக்கு அம்மாவாணை கடவுளாணை சத்தியமாகவே தெரியவரவில்லை, செய்திகள் கிடைக்கவில்லை என்றே நம்புவோம். புலி EPDP துரோகம் தமிழ்தேசியம் என்ற பெருமதில்களையும் வடிகட்டும் பன்னாடைகளையும் தாண்டி துணுக்கு செய்திகளும் கிசு கிசு செய்திகளும் கிடைக்கும் இணையத்தள ஊடகங்களுக்கு கன்பொல்லை படுகொலை செய்திகள் எப்படி தெரியவராமலே போயின??? அவை காற்றிலும் கள்ளிலும் கரைந்துபோயின என்றும் நம்புவோம். இங்கேதான் தமிழ்தேசியம் ஏன் மாற்றுக்கருத்து என்ற புலுடாவைக்காட்டிலும் சாதிவெறி பச்சை மிளகாய் மாதிரி உறைக்கின்றது, இங்கேதான் ஆதிக்கசாதிகள் தங்களுக்குள் உள்ள முரண்பாடுகளை தூக்கி ஒருபக்கத்தில் வைத்துவிட்டு தங்களுக்குள் மானசீகமாக கைகோர்த்துக் கொள்கிறார்கள் என்ற பரம இரகசியம் உடைபடுகின்றது. வேள்விக்கடாக்களாகவும் பலிக்கிடாய்களாகவும் கன்பொல்லை மக்களும் தலித்துக்களும் தமிழ்தேசியத்துக்கும், டக்ளசுக்கும், ஆதிக்க சாதி மாற்றுக்கருத்தாளர்களுக்கும் நேர்ந்து விடப்பட்டுள்ளார்கள்.

கன்பொல்லை மக்கள் உயிருடனும் மரணத்தின் பின்னும் அவதூறுகளையும் அவமானங்களையும் சுமந்து திரின்றனர். ஆதிக்கசாதி ஊடங்கள் இதை ஒரு செய்தியாகக் கூட கண்டுகொள்ளவேயில்லை என்பது தமிழ்த்தேசியத்தினதும் மாற்றுக்கருத்து அரசியலையும் சாதிவாரியாக பிரித்து போட்டுக்கொண்டே இருக்கிறது. எப்படியென்றால் பறை சஞ்சிகை ஆசிரியர் சரவணனின் கன்னத்தில் அறையப்பட்ட "Glass and Class" குறியீடுபோல.●



# புது உலகம் - பசுபதி

யாழ்ப்பாணக் கவிஞர் என்று ~ புரட்சி
யாப்புக்குள் கவிசெய்த தோழா!
வாழ்க்கைக்கு முற்றிட்டுச் சென்றாய் ~ நீ
வைத்திங்கு சென்றகவி வாழும்!

~ சுபத்திரன் ~

-கரவைதாசன் டென்மார்க்-

05.07.2008 இன்று கவிஞரும், சமூகப்போராளியும், கம்யூனிஸவாதியுமான புதுஉலகம் - யாழ்ப்பாணக்கவிராயர் கவிஞர் க.பசுபதி அவர்களின் நாற்பத்தி மூன்றாவது ஆண்டு நினைவுநாள். 14.7.1925ல் பிறந்த கவிஞர் 05.7.1965ல் இறப்பெய்தினார். யாழ்ப்பாண நிலவுடைமைச் சமூக அமைப்பில் சாதி, மதம், குடும்பம், சுரண்டல், கூடவே தீண்டாமை என அனைத்து வடிவங்களிலும் மைய மனிதர்களால் விளிம்புநிலை மனிதர்கள் அடக்கி ஒடுக்கப்பட்டபோது அச்சமூகத்தில் அசைவியகத்தினை ஏற்படுத்திய கருத்துப் பொறிகளில் மார்க்சிய வழியில் 1950ம் ஆண்டுகாலப்பகுதிகளில் தோன்றிய போராளிகள் வரிசையில் கவிஞர் நினைவு கொள்ளத்தக்கவர்.

"புது உலகம்" யாழ்ப்பாணக் கவிராயர் என அடையாளம் கொள்ளப்பட்ட கவிஞர் க.பசுபதி அவர்களின் ஆவணப்படுத்தப்பட்ட ஒரே ஒரு கவிதைத்தொகுப்பு நூல் ஆகும். 1965-இல் முதலாவது பதிப்பும், 2000ம் ஆண்டில் இரண்டாவது பதிப்பும், இலங்கை தேசிய கலை இலக்கியப் பேரவையும், சென்னை சவுத் விசன் நிறுவனமும் இணைந்து இந்த செயற்கரிய காரியத்தினை செய்துள்ளன. கவிஞர் அவர்களால் எழுதப்பட்டு மேடைகளில் வாசிக்கப்பட்டும் பத்திரிகைகளில் பதிவுசெய்யப்பட்டதுமான பல நூற்றுக்கணக்கான கவிதைகளில் தொலைந்ததுபோக எஞ்சிய கவிதைகளில் புது உலகம் என்ற தலைப்பின் கீழ் ஏழு கவிதைகளும், தொளிலாளர் என்ற தலைப்பின் கீழ் பத்துக் கவிதைகளும், தாழ்த்தப்பட்டோர் என்ற தலைப்பின் கீழ் ஆறு கவிதைகளும், இயற்கை என்ற தலைப்பின் கீழ் பதினொரு கவிதைகளும், பல்சுவை என்ற தலைப்பின் கீழ் எட்டுக் கவிதைகளும் மொத்தம் நாற்பத்திரண்டு கவிதைகள் தொகுக்கப்பட்டுள்ளன. அட்டைப்படத்துடன் சேர்த்தால் மொத்தம் நூற்றி ஐந்து பக்கங்களைக் கொண்டுள்ளது இந்நூல். இக்கவிதைகளை சேகரித்து நூலுருவில் ஒழுங்குபடுத்தி உதவியவர் எழுத்தாளர், ஆசிரியர் என்.கே.இரகுநாதன் அவர்கள் என தொகுப்பின் முன்னுரையில் காணக்கிடக்கின்றது.

உண்மையில் என்னால் எழுதப்படுவது "புது உலகம்" கவிதை நூலுக்கான விமர்சனமல்ல. குளத்து நீரினிலே மழைத்துளிகள் வீழ்வதனால் அவை கரைந்து போவதில்லை, மாறாக குளத்து நீரின் மட்டம் உயர்ந்து கொள்ளும். இவற்றை விளங்கிக்கொள்ள முடியா மூடர்களாய் சிலர், ஒரு நாட்டின் அல்லது ஒரு பிரதேசத்தின் சரித்திரத்தில் தம்மால் ஜீரணிக்க முடியாத பகுதிகளை மூடிமறைத்து விட்டால் புதிய சரித்திரம் படைத்துவிடலாம் என்று எண்ணுவது மூடத்தனமாகும். ஈழத்து, குறிப்பாக யாழ்ப்பாணத்து நிலவுடைமைச் சமூக அமைப்பில் நிகழ்ந்த கொடுமைகளை, நிகழத்துடித்து உறங்கும் கொடுமைகளை எடுத்துக் கூறினால்த்தான் எதிர்கால தமிழ் சமூகத்தில் இக் கொடுமைகள் இடம்பெறாது பார்த்துக்கொள்ளலாம், என்ற புத்தி சுவாதினத்தில் எழுபவை இவ்வகை எழுத்துக்கள். சென்ற இதழில் அகில இலங்கை சிறுபான்மை தமிழர் மகாசபையைச் சேர்ந்த அமரர் சின்னத்தம்பி செல்லையா அவர்களை நினைவு கூர்ந்து ஓர் நினைவுக் கட்டுரை எழுதியிருந்தேன். அதன் தொடர்ச்சியாக அவரை ஒத்த தோழர்களை நினைவு கொள்வதன் அவசியத்தை

வலியுறுத்தி தோழமையுடன் நண்பர்களும் வாசகர்களும் கேட்டுக்கொண்டார்கள். பல ஆயிரம் வருடங்களாக தீண்டாமையின் பெயராலும் சாதியத்தின் பெயராலும் அடக்கி ஒடுக்கப்பட்டபோது கிளர்ந்தெழுந்த போராட்டக் குணம்மிக்க பலரின் வரலாறு அவ் விளிம்புநிலைக் குழுக்களின் எழுத்து வாசிப்பு அன்று மறுக்கப்பட்ட நிலையில் வரலாற்றில் பதிவுசெய்யப்படாமலே மறைந்துவிட்டன. இதற்கு நல்ல உதாரணம் தென்இலங்கையில் இடம் பெற்ற பல தலித்தியப் போராட்டங்கள் இன்றுவரை பதிவில்லாமலே செவிவழிச் செய்திகளாக இருக்கின்றன. இந்தப் பிரக்ஞையின் தொடர்ச்சியே இவ்வகை எழுத்துக்கள், அன்றி வேறொன்றுமல்ல.

"வர்க்க பேதத்தினால் ஏற்றத் தாழ்வுற்று ஒரு சிலருக்கு எல்லாவற்றையும் மிகப் பலருக்கு இல்லாமையையும் திணித்து கிடந்த சமூக அமைப்பில் ஏற்றத்தாழ்வற்ற வர்க்க பேதமற்ற புதிய உலகை தோற்றுவிக்க வேண்டும் என்ற இலட்சிய வேட்கையினால் உந்தப்பட்டு ஐம்பதுகளில் மக்கள் இலக்கியம் படைக்க முனைந்த பலரில் முதன்மைக் கவிஞனாகத் திகழ்ந்தவர் யாழ்ப்பாணக் கவிராயர் க.பசுபதி அவர்கள்" என எழுத்தாளர் எஸ். அகஸ்தியர் அவர்கள் கூற என் காதாரக் கேட்டிருக்கிறேன். கார்க்கி நம்பிய தத்துவத்தின் வாரிசுகளாய் இவர்களும் இன்னும் பலரும் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்திலும், சிங்கள தோழமை எழுத்தாளர்களைக் கொண்ட மக்கள் எழுத்தாளர் முன்னணியிலும் இருந்தார்கள். இலங்கைத்தீவில் ஜனநாயகத்திற்கான போராட்டம் மேலும் சூல் கொண்டு வளரும் பொழுதும் மக்கள் வரலாறுகள் பதிவிடும் வேலைகள் தொடர்ந்து நடைபெற்று வளரும்பொழுதும், இவர்களின் வாரிசுகளாய் இன்னும் பலர் வருவார்கள் இருப்பார்கள்......

யாழ்ப்பாணக் கவிராயர் என அடையாளம் கொள்ளப்பட்ட கவிஞர் க.பசுபதி அவர்கள் ஈழத்து பருத்தித்துறையிலுள்ள வராத்துப்பளை என்னும் ஒடுக்கப்பட்ட மக்கள் வாழும் சுமார் இருபது மனைகளைக் கொண்ட சிறிய கிராமத்தில் கந்தையா அன்னம் தம்பதிகளுக்கு மகனாக பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியினை சந்தாதோட்டம் புலோலி கிழக்கு கற்கோவளம் தமிழ்க்கலவன் பாடசாலையில் தொடங்கிய இவர், தொடர்ந்து ஈ.வே.ரா.பெரியார் அவர்களின் பகுத்தறிவுக் கொள்கையினை ஈழத்திலே முதல்முதலாகப் பரப்பி வந்த பேராசான் கந்தமுருகேசனாரிடம் தமிழறிவினையும் பகுத்தறிவுக் கொள்கையினையும் கற்றுக்கொண்டார். சமகாலத்தில் லண்டன் கேம்பிறிட்ஜில் பல மாக்சியவாதிகளோடு கல்வி கற்றுத் திரும்பிய மதிப்பிற்குரிய திரு சிவபாதசுந்தரம் யாழ்ப்பாணம் பரமேஸ்வராக் கல்லூரியில் அதிபர் பொறுப்பில் இருந்தபோது பரமேஸ்வராக் கல்லூரியில் முதலில் சேர்த்துக் கொள்ளப்பட்ட தாழ்த்தப்பட்ட சமூகத்தினைச் சேர்ந்த மாணவன் பிரபல எழுத்தாளர் எஸ். பொன்னுத்துரை (எஸ்.போ) அவர்கள். இரண்டாவது தாழ்த்தப்பட்ட சமூகத்தினைச் சேர்ந்த மாணவன் எழுத்தளர் என். கே. இரகுநாதன் அவர்கள். அதன் தொடர்ச்சியாக இடைநிலைக்கல்வியினை கவிஞர் பசுபதி அவர்களும் அங்கே கற்றார். அதன் பின் யாழ்ப்பாணம் நல்லூர் ஆசிரிய கலாசாலையில் ஆசிரியப் பயிற்சி பெற்று பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியத் தகைமையையும் கவிஞர் அவர்கள் அடைந்தார்.

கவிஞர் அவர்கள் தொழில்ரீதியாக முதலில் இரத்மலானையிலும் பின்னர் கைதடியிலுள்ள செவிப்புலன் கட்புலனற்றோர்க்கான கல்வி நிலையங்களில் ஆசிரியராக பணிபுரிந்தார்.

தனது கிராமத்தினைச் சேர்ந்த பாய்க்கியம் என்னும் பெண்ணைத் துணைவியாகக் கொண்டு மூன்று ஆண் குழந்தைகளையும் இரண்டு பெண் குழந்தைகளையும் தம் காதலின் பேறாகப் பெற்று மகன் அசோகன் (எம்.பி.பி.எஸ்) மருத்துவர், பெண் பிள்ளைகள் பட்டதாரி ஆசிரியைகளாகவும் உருவாக்கியுள்ளார்கள்.

கல்விகற்கச் சென்ற காலங்களிலே பின் வாங்கில்களிலோ அல்லது தரையிலோ இருந்து கல்வி கற்க வேண்டிய பாரபட்சமான சூழல். பாடசாலைக் காலம் முழுவதும் சாதிக்கொடுமையை எதிர்நோக்க வேண்டி வந்தமையால் சாதிவெறியை எதிர்த்த போராட்ட உணர்வும் சமூகசேவையில் நாட்டமும் சிறு வயதிருந்தே இவரிடம் காணப்பட்டது.


விளிம்புநிலை மக்களின் சமூகமேம்பாட்டிற்காக யாழ்ப்பாணம் பகுதியில் எம்.சி.சுப்பிரமணியம், கணபதி இராசையா, ஆழ்வார் சிவகுரு(மாணிக்கம்) ஆகியோர் இணைந்து ஆரியர் குளத்தடியில் சன்மார்க்க ஐக்கிய வாலிபர் சங்கம் ஒன்றினை தொடங்கியபோது அவர்களுடன் இணைந்து செயற்பட்டார். இவற்றின் தொடர்ச்சியாக பருத்தித்துறை சந்தாதோட்டத்தில் நல்வழி ஐக்கிய சேவா சங்கம் ஒன்றினை என். கே. இரகுநாதன் ஆசிரியர் அவர்களுடன் சேர்ந்து தொடங்கி இயங்கினார். இவை தவிர யாழ்ப்பாணம் தி.மு.கவின் ஆரம்பகால உறுப்பினராகவும் இணைந்து அவர்களுடனும் செயற்பட்டுள்ளார். இதன் தொடர்ச்சியாக தன்னோடொத்த இளைஞர்களுடன் சேர்ந்து கவிஞரின் சொந்த ஊரான வராத்துப்பளையில் திராவிடர் கலைமன்றம் என்ற பெயரில் வாசிகசாலை ஒன்றை நிறுவி இயங்கி வந்தார்கள். இப்படியாக ஒவ்வொரு கிராமங்களிலும் உதிரியாக அமைந்த நிறுவனங்கள்தான் பின்னாளில் எம்.சி. சுப்பிரமணியம் அவர்கள் அகில இலங்கை சிறுபான்மை தமிழர் மகாசபை என்னும் பெயரில் வீறு கொண்டெழுந்த ஸ்தாபனத்தினை உருவாக்க பலமாக அமைந்தது. எம்.சி.சுப்பிரமணியம் அவர்கள் அகில இலங்கை சிறுபான்மை தமிழர் மகாசபையின் தலைவராக இருந்து செயற்பட்டபோது கவிஞர் பசுபதி அவர்கள் (1956-இருந்து 1963-வரை) இணைச் செயலாளராகவும், நிர்வாகச் செயலாளராகவும் இருந்து பணிபுரிந்தார். இக்காலகட்டத்தில் ஒடுக்கப்பட்ட தமிழ் மக்கள் அனுபவித்து வரும் இன்னல்கள், அந்த விளிம்புநிலை மனிதர்களுடைய பிரச்சினைகள் எதிர்காலத் திட்டங்கள் குறித்து வளர்ச்சி பூர்வமாக விளக்கி 1959ம் ஆண்டு ஆகஸ்ட் 30-ந் திகதி வெளியிடப்பட்ட "மகாசபை மலர்" எனும் கணக்கெடுப்பு ஏட்டிற்கு பொறுப்பாசிரியராக

இருந்து பணி செய்தார்.

இவ் அசைவியக்கங்களுக் கெல்லாம் யாழ்ப்பாணம் கரையூரில்(குருநகர்) திரு யோவேல் போல் அவர்கள் 1925-ல் தொடங்கப்பட்ட "ஒடுக்கப்பட்டோர் சங்கம்" ஒரு உந்துசக்தியாக இருந்தது.

கவிஞர் பசுபதி அவர்கள் இருபது வயதினையுடைய இளைஞராக இருக்கும் காலத்தில் 1945ம் ஆண்டளவில் தோழர் மு.கார்த்திகேசன் அவர்கள் தனது பட்டப்படிப்பை முடித்துக் கொண்டு யாழ்ப்பாணத்திற்கு வடபுலத்து கொம்யூனிச இயக்கத்தின் தலைமைப் பொறுப்பை பொறுப்பேற்று வந்து சேர்ந்தார். அப்போது எம்.ஏ.காதர், அ.வைத்திலிங்கம், பொன்.கந்தையா, நா.சண்முகதாசன், எஸ்.இராமசாமிஐயர், எம்.சி.சுப்பிரமணியம், ஆர்.ஆர்.பூபாலசிங்கம், க.மகாலிங்கம் ஆகியோர் முனைப்புடன் கொம்யூனிச கட்சியில் இணைந்து செயற்பட்டுக் கொண்டிருந்தனர்.

உழைக்கும் மக்களின் ஒற்றுமைக்கு முன் நிபந்தனையாக சாதியொழிப்பையும் தீண்டாமையொழிப்பையும் மேற்கொள்ள வேண்டும். இலங்கைத்தீவுனிலே சோசலிசப் புரட்சி ஏற்பட வேண்டுமெனில், முதலில் சாதி ஒழிக்கப்பட வேண்டும். ஏனெனில் புரட்சி இரண்டு கட்டங்களைக் கொண்டது. சாதி ஒழிப்பு என்ற ஜனநாயகப் போராட்டம் முதற்கட்டம், சோசலிசத்திற்கான போராட்டம் இரண்டாவது கட்டம் என வடபுலத்து கொம்யூனிசக் கட்சி பரிந்துரை செய்தது.



இப்பரிந்துரையால் ஆதர்சிக்கப்பட்டு தன்னையும் கம்யூனிசக் கட்சியில் இணைத்துக் கொண்டு ஒவ்வொரு பொதுமேடைகளிலும் கட்சியின் கருத்துக்கு தனது கவிதை வரிகளினால் கவிஞர் அவர்கள் வலுச்சேர்த்து வந்தார். இக்காலகட்டத்தில்த்தான் 1940களில் மலேசியவிடுதலைக்காக போராடிய மலேய தேசிய விடுதலை இராணுவத்தின் முன்னணிக் கெரில்லாப் படைப்பிரிவின் தளபதியாக முன் நின்று போராடி இரண்டாம் உலகப்போரின்போது பர்மா ஊடாக இந்தியாவுக்கு தப்பி வந்து இந்தியாவில் பிரிட்டிஸ் இராணுவத்தால் கைது செய்யப்பட்டு பீற்றர் கெனமன், கொல்வின் ஆர்.டி. சில்வா, என்.எம்.பெரேரா ஆகியோருடன் சிறையிலிருந்து பின் இலங்கை வந்து கட்சியின் பிரச்சாரங்களில் முனைப்போடு ஈடுபட்ட மலேசிய கனகசிங்கம் (அண்மைக்காலங்களில் தான் நான் அறிந்து கொண்டேன். மலேசிய கனகசிங்கம் அவர்கள், உயிர் நிழல் சஞ்சிகையின் ஆசிரியர் கலைச்செல்வன் அவர்களின் தந்தையார் என்பதை) தலைமறைவாகவே இலங்கை வந்திருந்த இந்திய கம்யூனிசத் தலைவர் ப. ஜீவானந்தம் ஆகியோர் தலைமறைவில் வாழ்ந்தாலும், மேடைகளில் திடீர்திடீரெனத் தோன்றி முழக்கமிட, கவிஞர் பசுபதி அவர்கள் தன் வீறு குன்றாத பாரம்பரியக் கவிதை வார்ப்பால் ஜனநாயக உரிமைகளுக்கான போராட்டங்களை வலியுறுத்தி மேடைதோறும் கவிதை படிப்பார். அதுவன்றி ப.ஜீவானந்தம், கனகசிங்கம் போன்ற தோழர்களை கன்பொல்லை போன்ற சிறிய கிராமங்களுக்கு சயிக்கிளில் அழைத்து வந்து கட்சி வகுப்புக்களை நடத்த என்.கே.இரகுநாதன் மாஸ்டர், கவிஞர் பசுபதி, கிளாக்கர் செல்லத்தம்பி போன்றவர்கள் ஒத்துழைப்பாக இருந்தார்கள் என என் தந்தையார் மு.தவராசா (தவம்) எனது பெரிய தகப்பனார் அதிபர் க.இராசரத்தினம் ஆகியோரிடமிருந்து அறிந்து கொண்டேன். அப்போது ஆண்டார்வளவு வெட்டையில் கனுவில் சனசமூக நிலையம் என்ற பெயரில் கன்பொல்லைக் கிராமத்திற்கான வாசிகசாலை இருந்து இயங்கியதாகவும் அறிந்துகொண்டேன்.

ப.ஜீவானந்தம் அவர்கள் இலங்கையில் தலைமறைவாக இருந்த வேளை கவிஞரின் கவிதை வரிகளினால் ஆதர்சிக்கப்பட்டு இந்தியப் பத்திரிகைகளிலும், சரஸ்வதி போன்ற சஞ்சிகைகளிலும் யாழ்ப்பாணக் கவிராயரின் கவிதைகளை எடுத்துச் சென்று பிரசுரித்தார்.

வல்வெட்டித்துறை நகரசபையில் இடதுசாரிக்கட்சியினைச்சேர்ந்த தோழர் திருப்பதி அவர்கள் நகரசபைத் தலைவராக இருந்தபோது தலைவர் ப.ஜீவானந்தம் அவர்கள் பவித்திரமாக கடல்மார்க்கமாக திரும்பவும் இந்தியாவிற்கு அனுப்பி வைக்கப்பட்டார் என்பது வரலாறு. அவரது பயண முன்னேற்பாடுகளைச் செய்த தோழர்கள் மு.கார்த்திகேசன், பொன் கந்தையா, டாக்டர் சு.வே.சீனிவாசன், எம்.சி.சுப்பிரமணியம் ஆகியோருடன் அந்நாளிலில் இளம் கவிஞனாகவிருந்த க.பசுபதி அவர்களும் இருந்தார்.

சங்கானையில் நிச்சாமம் கிராமத்து தாழ்த்தப்பட்ட மக்கள் தீண்டாமைக் கெதிராக போராட்டத்தினை நடாத்திக் கொண்டிருந்த வேளை, சிங்களத்தோழர் சரத்முத்தெட்டுவ கம அவர்களது ஊரிலிருந்து பருத்தித்துறைக்கு வந்திருந்த தோழர்களை கவிஞரின் சொந்த வீட்டினிலேயே தங்க வைத்து அவர்களால் தயாரிக்கப்பட்ட நாட்டு வெடிகுண்டையும், கன்பொல்லை கிராமத்து தோழர்களால் பால்ரின் பேணிக்குள் அடைத்து தயாரிக்கப்பட்ட வெடிகுண்டையும் போலிஸ் கெடுபிடியிலிருந்து தப்பித்துக்கொள்ள இலங்கைப் போக்குவரத்துச்சபை பஸ் வண்டியிலே கொண்டு சென்று சங்கானையில் சேர்த்ததாகவும் இதன் பின்னணியில் கவிஞர் அவர்களும்,

கன்பொல்லையைச் சேர்ந்த மு.தவராசா(தவம்) அவர்களும், வராத்துப்பளையைச் சேர்ந்த மு.சி.கந்தசாமி அவர்களும் இருந்து செயற்பட்டதாக டென்மார்க்கில் வாழ்ந்து கொண்டிருக்கும் நிச்சாமம் கிராமத்தினை சேர்ந்த விக்கி அவர்கள் மூலமாக அறிந்து கொண்டேன். தோழர் விக்கி அவர்கள் அந்நாட்களின் தீண்டாமைக்கெதிரான போராளி என்பது குறிப்பிடத்தக்கது.

தொடர்ச்சியான போராட்டத்தினிடையே இளம்வயதினிலேயே கவிஞர் அவர்கள் புற்று நோயினால் பாதிக்கப்பட்டார். இவரது இறுதித் தருணத்திலே இவருடன் கூட இருந்த தோழர் கே.டானியலைப்பார்த்து “டானி, என்ர பாட்டுக்களைப் புத்தகமாக போட முடியாமல்ப் போச்சு நீயும், ரகுநாதனுமாகச் சேர்ந்து யோசிச்சு சொஞ்சப் பாட்டுக்களையாவது போடப் பாருங்கோ இதனாலை வாற க்'டத்தைப் பற்றி எனக்குத் தெரியும் இப்ப பிரயோசனப்படாட்டாலும் பின்னடிக்கு-எங்கட அதிகாரம் வாற காலத்திலையாவது எல்லாருக்கும் அது பிரயோசனப்படும். இது எனக்கு நல்லாத் தெரியும்.” என மரணம் தன்னை நெருங்கி வருவதை அறிபூர்வமாக அறிந்து கொண்ட இறுதித் தருணத்திலும் “நாளை நமதே” என்ற நம்பிக்கையினை கோடான கோடி தோழர்களிடையே விதைத்துவிட்டுச் சென்றுள்ளார்.

# வையகம் பணிந்தது

புதியதோர் உலகம் காணப்
புறப்படு புரட்சி நோக்கி!
நிதியினால் தம்மை ஆட்டி
நெடுந்துயர் தந்த பேர்தம்
சதியினால் வீழ்ந்து நிற்பர்,
சாவினைத் தேடித் தத்தம்
விதியினால் வந்த தென்று
விரைந்த நாம் வெற்றி என்றார்!
இனத்தினால் மதத்தி னாலே
இரண்டுபட் டென்றும் வாழோம்!
சனத்தினால் நாங்கள் ஒன்று
சச்சர விதனால் ஏனோ?
தனத்தினால் வேறு காணும்
தரித்திரம் ஒழிந்து போக
மனத்தினால் மகிழ்ச்சி பூக்கும்
மணங்கமழ் வாழ்வு என்றார்!
போலிகள் பதுக்கந் தேட,
பொய்யவிழ் சூதர் தங்கைக்
கூலிகள் குழம்பித் தம்முள்
குந்தகம் விளைக்கத் தூய
பாலியர் மகிழ்ச்சி பொங்க

பாவையர் உணர்ச்சி ஊட்ட
வாலிபப் படைக ளெல்லாம்
வளைந்தது களத்து மேட்டில்
செங்கொடி கையில் ஏந்தி
செம்படை விரைதல் கண்டு
எங்கணும் முரசம் ஆர்க்க
எழுந்தது புரட்சி இன்றே!
கங்குலில் கரந்தி ருந்த
கவினுறு உலகம் மீட்க
பொங்கின உணர்ச்சி வெள்ளம்!
பொதுமையில் புதுமை காண.

போர்த் தொழில் விந்தை யாவும்
புரிந்திட வந்து சேர்ந்தார்!
ஆர்த்தனர் அகம கிழ்ந்து
அணிநடை பயின்ற போதே
பார்த்தவர் பார்த்த காலை
படைகளே அவரும் ஆனார்.
வார்த்தடந் தோளர் நம்முன்
வையகம் பணிந்த தம்மா!

யாழ்ப்பாணக் கவிராயர் (க.பசுபதி)

# மின்னல்கள் கூத்தாடும் மழைக்காலம்

றஞ்சினி பிராங்போர்ட்

எதிர்பாராத நிமிடத்தில் மரங்களை உலுப்பி அங்குமிங்குமாக ஆவேசத்தில் கூத்தாடுகிறது காற்று, கதிரவன் கலவரத்தில் ஒளிந்து கொள்ள கருமுகில்கூடி மாநாடு போடுகிறது, முழங்கிய முழக்கத்தின் கோபத்தில் மின்னல் ஏளனமாக சிரித்துச் செல்கிறது. இரைச்சலுடன் வந்திறங்கும் மழையுடன் காற்று கலக்க நினைக்கையில் அங்குமிங்குமாக அலைகிறது மழை. காற்றின் தாகமடங்க மழை விடாத ஆவேசத்தில் பொழிந்து கொண்டிருக்கிறது.

இயற்கை நடத்திக் கொண்டிருக்கும் களியாட்டத்தில் எனைமறந்த நான் வீட்டு ஜன்னல்கள் அடித்து மூடியதில் விழித்துக் கொண்டேன். ஜன்னல் கதவுகளை பூட்டிவிட்டு இருள் சூழ்ந்த மதியப்பொழுதில் தேநீருடன் புத்தகத்தை எடுத்துக்கொண்டு பால்கனிக்குப் போகும் நீண்ட கண்ணாடிக் கதவருகே தரையில் போர்வையுடன் உட்காருகிறேன். தனிமையின் சுகமும் ஏதோ ஒருவித தவிப்புமாக எனது கனவு நீழ.. கண்ணாடி ஜன்னலூடாக என் கண்கள் பதிகிறது. மழை ஆவேசமாக யாருடனோ கோபித்துக் கொள்கிறது. என் கண்களுடன் இல்லை என்பது மட்டும் தெரியும், சிறுவயதிலிருந்தே மழையின்மேல் அலாதிக் காதல் எனக்கு.

அன்று மழை பெய்தவுடனே பேப்பரைக் கிழித்து கப்பல்செய்து அது ஓடும் அழகை ரசிப்பதிலும் அல்லது எதாவது கையில் கிடைப்பதை வழிந்தோடும் மழைநீரோடு ஓட விட்டு ரசிப்பதிலும் ஒரு தனி இன்பம். மழையில் நனைவதிலிருந்து மழையில் குளிப்பதுவரை மிகவும் பிடித்தது.

இன்று இங்கு ஜன்னலருகிலிருந்து மழையை ரசிக்கும்போது பல அடிமனதில் உறைந்துவிட்ட நினைவுகள். நான் ரசித்த அந்த மழைக் காதலனைத்தான் என் அம்மாவும் ரசித்தாள். நகரத்தில் இருந்து அந்த காடுகள் சூழ்ந்த வன்னி வீட்டிற்கு வந்தபோது அவளுக்கும் ஆரம்பம் ஒரு பயங்கரம் நிறைந்த புதிராக இருந்ததாம். இருளும்போது அந்தக் காடுகள் அந்த வீட்டைச் சுற்றி பெரியகரடிகள் இருப்பதுபோல் தோன்றுமாம். (அவள் அங்கு சென்றபோது அருகில் அதிக மக்கள் இருந்ததில்லை என்பாள். அந்த வீட்டிலிருந்து கொஞ்சத் தூரம் சென்றால் சிறிய நகரம். அங்குதான் மனிதர்கள் நிறைய இருந்தார்கள். அங்குதான் பெரியபாடசாலைகள் ஆஸ்பத்திரியிலிருந்து எல்லாமே இருந்தது.)

தூக்கமில்லாது கழித்த இரவுகளும் நாடு சுற்றும் வாலிபனாக இருந்த அப்பாவின் துணையில்லாத பொழுதுகளும் அம்மாவுக்கு இருளுடனும் அந்த ஊருடனும் ஒரு நட்பான ஒப்பந்தத்தை உருவாக்கியிருக்க வேண்டும். அவளின் தனிமையுடன் பறவைகளும் விலங்குகளும் அவளுக்கு நண்பர்களாகிப் போயின. அந்த ஊர் அவள் சுதந்திரமாக நடமாடும் அளவுக்கு உறவாகி அவளுக்குள் இருந்த இயற்கையின் நேசிப்பினால் எல்லா விதமான மரங்களும் பழங்களும் பல வண்ணப் பறவைகள் என்று அந்த வன்னி வீடு அழகிய சோலையாக மாறியது. எங்கிருந்தெல்லாம் அம்மாவைத்தேடி மக்கள் வருவார்கள். அவரின் ஆலோசனைகள் ஆறுதல்களும் உதவியும் அவர்களுக்குத் தேவையாக இருந்தது.

இப்படித்தான் என் அம்மா தன் வாழ்க்கையை வன்னியுடன் அர்ப்பணித்துக் கொண்டாள். எப்போதாவது தோன்றும் அப்பாவை ஒரு விருப்பமில்லாத கடுமையான வாத்தியாரைப் போலவே நோக்கவேண்டியிருந்தது. அவருக்கும் எமக்கும் ஒரு நல்ல உறவு இருந்ததில்லை. அப்பாவுக்கும் அம்மாவிற்கும் ஏற்படும் முரண்பாடுகள் அவளுக்கும் எமக்கும் சந்தோசத்தை தந்தவைகள் இல்லை. ஆனாலும் அப்பாமீது அம்மா கொண்டிருந்த ஒருவிதக் காதலும் மதிப்பும் பாசமும் என்னால் இன்றுவரை புரிந்துகொள்ளமுடியாதது. இதுதான் எமது எல்லா அம்மாக்களினதும் குணமாகவும் இருந்தது, இருக்கிறது என நினைக்கிறேன். எனக்கும் அப்பாமீது ஒரு அன்பு இல்லாமலும் இல்லைதான்.

பேதங்கள் ஏதுமில்லாத மனிதநேயத்தை நான் அவளிடம்தான் கற்றுக் கொண்டேன். அவளிடமிருந்து



தோல்விகளையும் துன்பங்களையும் எதிர்கொண்டு வாழும் திடமான மனதை இன்றுவரை என்னால் அவளிடமிருந்து கற்கவும் முடியவில்லைத்தான். அவளை நினைக்கும்போது பெருமையாக கண்கள் பனிக்கும். அவளிடம் நிறைய கதைகள் இருந்தன. சொல்வதற்கென்று தனது சிறுவயது ஆசைகள், தான் படிக்கவேண்டுமென்று இருந்தும் தன் திருமணம் ஒரு விபத்தாக முடிந்ததுபற்றி, தன் சகோதரர்களைப் பற்றி, அவளின் சிறுவயதில் தாயை இழந்து தனது அம்மம்மாவுடன் வாழ்ந்தது பற்றி இப்படி பல. நான் சிறுபெண்கனவுடன் இருந்ததால் அன்று அவளின் கதைகளைக் கேட்கும் நிலையில் இருந்ததில்லை.

5 வருடங்களுக்குமுன் அவளைப் போய்ப்பார்த்தபோது பிள்ளைகளைப் பிரிந்தசோகம் அவளை வாட்டியிருந்தது. அப்போதும் அவளிடம் நிறைய கதைகள் இருந்தன. ஆவலுடன் என்னிடம் பகிர்ந்துகொண்டாள். அன்று நான் அவளிடம் அறியாத விடயங்கள் இன்று என் மனப்பக்குவத்தால் ஆறுதலாக புரிந்துகொள்ள முடிந்தது. அது அவளுக்கும் எனக்கும் ஒரு ஆறுதலைத் தந்தது.

படிப்புக்காக அவளைப் பிரிந்து வெளியூர் போனது, அதன்பின் அவளை முழுதாகப் பிரிந்து புகலிடம் வந்தது எல்லாமே மின்னல்வேகத்தில் நடந்த அதிசயமான உண்மைகள். வன்னி வீட்டில் மழைவந்தால் செம்மண் வாசனையும் அடர்ந்த மரங்களில் விழுந்து வழியும் மழையின் சத்தமும் பார்த்துக் கொண்டிருக்க அழகாகவும் சந்தோசமாகவும் இருக்கும். எமது வீட்டின் பின்புற நான்கு சதுர முற்றத்தில் வந்து வழியும் மழைநீர் அருவிபோல் இருக்கும். அதில் குளிப்பதே ஒரு புத்துணர்ச்சியானது. எல்லாமே நெஞ்சில் வலிக்கும் நினைவுகளின் தருணங்கள். இந்தச் சூழலில் அந்த நினைவுகள் வதைநிறைந்த சுகந்தருபவை.

தொடர நினைக்கையில் தொலைபேசி அழைப்பு குலைத்துப் போகிறது. பெரிய பெருமூச்சொன்று என்னிடமிருந்து விடைபெற கண்கலங்க போர்வைக்குள் தஞ்சமாகிறேன். மீண்டும் ஜன்னலுக்குத் திரும்புகையில் காற்று சிறிது அமைதியாகி மழை ஒரே கோட்டில் நேராக பெய்ய போராடிக் கொண்டிருந்தது. எனது ரசனைகளை ஆராதிக்கும் அந்த காதலன் அருகிருந்தால்...
உண்மையில் மழையா அல்லது உள்ளுக்குள் மழையா? அவனது கேள்வி.

அவன் ஆசையுடன் எனை அணைத்து என் கவலைகளையும் கற்பனைகளையும் தனதாக்கி என் வலிகளை வருடிக்கொடுத்தான்.

"உண்மையில் மழைதான்" இது எனது பதில்.

அவனின் வார்த்தைகள் என் வலிகளுக்கு இதமாக இருந்தது. போர்வைக்குள் பெருகிய வியர்வை எமைக் கரைக்க... நிமிடங்களும் அவனும் மறைந்து நான் சுயத்தை அடைந்தபோது இயற்கை ஒரு சமாதான ஒப்பந்தத்தில் கைசாத்திட்டிருந்தது. சூரியன் கலவரம் நீங்கி மெதுவாக வெளிக்கிறான். அறையில் மெல்லியதாக இசைத்துக் கொண்டிருந்த "கண்ணீரே... சந்தோஷக்கண்ணீரே... பெண்ணே பெண்ணே வாராய் பெண்ணே உன்னோடு நான் கண்ட பந்தம் மண்ணோடு மழைகொண்ட சொந்தம்..." இந்தப் பாடல் வரிகள் மழையில் துள்ளி எழுவதுபோல் வரும் அப்பாடலின் தொடக்க இசை எல்லாமே இந்த சூழலிற்கேற்ப எனக்காகவே இசைத்ததுபோல் மனம் சிலிர்த்தது.




# குழந்தைப் போராளி

## நூல் அறிமுகம்




**இன்று உலகம் முழுவதும் மூன்று இலட்சத்துக்கும் அதிகமான குழந்தைப் போராளிகள் யுத்த முனைகளில் தள்ளப்பட்டும், பாலியல் வதைகளுக்கு உள்ளாக்கப்பட்டும், இயல்பான குழந்தைத் தனங்கள் சிதைக்கப்பட்டும், ஏன்?, எதற்கு?, யாருக்கு? என்று தெரியாமலேயே சாவின் வாசலில் நிறுத்தப் பட்டிருக்கிறார்கள். குழந்தைப் போராளிகளின் வரலாற்று மௌனத்தை இந்தத் தன்வரலாறு நூல் மூலம் சைனா கெய்ரெற்சி உடைத்தெறிகிறார். 2002-இல் டொச் மொழியில் வெளியிடப்பட்ட இந்நூல் தொடர்ந்து ஆங்கிலம், டெனிஸ், ஸ்பானிஸ், டச், செக், பிரெஞ்சு மொழிகளிலும் வெளியிடப்பட்டது.** Miramax Pictures **இந்நூலைத் திரைப்படமாகவும் தயாரித்து வருகிறது.**

நாங்கள் தலைவரின் பெயரால் அவரை மகிழ்ச்சிப் படுத்துவதற்காக வகை தொகையின்றி அட்டூழியங்களைச் செய்தோம். பதிலுக்கு அவர் எங்கள் மீதேறிச் சவாரி விட்டார். நாங்கள் தலைவரால் சாவதற்கென்றே வளர்க்கப்பட்டோம். நாங்கள் கற்பூரத்தால் வார்க்கப்பட்ட பறவைகள். எங்களைப்போன்ற சபிக்கப்பட்ட குழந்தைகளிடம் இயல்பான மனவளர்ச்சியை எதிர்பார்க்க முடியுமா?

வெளிப்பார்வைக்கு நாங்கள் குழந்தைகள். ஆனால் எங்களின் மறுபக்கமோ முற்றிலும் வேறுபட்டது. எந்த மானுட விழுமியங்களிற்குள்ளும் அடங்காத குழந்தைகள் நாங்கள். எப்போது எங்கு பற்றும்? எந்தத் திசையில் திரும்பும்? எனக் கணிக்க முடியாத காட்டுத்தீ போல நாங்கள் நெருப்பெடுத்து நின்றோம். எங்களிடம் மிக அடிப்படை உணர்வுகளான பசி, தாகம், குளிர், வெப்பம் ஆகியவற்றைத் தவிர மற்றெல்லா உணர்வுகளும் மரத்துப் போயிருந்தன. நாங்கள் இயந்திரங்களைப் போலத் தலைமையின் கட்டளைகளைக் கேள்விகளேயில்லாது நிறைவேற்றிக் கொண்டிருந்தோம். சிந்தனைகள் மழுங்கடிக்கப்பட்ட மரத்துப்போன நிலையிலிருந்து நாங்கள் இம்மியளவேனும் விடுபடுவதாகத் தளபதி கருதுவாரானால் நாங்கள் உடனடியாகப் போர்முனைக்குச் சாவதற்காக அனுப்பப்படுவோம். ஏனெனில் நாங்களில்லாவிட்டால் தளபதியின் தவறுகளுக்கும் குற்றங்களுக்கும் சாட்சிகளும் இல்லை.


எங்களிற் பலர் இப்படிப் போர்முனைகளுக்கு அனுப்பப்பட்டு அழிந்து போனார்கள். எங்களது தலைவருக்கும் தளபதிகளுக்கும் அடிமட்டப் போராளிகளைப் பற்றி உண்மையிலேயே அக்கறையுண்டா? அல்லது நாங்கள் எக்கேடு கெட்டுப்போனாலும் இவர்களுக்குக் கவலையில்லையா? என்ற கேள்விக்கான பதிலை நான் தேடிக்கொண்டேயிருந்தேன். தலைமைப் பொறுப்புகளிலிருந்தவர்களில் ஏறத்தாழ எல்லோருமே அதீத சுயநலப் பிராணிகளாகயிருந்தனர். தங்களுடைய தனிப்பட்ட நலன்களைத் தவிர வேறொன்றைப் பற்றியும் அவர்களுக்கு அக்கறையில்லை. நாட்டின் அதிகார மையத்தை விரைந்து கைப்பற்றிக் கொள்வதும், அதன் மூலம் கொழுத்த பணக்காரர்களாகி விடுவதுமே அவர்களின் ஒரே கொள்கையாயிருந்தது. அவர்களின் மீது அசைக்க முடியாத விசுவாசத்தைக் கொண்டிருந்த போராளி குழந்தைகளுக்கு அவர்களது இதயத்தில் எந்த இடமுமில்லை. எங்களின் மேதகு தலைவர் யோவேரி முசேவெனியின் இதயத்தில் கூட எங்களுக்கிடமில்லை. எந்தச் சர்வாதிகாரிக்கு எதிராகப் போரிட்டாரோ, அந்தச் சர்வாதிகாரியைக் காட்டிலும் ஆயிரம் மடங்கு சர்வாதிகாரியாக எதிர்காலத்தில் யோவேரி முசேவெனி மாறுவார் என்பதை அன்று நான் கற்பனை கூடச் செய்து பார்த்ததில்லை.


(குழந்தைப்போராளி புத்தகத்திலிருந்து)


குழந்தைப் போராளி: சைனா கெய்ரெற்சி
தமிழில்: தேவா
பதிப்பாசிரியர்: ஷோபாசக்தி
வெளியீடு: கருப்புப் பிரதிகள்,
பி-74, பப்பு மஸ்தான் தர்கா,
லாயிட்ஸ் சாலை, சென்னை-5.
தொடர்புக்கு: (0091) 944 42 72 500
karuppu2004@rediffmail.com

# தேன் தமிழோசை - ஒலசுண்ட்

## Radio Tamil - Ålesund




# தேன் தமிழோசை - பேர்கன்

## Radio Tamil - Bergen

GÅ IKKE GLIPP AV DE FERSKE NYHETENE FRA DITT DISTRIKT.

Bli fast leser!

• Bestill abonnement!
Tlf. 70 12 00 00

• Send SMS med kodeord AVIS til 901 20 901 eller bestill på smp.no

Sunnmørsposten




# உயிர்மெய்

தொடர்புகளுக்கு: Kaptein Lingesvei 9A, 6006 Aalesund, Norway E-post: editor.uyirmei@hotmail.com